# திருக்குறள் கதைகள்
# பொருட்பால்
# 781 – 830

## தமிழறிஞர்
## கே.வி.குணசேகரம்

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | திருக்குறள் கதைகள் (781 – 830) |
| நூலாசிரியர் | :- | தமிழறிஞர் கே.வி.குணசேகரம் |
| பதிப்பாண்டு | :- | 2010 |
| மொத்தப் பக்கங்கள் | :- | |
| விநியோகம் | :- | லங்கா புத்தகசாலை<br>கு.டு 1.14, டயஸ் பிளேஸ்<br>குணசிங்கபுர,<br>கொழும்பு – 12 |
| தொ.பேசி | :- | 011-2341942 |
| விலை | :- | |

# என்னுரை

திருக்குறள் கதைகள் பொருட்பால் 781 - 830 வரையான 50 குறள்களுக்கான கதைகள் இந்நூலில் உள்ளன. இது வரை 930 குறள்களுக்கான கதைகள் வெளிவந்துவிட்டன. 1330 குறள்களுக்கும் இதுவரை யாரும் தொடர்கதை எழுதவில்லை. ஒரு நாவலாக இதை நான் எழுதிய போதும் தனித்தனியாகவும் வாசிக்கலாம். ஒவ்வொரு குறளுக்கும் பொருள், விளக்கம், கதை எழுதியுள்ளேன். இப்படியும் இதுவரை யாரும் எழுதவில்லை. குறளுக்கு உரையே எழுதியுள்ளனர். நான் குறளுக்குக் கதை எழுதியதால் குறளை யாபேரும் விளங்கிக் கொண்டனர்.

எழுத வாசிக்கத் தெரிந்த ஒருவர் குறளின் அர்த்தத்தையும் கருத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தே கதைகளாக எழுதினேன். எனது எண்ணம் பெருவெற்றி பெற்றது. தரம் ஐந்தில் கற்கும் பத்து வயது மாணவி எனது குறள் கதைகளை வாசித்துவிட்டு வகுப்பில் தன்னுடன் படிக்கும் மாணவர்களுக்கு அக்கதையை விளக்கமாகக் கூறியதை நான் நேரில் கண்டேன். இது எனக்குக் கிடைத்த வெற்றி மட்டுமல்ல குறளுக்குக் கிடைத்த வெற்றியுமாகும். குறளை மனனம் செய்வதாலோ, அதன் கருத்தைக் கூறுவதாலோ பயனில்லை. அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளல் வேண்டும். அந்தப் புரிந்துணர்வை எனது குறள் கதைகள் நிறைவேற்றியுள்ளன.

இந்த வகையில் இந்து தத்துவ நூல்கள் பலவற்றைக் கதைகளாக்கி வருகிறேன். அவற்றைச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விருப்புடன் வாசித்து வருகிறார்கள். இந்த வகையில் திருவருட்பயனையும், சிவஞானபோதத்தையும் தற்பொழுது கதைகளாக எழுதியுள்ளேன். இக்கதைகள் இந்து தத்தவத்தை மக்களுக்குப் புரிய வைக்கும் என்று நினைக்கிறேன். நான் படிக்கும் போது என்னால் புரிந்துகொள்ள முடியாதவற்றை இந்து தத்துவ நூல்களைத் திரும்பத்திரும்பப் படித்துப் புரிந்து கொண்டேன். அவற்றை இந்துக்கள் எல்லோரும் புரிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். இக்கதைகளிலுள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையேயாகும். யாரையும் குறிப்பிடுவனவல்ல.

நான் எழுதும் நூல்களில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்கிச் சீர்செய்து தரும் ஓய்வுபெற்ற அதிபர்களான திரு வா. ஜெயரட்ணம், திரு. தி.கிருஷ்ணகுமார் அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளை நீக்கித் தருவதோடு, தகுந்த ஆலோசனைகளை வழங்கி என்னை உற்சாகப்படுத்தும் ஆசிரியை செல்வி ப.இறைமகளுக்கும், எனது கதைகளை அழகாக கணனி மயப்படுத்தித்தரும் செல்வி. க.தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் கொழும்பு 12இல் அமைந்துள்ள லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்

**கே. வி. குணசேகரம்**

ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்,

கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம். கோப்பாய் மத்தி, கோப்பாய்.

# அணிந்துரை

"மேதினிக்குச் செழுமை தரும் மெய்க்கலைஞன் வாழியவே"

கட்டுரையும் கதைகளையும் கட்டுக்கட்டாய்
கற்பனையில் சுவைபடவே ஆக்கித்தந்தே
மட்டற்ற எழுச்சிதனை வாசகர்காய்
மாண்புறவே செய்தசீமான் கேவிகு
பட்டறிவும் வாசிப்பும் கிளர்ந்த சிந்தைப்
பக்குவத்தைச் சுவைபடவே ஊற்றும்பாங்கில்
கொட்டியதால் திருக்குற ளாத்திசூடி
வேதங்கள் ஆகமங்கள் பகவத்கீதை
மட்டில்லா வுபநிடதம் திருமந்திரத்தின்
உட்பொருளைக் கதையாக்கி உவக்கத்தந்தார்
தொட்டவையின் சுவைமணக்க மணிமேகலையும்
லங்கா அச்சகமும், குமரன் புத்தக வில்லமும் சேர்ந்து
கட்டில்லாக் கதைகளையே வாசகர்க்காய்
கனிந்துபல தேசமெங்கும் வைத்ததையா
நட்டுவிட்ட நாற்றின்மட்டம் பெருகுதல் போல்
நலம்தரவே தொடராக இவரின்கதைக்காய்
தட்டிநின்றார் பணி தொடர்ந்தார்
இன்பத்தை அள்ளிவைத்தா ரிந்துப் பாங்கில்

தத்துவத்தைக் கதையாக்கிச் சுவைத்துவாழ்வில்
தனித்துவத்தை நிலையாக்கும் மாண்பில்விஞ்சி
வித்துவத்தை விளைபொருளாய் விளக்கியிங்கே
விந்தைநிகர் விளக்கங்கள் பலவும் தந்தார்
நித்தமிவர் மொழிநடையில் எளிமையுண்டு
நீளிதிகாச புராணப் பொலிவு முண்டு
சித்தமுடன் நல்லவற்றை இயம்பும் பண்பு
சுத்தமுற மற்றவரின் மனதில்பதித்து
சுகம்பெறவே சுவைத்தொளிர ஈர்க்கும்பாங்கு

வித்தகன்தான் தமிழறிஞன் விதானம்பெற்றான்
விளைகல்விக் கோட்டத்தில் பணிப்பாளனாகி
முத்தமிட்டார் கல்விதனை முகிழ்க்கவென்றே
மும்மூரமாய்க் கலைவளர்க்கப் பணிகளாற்றி
அர்த்தமுடன் ஆதரவும் அன்புப்பிணைப்பும்
அகம்மலர முகப்பொலிவும் நரைமுடியும்
மொத்தமதில் செம்மையாளன் எழுத்தால்மக்கள்
நலிவுகளைக் கொய்துநலம் சிறக்கவைப்பார்.

தெய்வதரிசனங்கள் தோற்றங்கள் மறைபொருட்கள்
தேர்ந்துநோற்கும் நோன்புக்கள் பலாபலன்கள்
உய்யத்தம்வாழ்வின் நம்பிக்கை யொளிக்கீற்று
உறைமனித ஆரோக்கிய உன்னதத்தின் வழிமுறைகள்
கைமருந்து மனத்தூய்மை கணம் தோறுமதுதேவை.
கருத்தோடு தத்துவத்தின் தெளிபொருளினுள்ளே
மெய்யுணர்வு ஊட்டிடவே புறச்சமயவாதமிட்டு
மேதினிக்குச் செழுமைதரும் மெய்க்கலைஞன் வாழியவே.

நல்லூர்க்கோட்ட அதிபர்கள்

பாடலாக்கம்

வே. ஞானகாந்தன்
அதிபர்,
யா.்.  இந்து ஆரம்பபாடசாலை, யாழ்ப்பாணம்.

## எதுவும் இல்லை

அன்று கணநாதன் பரமேஸ்வரனின் வீட்டுக்கு வெகுநாட்களில் பின் வந்திருந்தார். அந்த ஊரில் உள்ள தொழிற்சாலையை விதுஷனிடம் ஒப்படைத்த பின்பு அவர் கொழும்பில் உள்ள தொழிற்சாலைகளை நிர்வகித்து வந்தார். அடிக்கடி கணக்குப் பரிசோதனைக் குழு கணக்காளர் நிர்மலன் தலைமையில் அத்தொழிற்சாலைக்கு வந்து கணக்கு வழக்குகளைச் சரி பார்த்துச் செல்லும் முறையைக் கணநாதன் ஏற்படுத்தி யிருந்தார். அத்துடன் பரமேஸ்வரனது நடவடிக்கைகள் கணநாதனுக்கப் பிடிப்பதில்லை. அவர் தான் குத்தகையாக வாங்கும் பணத்தை அதிகரிப்பதற்காக ஆடிய நாடகத்திற்குப் பின்பு பரமேஸ்வரன் அவரது உறவைத் துண்டிக்கவே விரும்பினார். அத்துடன் பரமேஸ்வரனது தொழிற்சாலையை பரமேஸ்வரனிடம் ஒப்படைக்கவும் விரும்பினார். தனது தொழிற்சாலையால் அதிக வருமானம் பெறும் கணநாதன் தனது கோரிக்கையை ஏற்றுத்தான் கேட்டளவு பணத்தைத் தருவாரென பரமேஸ்வரன் எண்ணினார். ஆனால் கணநாதன் தான் தொழிற்சாலையை ஒப்படைக்கப் போவதாகக் கூறியதும் திகைத்துப் போனார். பின் கஜேந்திரன் தலையிட்டு அபிரச்சினையைத் தீர்ந்து வைத்தான். எனினும் கணநாதனுக்குப் பரமேஸ்வரன் மீது பூரண நம்பிக்கை வரவில்லை. அதனால் அவர் பரமேஸ்வரனது வீட்டுக்கு வருவதை நிறுத்தி விட்டார். சில நாட்கள் பழகினாலும் தணிகாசலத்தின் மீதிருந்த நட்பை அவரால் மறக்க முடியவில்லை.

ஊரில் உள்ள தொழிற்சாலையைப் பார்க்க வந்தால் தணிகாசலத்தின் வீட்டில்தான் தங்க வேண்டும். தொழிற்சாலையில் அல்லது தணியார் விடுதிகளில் தங்கினால் அது தணிகாசலத்தின் மீது கொண்ட நட்புக்குப் பங்கமாகும். தணிகாசலம் பரமேஸ்வரனின் வீட்டில் குடும்பத்தினருடன் தங்கியிருப்பதால் கணநாதனுக்கு அங்கு வரவிருப்பமில்லா திருந்தது.

“மாமாவை ஐந்தாறு மாதங்களாகக் காணக்கிடைக்கவில்லை” என்று கேட்டான் வத்சல்யன்.

“தொழிற்சாலையில் திருத்த வேலைகள் செய்தமையால் வரமுடியாமற் போய் விட்டது” என்று சிரித்தார் கணநாதன்.

“அப்பாவுடன் நாற்பது ஐம்பது வருடங்களாகப் பழகும் உங்களுக்கு அப்பாவின் குணங்கள் தெரியும் தானே...” என்று சிரித்தான் வத்சல்யன்.

“அவருடன் நான் கோபம் என்று உனக்கு யார் சொன்னது...? உங்கள் தொழிற்சாலையில் தான் சில திருத்த வேலைகள் செய்தேன். நீ சொன்னதைப் போல அவருடன் கோபித்திருந்தால் பிரச்சினையான நேரங்களில் கூட வந்திருக்க மாட்டேன்” என்றார் கணநாதன்.

“சரி மாமா, நான் போயிட்டு வாறன். எனக்கு வகுப்பிருக்கு” என்று கூறிவிட்டுச் சென்றான் வத்சல்யன்.

அவன் சென்றதும் பரமேஸ்வரன் வந்து அவருக்கு அருகில் அமர்ந்தார். கணநாதன் எதுவும் பேசவில்லை. அவராகப் பேசட்டும் என்று காத்திருந்தார்.

“என் மீது கொண்ட கோபங் காரணமாகத் தான் நீ இங்கு பல நாட்களாக வரவில்லை. இப்பொழுதும் தணிகாசலத்தின் வேண்டுகோளுக்காகத்தான் வந்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். நான் உன் மீது உண்மையான நட்பு வைத்திருந்த படியால் தான் சில சமயங்களில் நீ கோபப்படும்படியாக நடந்து கொள்கிறேன்” என்றார் பரமேஸ்வரன்.

கணநாதன் சிரித்தார்; “நீ, உன்னைப் பற்றி எனக்குச் சொல்கிறாயா..? சிறுவயது முதல் உன்னுடன் பழகியதால் தான் உனது நட்பை நான் தொடர்கிறேன்” என்றார்.

“சில சமயங்களில் எனது சுபாவத்தை என்னால் மாற்றிக் கொள்ள முடியாதுள்ளது. அதனால் தான் நான் கெட்டழிந்தேன். நான் அந்த நேரம்உ ன்னைக் கேவலமாகப் பேசிய போதும், நீ என்னை மதித்து நடந்தாய். “நட்பைப்போலத் தொடர்பு கொள்வதற்குப் பெருமையானது வேறெதுவும் இல்லை. அதே போலத் தொழிலுக்குச் சிறந்த பாதுகாப்பாய் இருப்பதும் நட்புத்தான்.” என்று

நீ எனக்கு அடிக்கடி சொல்வாய். நான் அதைப் புரிந்து கொள்ளாமையால் தான் துன்பப்பட்டேன்” என்று கலங்கினார் பரமேஸ்வரன்.

அதைக் கேட்டுக் கலங்கினார் கணநாதன்; “நீ, உன்னுடைய பிடிவாதக் குணத்தால் என்னை அலட்சியம் செய்த போதும், உன்மீது கொண்ட நட்பின் காரணமாக நான் அதைப் பெரிதாக எண்ணுவதில்லை. இங்கு நான் வராமைக்கு உன் மீதுள்ள வெறுப்புக் காரணமென்று நீ நினைக்கிறாயா….? அப்படியில்லை. நீ மோசமாகத் துன்பப்பட்ட வேளையில் என்னை அவமதித்த போதும் நான் உன்மீதுள்ள நட்பைத் துண்டிக்கவில்லை. இப்போது துண்டிப்பேனா…?” என்று கேட்டார்.

பரமேஸ்வரன் அதைக் கேட்டுக் கலங்கினார். அவரைப் பார்க்க கணநாதனுக்குக் கவலையாக இருந்தது.

**781. செயற்குஅரிய யாவுள நட்பின்? அதுபோல் வினைக்கு அரிய யாவுள காப்பு?**

நட்பைப் போலச் செய்து கொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன.? அது போலத் தொழிலுக்குத் தக்க பாதுகாப்பாக இருப்பவை வேறு எவை?

**பிறை**

காலை உணவை உண்டு விட்டுக் கணநாதன் தணிகாசலத்துடன் தனது மோட்டார்

வண்டியில் புறப்பட்டார். புறப்படுமுன் கணநாதன் பரமேஸ்வரனிடம் வந்து சொன்னார்; “நகரில் உள்ள ஒருவரைப் பார்க்க வேண்டியுள்ளது. நான் தணிகாசலத்துடன் சென்று வருகிறேன்.” என்று கூறி விட்டு மெல்ல நகர்ந்தார். சில சமயம் அவர் தானும் கூட வருவதற்காகச் சொன்னால் அது பிரச்சினை என்று கணநாதன் நினைத்தார்.

தணிகாசலமும் கணநாதனும் மோட்டார் வண்டியில் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தனர். அப்பொழுது பகல் பத்து மணி. பத்து மணிக்குத் தினமும் மகா கணபதிக்குப் பூசை நடைபெறுவது வழக்கம். அப்பூசைக்கு மக்கள் வருவது மிகமிகக் குறைவு. ஆறுமாதங்களுக்கு முன்பு ஒரு நாள் சுவாமியாரிடம் தேவை கருதி வந்த கணநாதன் பத்து மணிப்பூசையைக் கண்டு களித்தார். அன்று அப்பூசையைக் காணக்கிடைத்தமையையிட்டு மகிழ்ந்தவாறு கால் முகங்கழுவி விட்டு கோயிலுக்குள்ச் சென்றார். கணநாதன் பத்து மணிப்பூசையின் போது அர்ச்சனை செய்வதற்காகப் பழம் தேங்காய் வெற்றிலை பாக்கு கற்பூரம் யாவும் கொண்டு வந்திருந்தார்.

குருக்கள் மிகவும் அலங்காரமாகப் பூசை செய்தார். பூசை முடிந்த பின்பு அர்ச்சனை செய்தார். பின் பிரசாதம் கொண்டு வந்து கொடுத்தார்.

“நான் பல கோயில்களுக்குச் சென்றுள்ளேன். ஆனால் இங்கு வரும்போது உள்ள நிம்மதியும் மன மகிழ்ச்சியும் வேறு எங்கும்

கிடைப்பதில்லை. அத்துடன் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி நான் நினைப்பவை எல்லாவற்றையும் பூர்த்தி செய்து விடுவார். நான் மூன்று மாத காலமாக இங்கு வரவில்லை. பரமேஸ்வரன் அன்று கதைத்தவை எனக்குப் பிடிக்கவில்லை. நான் பரமேஸ்வரனை உயிருக்கு உயிரான நண்பனாகக் கருதுகிறேன். ஆனால் அவர் என்னை அப்படி நினைப்பதில்லை" கணநாதன் பேசும் போது குறுக்கிட்டார் தணிகாசலம்; "நான் கூறுவதைப் பற்றிக் குறை நினைக்கக்கூடாது. பரமேஸ்வரன் மிகவும் நல்லவர். சில சமயங்களில் ஆராயாமல் கதைத்து விடுவார். அதுதான் அவரில் உள்ள மிகப் பெரிய பலவீனம். ஆனால் நட்பைப் பாதுகாப்பவர். நீங்கள் சென்ற பின் அவர் உங்களுடன் தான் நடந்து கொண்ட விதம் பற்றிக் கவலைப்பட்டபடி இருந்தார். அதனால் தான் உங்களை இங்கு வரும்படி நான் வற்புறுத்தினேன். அறிவுடையவருடைய நட்பு வளர்பிறை போன்றது. அறிவில்லாதவர்களின் நட்பு தேய்பிறை போன்றதென்று பெரிய வர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். அவரும்நீங்களும் கொண்ட நட்பு வளர்பிறை போன்றது'' என்றார் தணிகாசலம்.

''உண்மைதான். நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியும் பரமேஸ்வரனுடன் நான் நட்புடன் இருப்பதையே விரும்புகிறார். அவர் அடிக்கடி எனது கனவில் தோன்றி ''வா வா வந்து பரமேஸ்வரனைச்சந்தி என்று கூறுவார்.'' என்றார் பரமேஸ்வரன்.

தணிகாசலம் சிரித்தார். பின்பு சொன்னார்; ''இதற்கும் மகாகணபதிக்கும் தொடர் பில்லை. உங்களது நட்பு ஆத்மாத்தமானது. அவர்

உங்களுடன் பிரச்சினைப்பட்டு விட்டேனே என்று தினமும் கவலைப்படுவார். நீங்கள் அவருடன் பிரச்சினைப்பட்டு விட்டேனே என்று கவலைப்பட்டிருப்பீர்கள். உங்கள் மனத்தாக்கம்தான் கனவுருவில் வந்த மகா கணபதி. நீங்கள் பரமேஸ்வரன் மீது உண்மையான நட்புக் கொண்டிருக்கா விட்டால் அவர் அமிர்தினியுடன் உறவாடிய காலங்களில் அவளது சொற் கேட்டு உங்களை அவர் கேவலப்படுத்திய போதெல்லாம் அதைப்பொருட்படுத்தாது சென்று புத்திமதிகளும் ஆலோசனைகளும் கூறியிருக்க மாட்டீர்கள். "என்னைக் கேவலமாகக் கருதும் பரமேஸ்வரன் கெட்டழிந்து போகட்டும்" என்று விட்டிருப்பீர்கள். என்ன நான் சொல்வது பிழையா...?" என்று கேட்டார் தணிகாசலம்.

கணநாதன் பூரண மகிழ்வுடன் சிரித்தார். அவரது முகமகிழ்வில் இருந்து அவர் பரமேஸ்வரன் மீது எவ்வளவு நட்பு வைத்திருக்கிறாரென்று தணிகாசலத்திற்குத் தெரிந்தது.

"நீங்கள் மிகவும் வல்லவர். படிக்காதவர் என்று கூறுவீர்கள். ஆனால் எல்லா விஷயங்களையும் அறிந்து வைத்திருக்கிறீர்கள். உங்களுடன் நான்தொடர்பு வைத்தது அண்மையில்தான். ஆனால் உங்களுடன் தான் என்னோடு பழகுபவர்கள் எல்லோரிலும் பார்க்க கூடுதலான நட்பு வைத்துள்ளேன்" என்றார் கணநாதன்.

அவர் சொன்னவற்றைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார் தணிகாசலம். "உங்களைப்

போன்றதொரு பெரிய மனிதரின் நட்புக் கிடைக்க நான் கொடுத்துவைத்திருத்தல் வேண்டும்'' என்றார் தணிகாசலம்

''நீங்கள் தான் பெரியவர். நான் தான் கொடுத்து வைத்தனான்.''

---

**782. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.**

---

அறிவுடையவர்களுடைய நட்பு வளர்பிறை போல வளரும் தன்மை உடையது. அறிவில்லாதவனின் நட்பு தேய்பிறையைப் போலத் தேய்ந்து பின் இல்லாமல் போகும் தன்மையை உடையது.

## பழகப்பழக இன்பம்

''பரமேஸ்வரனுடன் பிரச்சினைப் பட்டுக் கொண்டு நான் கொழும்பில் இருந்தாலும் மனம் வருந்திக் கொண்டு தான் இருந்தேன். பரமேஸ்வரன் அப்படி ஏன் நடந்து கொண்டாரென்று எனக்குப்புரியவில்லை. தனது தொழிற்சாலையின் குத்தகைப்பணத்தை அதிகரிக்க வேண்டுமென்று விரும்பினால் உயிருக்குயிராகப் பழகும் என்னிடம் நேரே கூற வேண்டியது தானே். அதைவிட்டு விட்டுக் குறுக்கு வழிகளை ஏன் பாவிப்பான்?. நண்பனுக்குக் கூற, ஒரு தரகன் வேண்டுமா...?'' கவலைப்பட்டார் கணநாதன்.

‘‘உயிருக்குயிரான நண்பர்களிடையே பிரச்சினைகள் வந்தால் அது கலகமாக மாறினாலும் பிரிவுக்கு வழி வகுக்காது. ஒரு மனிதன் கடந்த கால வாழ்க்கையின் தவறுகளை மீண்டும் செய்யக் கூடாது என்பதில் அவதானமாக இருத்தல் வேண்டும். அத்துடன் வாழ்க்கையின் குறிக்கோள்களையும் இலட்சியங்களையும் எந்நேரமும் நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும். இதை நீங்கள் மனதில் வைத்துக் கைக்கொள்ளு மளவிற்குப் பரமேஸ்வரன் மனதில் வைத்துக் கைக்கொள்வதில்லை. அதனால்தான் அவர் பிரச்சினைப்படுகிறார். நீங்கள் பிரச்சினைப்படாது மகிழ்வுடனும் நிம்மதியுடனும் இருக்கிறீர்கள்’’ என்றார்தணிகாசலம்.

கணநாதன் அவரை வியப்புடன் பார்த்தார். ஐம்பது வருடங்களாகப் பரமேஸ்வரனுடன் பழகியும் தான் புரிந்து கொள்ளாத பலவற்றைச் சில நாட்கள் பழகிய தணிகாசலம் புரிந்து வைத்திருப்பதை நினைக்க அவருக்கு ஆச்சரியமாக இருந்தது; ‘‘இங்குள்ளவர்கள் அனைவரும் அறிவாளிகள். தணிகாசலம், சுவாமியார், கஜேந்திரன் இப்படி நான் பழகிய அனைவரும் மிகுந்த அறிவாளிகளாக இருக்கிறார்கள்’’ என்று நினைத்தார் கணநாதன்.

‘‘நீங்கள் நல்லவர்; பண்பாளர்; நட்பை நேசிப்பவர். அதனால் தான் நான் உங்கள் மீது விருப்பங் கொண்டேன். நட்பு என்பது ஆத்மாவிலிருந்து உண்டாகுதல் வேண்டும். நல்லதொரு நண்பன் தனது நண்பனுக்குத் தீமை செய்ய மாட்டான். எப்போதும் நன்மைகளையே செய்து கொண்டிருப்பான். ஆனால் அவன், தான்

செய்யும் நன்மைகள் அனைத்தையும் உடனுக்குடன்மறந்து விடுவாவான். தப்பித்தவறி ஏதாவது தீமைகள் செய்தால் அதை மறக்காமல் எந்நேரமும் நினைவில் வைத்துக்கலங்கியபடி இருப்பான். நீங்கள் அத்தன்மையானவா். அதனால்தான் வந்ததும் என்னை இங்கு அழைத்து வந்து பரமேஸ்வரனுக்கு ஏதோ கெடுதல் செய்து விட்டதாக எண்ணி எனக்குச் சொல்லிக் கவலைப்படுகிறீர்கள். இதே நிலையில் தான் பரமேஸ்வரனும் இருக்கிறார். அவரும் என்னைக் காணும் போதெல்லாம் 'தான் தவறு செய்து விட்டேன்' என்று கூறிக் கொண்டிருப்பார். அதனால் சலிப்புற்ற நான் அவரைச் சந்திப்பதைத் தவிர்த்து வருகிறேன்'' என்றார் தணிகாசலம்.

''உண்மைதான். நான் இங்கிருந்து சென்ற பின்பு ஒரு கணங்கூட நிம்மதியாக இருக்கவில்லை. நான் குற்றம் செய்யாவிட்டாலும் குற்றஞ் செய்ததாக நினைத்துக் கவலைப்பட்டேன். என்னை நான் ஒரு போதும் உயர்ந்தவனாகக் கருதுவதில்லை. ஆனால்அன்று நான் சிறிதும் சிந்திக்காது பரமேஸ்வரன் மீது கோபப்பட்டு; ''நான் திறமை மிக்கவன், நீ திறமையில்லாதபடியால்தான் தொழிற்சாலையை என்னிடந் தந்தாய். நீ கெட்டிக்காரனானால் அதை நடத்திக்காட்டு'' என்று கூறிவிட்டேன். அதை நினைக்க இப்போதும் எனக்குக்கவலையாக உள்ளது'' கலங்கினார் கணநாதன்.

''நல்ல நூலின் நற்பொருளைக் கற்கக்கற்க மேலும் மேலும் இன்பமாக இருப்பதைப் போல, நற்குணங்கள் பலவும் உடையவரோடு பழகப்பழக

இன்பமாக இருக்கும்'' என்று பெரியவர்கள் கூறுவார்கள். அது எவ்வளவு உண்மை என்பதை உங்களுடன் பழகத் தொடங்கிய பின்பு நான் தெரிந்து கொண்டேன். மிகவும் நல்லவரான நீங்கள் தவறிக்கூடத் தீய வார்த்தைகளைப் பேச மாட்டீர்கள். அதனால் அமைதியாக இருங்கள். நாலைந்து தினங்கள் இங்கிருந்தால் எல்லாம் சரியாகி விடும்'' என்றார் தணிகாசலம்.

``உண்மைதான். உயிருக்குயிரான நண்பர்களிடம் பிரச்சினைப்பட்டால் நிம்மதியிராது. பிரச்சினைப்பட்டது நினைவில் இராது'' என்றார் கணநாதன்.

``அப்போ இனி வீட்டுக்குச்செல்லலாம் தானே'' என்றார் தணிகாசலம்.

``ஓம்'' என்று கூறிவிட்டு மோட்டார் வாகனத்தில் ஏறினார் கணநாதன்.

**783.நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு.**

நல்ல நூல்களின் உட்பொருள் கற்கக் கற்க மேலும் மேலும் இன்பம் தருவது போல, நல்ல அறிவுடையவர்களின் நட்பும் பழகப் பழக இன்பம் தரும்.

## கண்டிக்கவும்

தணிகாசலமும் கணநாதனும் மோட்டார் வண்டியால் இறங்கி வரும்போது பரமேஸ்வரன் தனது வீட்டு வாசலில் நின்ற வேப்பமரத்தின் கீழ் அமர்ந்திருந்தார். இருவரையும் கண்டதும் எழுந்து வந்தார்.

“நீங்கள் போகுமிடத்திற்கு என்னையும் அழைத்துச் சென்றிருக்கலாம். நான் இங்கு பொழுதைப் போக்க முடியாது சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன்.” என்றார் பரமேஸ்வரன்.

கணநாதன் சிரித்தார். பின்பு சொன்னார்; “உங்களை அழைத்துப் போக முடியாத இடம். இருவரும் மனம் விட்டுப் பேசவே சென்றோம். இப்பொழுது எல்லாம் சரியாக விட்டது. இனி உன்னோடு மனம் விட்டுப் பேசவுள்ளேன். தணிகாசலம் உள்ளே செல்லட்டும். நாமிருவரும் வேப்ப மரநிழலில் இருந்து பேசுவோம்” என்று சொல்லி விட்டுப் பரமேஸ்வரனது பதிலை எதிர்பாராது கணநாதன் வேப்பமரத்திற்கு கீழிருந்த நாற்காலியொன்றில் சென்றமர்ந்தார். தணிகாசலம் எதுவும் பேசாது வீட்டினுள் சென்றார். பரமேஸ்வரன் சென்று கணநாதனுக்கு அருகில் அமர்ந்து கொண்டார்.

இருவரும் சில நிமிடங்கள் பேசவில்லை. பின் கணநாதன் சொன்னார்; “நட்பு என்பது ஒருவருக்கொருவர் சிரித்து மகிழ்ந்து கூடித்திரியவும், கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவுந்தான்

ஏற்படுத்திக் கொண்டதென்று நான் கருதுவதில்லை.'' என்று கூறிவிட்டு நிறுத்தினார் கணநாதன்.

"நான் அப்படிக் கருதுகிறேன் என்று நீ நினைக்கிறாய் போல இருக்கிறது'' அவசரமாகச் சொன்னார் பரமேஸ்வரன்.

"அப்படி நான் கருதவில்லை. கருதவும் மாட்டன். உன்னுடன் எதையும் கதைக்க எனக்கு உரிமையுள்ளது. நண்பனொருவன் நிலை தவறிச் செல்லும் போது அவனது போக்குப் பிழையென்று எடுத்துக் கூறக்கூடியவன் தான் உண்மையான நண்பன். நீ முன்பு பெண்களுடன் முறை தவறிப் பழகும் போது அது பற்றிப் பேச எல்லோரும் தயங்கிய போது நான் உனக்கு இடித்துக் கூறினேன். அது உனக்குப் பிடிக்கவில்லை. அதனால் என்னை வெறுத்தாய். அப்படியிருந்தும் நான் உன்மீது கோபமோ வெறுப்போ கொள்ளாது மீண்டும் மீண்டும் இடித்துரைத்தேன். அப்பொழுதும் நீ கேட்கவில்லை. பின் அமிர்தினியால் நஷ்டப்பட்டாய்; அவமானப்பட்டாய்; பெருந்துன்பப்பட்டாய்; அதன்பின் திருந்தியதாகக் கூறி எம்மை நம்ப வைத்தாய். ஆனால் இப்பொழுதும் திருந்தவில்லை. அந்த விபச்சாரியின் தொடர்பு உனக்கு இப்போதும் உள்ளது'' நிறுத்தினார் கணநாதன்.

"உனக்கென்ன விசரா? நான் இங்கு வந்த பின்பு அவளுடன் தொடர்பு கொள்ளவில்லை. அவளாகத்தேடி வந்தாள். அவளோடு பேசக்கூட எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவள் சென்றுவிட்டாள்'' பரமேஸ்வரன் கூறிக்

கொண்டிருக்கும் போது கணநாதன் குறுக்கிட்டாா்; ‘‘திரும்பத்திரும்ப பொய் கூறுவதன் மூலம் ஆயிரமாயிரம் பொய்களைக் கூறிக் கொண்டிருக்கலாமே தவிர அதை உண்மையென நிரூபிக்க முடியாது. நான் கேட்கப்போகும் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல். இப்போதும் உனக்கு அமிா்தினியுடன் தொடா்புள்ளது உண்மையா…? பொய்யா…?’’ கேட்டு விட்டு நிறுத்தினாா் கணநாதன்.

‘‘நீ யாரோ சொல்வதைக் கேட்டு….’’ பரமேஸ்வரன் கூறிக்கொண்டிரக்கும் போது ஆத்திரத்துடன் குறுக்கிட்டாா் கணநாதன்; ‘‘நான் கேட்டதற்கு ஒரு சொல்லில் பதில் சொல்லு. உனக்கும் அவளுக்கும் இப்பொழுதும் தொடா்பு இருக்கு…? மறுப்பாயா…?’’ ஆத்திரத்துடன் கேட்டாா் கணநாதன்.

பரமேஸ்வரன் கணநாதனை நிமிா்ந்து பாா்த்தாா். அவரது கண்கள் கோபத்தால் சிவந்திருந்தன; ‘‘சொல்லடா…?’’ என்றாா்.

பரமேஸ்வரனுக்குக் கணநாதன் கோபங் கொண்டு வெருட்டுவதைப் போல இருந்தது. அதனால் எதுவும் பேசாமல் தலை குனிந்தாா்.

‘‘எவ்வளவுதான் பெரும் அறிவாளியாக இருந்தாலும் காமஉணா்வு அதிக முள்ளவன் உருப்படமாட்டான். மிருகங்களைப் போல நடந்து கொள்ள உனக்கு வெட்கமாக இல்லை. சென்ற வாரம் அமிா்தினிக்குப் பல இலட்ச ரூபா

அனுப்பியிருக்கிறாய். அதை இல்லையென்று சொல் பார்ப்போம்'' கொதித்தெழுந்தார் கணநாதன்.

''அவள் பெருந்துன்பப்படுவதாக அறிவித்தாள். தாங்க முடியவில்லை'' பரமேஸ்வரன் கூறிக் கொண்டிரக்கையில் கணநாதன் வெறுப்புடன் சொன்னார்; ''உலகில் உள்ள எழுபத்தைந்து சதவீதமானவர்கள் பல்வேறு வகையில் துன்பப்படுகிறார்கள். இவர்களுக்கெல்லாம் உன்னால் உதவ முடியுமா.....? பலருடன் தொடர்புள்ள ஒருத்தி உன்னிடம் நாடகமாடியதும் நீ பணம் அனுப்பி விட்டாய். அவளது நினைவு உனது இதயத்தில் இன்றும் உள்ளது. அதனால் நீ அழியப்போகிறாய். அதை என்னால் தாங்கிக் கொள்ள முடீயாது. நீ திருந்தியே ஆக வேண்டும்'' என்றார் கணநாதன்.

''என்னை அடிக்கும் உரிமையும் உனக்கு உண்டு. ஏனென்றால் நீ எனது உயிர் நண்பன். அவள் தொலைபேசியில் அழும்போது மனம் மாறிவிட்டேன். அதற்கர்த்தம் நான் அவளை இப்பொழுதும் விரும்புகிறேன் என்றல்ல. தயவு செய்து என்னைக் கோபிக்காதே'' கெஞ்சினார் பரமேஸ்வரன்.

''அவள் விபச்சாரி. இளமைக் காலத்திலும் பல ஆண்களுடன் தொடர்பு கொண்டவள். திருமணமான பின்பும் அதே குணம் இருக்கிறது. இப்போது அவள் இன்னொருவனுடன் உந்துருளியில் திரிகிறாள். அவளை நினைக்க அருவருப்பாக இருக்கு. அவளுக்கு நீ உதவி செய்ததை

நினைக்க எனக்கு வெட்கமாக இருக்கு'' கவலைப்பட்டார் கணநாதன்.

''இனிமேல் அவள் எதைச் சொன்னாலும் அவளுக்கு உதவ மாட்டேன்'' என்றார் பரமேஸ்வரன். அவரது குரல் கரகரத்தது. கண்கள் கலங்கின.

**784. நகுதல் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு.**

நட்புக் கொள்ளுதல் ஒருவரோடு ஒருவர் சிரித்துப் பழகுவதற்கு அல்ல; நண்பர்கள் ஒழுக்கம் தவறும் போது கண்டித்துப் புத்திமதி கூறித் திருத்துவதற்காகவே.

## உணர்ச்சியே போதும்

''பெண் ஒழுக்கமுள்ளவளாக வாழ வேண்டும். அதற்கு ஆண்கள் உதவ வேண்டும். அமிர்தினியின் விஷயத்தில் நான் உன்னைக் குற்றஞ் சொல்லமாட்டன். நீ ஒழுக்கமானவன்; நல்லவன்; ஆனால் அமிர்தினி ஒழுக்கமில்லாதவள். பணக்காரனான உன்னைத் தனது வலையில் விழுத்தித் தனது காரியங்களைப் பார்க்கவே விரும்பினாள். அதற்காக அவள் நல்லவள் போலவும், உனக்குப் பெரும் உதவி செய்பவள் போலவும் நடித்தாள். ஆனால் நீ அவள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக நினைத்தாய். ஆரம்பத்தில் நீ அவளிடம் பல பொறுப்புக்களைக் கொடுத்த போது அவளை உயர்ந்தவளாக எண்ணினாய். அவள் திட்டமிட்டு அர்ப்பணிப்புடன்

செயலாற்றுவதாக நடித்தாள். நானும் அந்த நடிப்பை முழுமையாக நம்பி, அவளைப் போன்றதொரு கெட்டிக்காரப்பெண் இல்லை என்று நினைத்துப் பலருக்கும் அவள் திறமைமிக்கவள் என்று சொன்னேன். நாம் இருவரும் அவள் மேலானவள்; திறமைசாலி; கடமையுணர்வுள்ளவள்; தனது வாழ்க்கையைத் தொழிற்சாலைக்காக அர்ப்பணித்துள்ளாள் என்று கூற மற்றவர்களும் அதை நம்பிவிட்டனர். அதனால் தான் அமிர்தினியின் விஷயத்தில் நீ குற்றவாளி இல்லை என்று கூறினேன். ஆனால் இப்போது அப்படியல்ல அவளது திருகுதாளங்கள் யாவும் வெளிப்பட்டு விட்டன. இனியும் நீ உதவினால் அது அவள் மீது இன்னும் நீ மோகங்கொண்டிருக்கிறாய் என்பதையே காட்டும். எனவே அவள்மீது கொண்ட மோகத்தை விட்டுவிடு. அவள் செய்த பாவங்களுக்கான தண்டனையை அனுபவிக்கட்டும். அதோடு முன்போல் அல்ல நீ. இப்போது மதிப்பு மிகுந்த ஒரு குடும்பத்தில் பெண் எடுத்திருக்கிறாய். மதிப்போடு வாழும் குடும்பத்திற்கு அபகீர்த்தியை நீ உண்டாக்கக்கூடாது. இப்பொழுது கொழும்பில் நீ பழையபடி அமிர்தனியுடன் தொடர்பை உண்டு பண்ணிவிட்டாய் என்றுதான் கதைக்கிறார்கள். நீ உதவி செய்வதாகச் சொன்னாலும் அதை யாரும் நம்ப மாட்டார்கள்.'' என்றார் கணநாதன்.

பரமேஸ்வரன் பெருமூச்சுவிட்டார். அவரால் எதையும் பேசமுடியவில்லை; ''பரமேஸ், தணிகாசலத்தைப் போல ஓர் உத்தமமான மனிதரை நான் எனது வாழ்நாளில் கண்டதில்லை. இங்கு உன்னைச் சந்திப்பதற்காக நான்குமுறை வந்துள்ளேன். அப்போதுதான் அவரை நான் சந்தித்தேன். வந்தபோது வேலைகளில் தான் எனது

நேரம் சென்றது. தணிகாசலத்துடன் நான் பெரிதாகக் கதைக்கக்கூட இல்லை. அப்படியிருந்தும் அவரின் மேல் எனக்கு நல்ல அபிப்பிராயம் உள்ளது. அவரோடு கதைக்கும் போது பல நாட்கள் பழகியதை போன்ற ஓர் உணர்வே எனக்கு ஏற்படுகிறது. அவருடன் கூட இருக்க வேண்டும் என்ற உணர்வு உண்டாகிறது. அப்படியான ஒரு நல்லவரின் குடும்பத்திற்கு மானக்கேடு ஏற்படக்கூடாது'' என்றார் கணநாதன்.

``உண்மைதான். நட்புக்கொள்வதற்கு நேரில் சந்திக்கவோ, பழகவோ வேண்டுமென் பதற்கில்லை. ஒரே தன்மையான உணர்வுகள் இருந்தால் நட்பு ஏற்படுமென்று பெரியவர்கள் கூறுவார்கள். எனக்கும் தணிகாசலத்தைத் தெரியாது. ஆனால் அவரோடு பழகிய பின்பு அவரை விட்டுப் பிரிய மனமில்லாமல் இருக்கிறது. அவர் யாரோடும் பழகுவார். எல்லோருடைய குணவியல்புகளையும் புரிந்து நடந்து கொள்ள அவரால் முடியும்'' என்றார் பரமேஸ்வரன்.

அப்போது காமாட்சியம்மாள் இருவருக்கும் குளிர்பானம் கொண்டு வந்து கொடுத்து விட்டுக் கேட்டாள்; ``பல நாட்களாக அண்ணாவை இந்தப் பக்கம் காணவில்லை. அத்துடன் இன்று ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள். இவர் ஏதாவது கூறினாரா…? இவரைப் பற்றி என்னிலும் பார்க்க உங்களுக்குத்தான் அதிகம் தெரியும். கடுங்கோபக்காரன். நாங்கள் இவருடன் படும்பாடு…'' என்றாள்.

காமாட்சியம்மாள் கணநாதனை நிமிர்ந்து பார்த்தாள். அவளது பார்வை; "பரமேஸவரனுடன் ஏதாவது பிரச்சினையா....?" என்று கேட்பதைப் போலிருந்தது.

"எனக்கும் காமாட்சிக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. அப்படிப் பிரச்சினைப் பட்டாலும் ஓரிரு மணித்தியாலங்களுக்குள் தீர்ந்துவிடும் என்பது உனக்குத் தெரியாதா...?" என்று கேட்டார் பரமேஸ்வரன்.

"அது தெரியும். ஆனால் அண்ணாவின் முகம் சரியில்லை. நீங்கள் ஏதோ சொல்லியிருப்பியள். இல்லாவிட்டால் ஏதாவது செய்திருப்பியள்" என்று கூறிவிட்டுச் சென்றாள் காமாட்சியம்மாள்.

"உன்னோடு முப்பது வருடங்கள் வாழும் உனது மனைவிக்கு உன்னைப் பற்றி எல்லாம் தெரியும். அது போல எனக்கும் எல்லாம் தெரியும்; தெரியவரும். இனிமேல் அவளுக்கு உதவினால் என்னால் உனக்குப் பெரும் பிரச்சினை வரும்" என்றார் கணநாதன்.

---

**785. புணர்ச்சி பழகுதல் வேண்டா ; உணர்ச்சிதான் நட்புஆம் கிழமை தரும்.**

---

நட்புக் கொள்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டிய தில்லை; ஒத்த தன்மையான பண்பே நட்பு ஏற்படுவதற்கான உரிமையைக் கொடுக்கும்.

## உயர்ந்த நட்பு

மாலை ஐந்து மணிக்குக் கஜேந்திரன் கணநாதனைத் தேடி வந்தான். அவன் வந்த போது வேப்பமர நிழலில் கணநாதனும் தணிகாசலமும் இருந்து கதைத்துக் கொண்டிருந்தனர்.

“கணநாதன் ஐயாவைக் காணாமல், கதைக்காமல் இருக்க இப்போது என்னால் முடிவதில்லை. மூன்று மாதங்களாக இங்கு நீங்கள் வரவில்லை. எம்மோடு ஏதாவது கோபமா..?” என்று கேட்டபடி வந்து அவர்களின் அருகில் அமர்ந்தான் கஜேந்திரன்.

கணநாதன் பெரியதாகச் சிரித்தார்; “நான் யாரோடும் கோபிப்பதில்லை. முன்பு பார்த்ததை விட நீ சற்று மெலிந்திருக்கிறாய். வேலை அதிகமா…? இல்லாவிட்டால்…” என்று கேட்டு விட்டுச் சிரித்தார் கணநாதன்.

கணநாதனின் கதை அவனைச் சற்று அச்சுறுத்தியது; “தணிகாசலம் வித்தியாவைத் துவிச்சக்கர வண்டியில் ஏற்றி வந்ததைச் சொல்லி விட்டாரா…?” என்ற அச்சத்துடன் தணிகாசலத்தைப் பார்த்தான்.

தணிகாசலம் மறுகரை திரும்பினார். அதுவும் அவனுக்குக் கலக்கத்தைக் கொடுத்தது. வித்தியாவைத் துவிச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்றதை தணிகாசலமும் விக்னேஸ்வரமூர்த்தியும்

கண்ட பின்பு இப்போது தான் அவரை நேரிற்கு நேர் அவன் சந்திக்கிறான்.

“என்ன குழம்பிவிட்டாயா…? நான் வேலை அதிகம் என்று சொன்னது பொது வேலைகளைப் பற்றியும் வீட்டுச் சமையலைப் பற்றியும்தான். எப்படி அம்மா சுகமாக இருக்கிறாவா….?” என்று கேட்டார் கணநாதன்.

கஜேந்திரனின் முகம் மாறுபடுவதைக் கணநாதன் கண்டு கொண்டார்; “தேவையில் லாமல் அவனது மனதை நோகப்பண்ணி விட்டேனா.?” என்ற எண்ணம் கணநாதனின் மனதை வாட்டியது.

“அங்குஷன் ஐயா வந்த பின்பு அம்மாவுக்குக் கொஞ்சம் சுகம். இருந்தாலும் சிரமப்படுகிறா….” கலங்கினான் கஜேந்திரன்.

“போனவாரம் அம்மா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகக் கேள்விப் பட்டனான். உனக்குத்துணை இல்லைத்தான். பொன்னுத்துரை மாமாவைக் கேட்கலாம் தானே. நீ வித்தியாவை அம்மாவுடன் வைத்தியசாலையில் தங்க வைத்ததாகக் கேள்விப் பட்டன்” என்றார் தணிகாசலம்.

“பொன்னுத்துரை மாமாவைப்பற்றிச் சிறுவயதிலேயே எனது மனதில் கூடாத அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டது. அவருடைய உதவியை நானும் விரும்பவில்லை. அம்மாவும் விரும்பவிலலை. வித்தியா என்னுடன் கூடப்படிக்கும்

மாணவி. அதனால் உதவி செய்கிறாள்; அன்பாக இருக்கிறாள்.'' என்றான் கஜேந்திரன்.

அதற்குப் பின் தணிகாசலம் எதுவும் பேசவில்லை; ''கதையுங்கோ வாறன்'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றார். அவரது செயல் கஜேந்திரனுக்குப் பிடிக்கவில்லை என்பதை அவனது முகமாற்றத்திலிருந்து புரிந்து கொண்டார் கணநாதன்.

''உனது தாயாருக்கு மருந்து வாங்க இருபத்தையாயிரம் ரூபா தேவையென்று தணிகாசலம் சொன்னார். அந்தப் பணத்தை நான் உனது வீட்டில் கொண்டு வந்து தர விரும்பினேன். அதற்குள் நீ வந்து விட்டாய். அதைக் கொடுக்கச் சொல்லி தணிகாசலம் சைகையால் காட்டிவிட்டுப் போகிறாரே தவிர உன்னில் கோபமில்லை'' என்ற கணநாதன் சட்டைப்பையில் இருந்த பணத்தை எடுத்து நீட்டினார்.

கஜேந்திரன் பதறிப் போனான்; ''ஐயா...'' சில கணங்கள் அவனால் பேச முடியவில்லை. அவனது கண்கள் கலங்கின; ''எனக்கு வேண்டாம். நான் ஒருவரிடம் கடனாகப் பெற்று விட்டேன்'' என்றான் கஜேந்திரன்.

கஜேந்திரன், கணநாதனை நிமிர்ந்து பார்த்தான். அவரது கண்கள் கலங்கியிருந்தன; ''கஜன், நீ என்னைவிட வயதில் மிகமிகக் குறைந்தவன். நாம் யாரோ; சந்தித்தது கூடக் குறைவு; ஆனால் உன் மீது எனக்கு ஓர் இனம்புரியாத பாசம் வந்து விட்டது. எனக்கொரு

பெண் பிள்ளை இருந்திருக்குமானால் உன்னைத்தான் நான் மாப்பிளையாக எடுத்திருப்பேன். நட்பு என்பதற்கு இலக்கணமே இல்லை. அது ஒருவரை ஒருவர் காணாமலே ஏற்படும். இப்பொழுது நீ ஏன் வந்தாய்? வரும் போது என்ன சொன்னாய்? உங்களைக் காணாமல் என்னால் இருக்க முடியவில்லை என்றாய். அதுதான் நட்பு. நட்பைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்....? முகம்மலரும்படியாகச் சிரித்துக் கதைப்பதா நட்பு...? உள்ளன்புடன் உரிமையோடு பழகுவதுதான் நட்பு. அந்த நட்புக் காரணமாகத்தான் இப்பணத்தை நான் உனக்குத் தருகிறேன். என்னை உனது நண்பனாகக்கருதினால் இதைவாங்கு. இல்லாவிட்டால் நாம் ஏன் பழகுவான்? பிரிந்துவிடுவோம்'' என்றார். அவரது கன்னங்களால் கண்ணீர் வழிந்தோடியது.

கஜேந்திரன் தன்னையறியாது கையை நீட்டினான். கணநாதன் கண்களால் கண்ணீர் வழிந்தோட அவனது கைக்குள் பணத்தை வைத்தார்.

**786. முகம்நக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு.**

முகம் மலர்ந்து சிரித்துப் பேசுவது நட்பன்று, நெஞ்சம் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு உரிமையுடன் பழகுவதே நட்பு.

**தூய நட்பு**

தணிகாசலம் உள்ளே சென்று; ‘‘கஜேந்திரன் வந்திருக்கிறான்’’ என்று காமாட்சியம்மாளுக்குச் சொல்ல, அவள் தேநீருடன் அவர்கள் இருந்த இடத்திற்கு வந்தாள்; ‘‘கஜன், முன்பென்றால் தினமும் ஒருமுறை இந்தப் பக்கம் வருவாய். இரண்டு வாரகாலமாக இந்தப் பக்கம் நீ வரவில்லை என்று பரமேஸ்வரன் ஐயா கவலைப்பட்டவர். நானும் அவரும் உனது வீட்டுக்கு வர நினைத்தோம்.. இந்தா தேநீரைப் பிடி’’ என்று தேநீர்க் கோப்பையை நீட்டினாள் காமாட்சியம்மாள்.

காமாட்சியம்மாள் மீது கஜேந்திரனுக்கு அன்பு அதிகம். அதே போலக் காமாட்சியம்மாளும் அவனைத் தனது மகன் என்றே நினைத்திருந்தாள்; ‘‘அம்மாவுக்குச் சுகமில்லை என்று கேள்விப்பட்டேன். பணம் தேவையென்றால் எம்மைக் கேட்டகலாம் தானே.’’ என்றாள் காமாட்சியம்மாள்.

‘‘பணம் தேவைப்படவில்லை அம்மா’’ என்றான் கஜேந்திரன்.

‘‘கஜன், நீ எம்மோடு எவ்வளவு அன்பாகப் பழகுகிறாய். அத்துடன் ‘‘அம்மா அம்மா’’ என்று அன்போடு அழைக்கிறாய். அன்று பணம் தேவையென்று உனது தாயாரின் சங்கிலியை அடைவு வைத்ததாகத் தணிகாசலம் அண்ணா கூறிக் கவலைப்பட்டார். தன்னிடம் கேட்டிருக்லாமென்றும் சொன்னார். எம்மிடந்தான் கேட்க உனக்குத் தயக்கமென்றால் தணிகாசலத்திடங் கேட்கவுமா உனக்குத் தயக்கம்.

கஜன் நான் உன்னை எனது மகனாகத் தானடா நினைக்கிறன்'' கலங்கினாள் காமாட்சியம்மாள்.

''நாமெல்லோரும் உன்னுடன் மிகவும் அன்பாகப் பழகுகிறோம். எம்மையெல்லாம் நீ அன்னியர்களாகவே நினைக்கிறாய்...'' என்று கூறியவாறு வந்த பரமேஸ்வரன் அவனின் அருகில் வந்து அமர்ந்தார்.

அவர்களின் கதையைக் கேட்கக் கஜேந்திரனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அவன் பிறருக்குக் கடமைப்படுவதை விரும்பாதவன். தாயாரின் சகோதரர்களிடங் கூடக் கடமைப்பட அவன் விரும்புவதில்லை.

''கஜன், மனிதன் மற்றவர்களுக்குக் கடமைப்படாமல் சீவிக்க முடியாது. அன்பாகப் பழகும் ஒருவன் தனது நண்பன் கஷ்டப்படும் போது உதவாவிட்டால் அவன் பழகுவதில் என்ன அர்த்தம் உள்ளது. மிருகங்களைப் போல ஓர் இடத்தில் கூடிக் கூட்டமாகப் பிரிந்து செல்வதா மனித வாழ்வு. ஒருவனுக்கு கஷ்டம் வரும் போது உதவுவதும், தீமை வந்தால் தடுப்பதும், நல்ல வழியில் நடக்க உதவுவதும், துன்பம் வரும் நேரங்களில் அவனுடன் கூட இருந்து துன்பப்படுவதும் தான் தூய்மையான நட்பாகும். படித்த உனக்கு இவை யாவும் தெரியாதா...? உனது தாயார் நோயால் சிரமப்படுகிறார். அவருக்கு உதவ எமக்கு உரிமை இல்லை என்று நீ நினைத்தால் எம்மோடு பழகுவதை நீ நிறுத்திக் கொள். ஊருக்கெல்லாம் நீ உதவுகிறாய். ஆனால் நாம் உனக்கு உதவுவது,

உனக்கு விருப்பமில்லையென்றால், நீ உதவுவதும் எனக்கு விருப்பமில்லை'' என்றார் தணிகாசலம்.

''நீங்கள் ஏன் பெரிய பெரிய வார்த்தைகளைக் கூறுகிறீர்கள். கஜன் வெக்கப்பட்டவன். அதனால் கேட்காமல் விட்டிருப்பான். அழிவு தரும் தீமையிலிருந்து தடுத்து, நல்ல வழியில் நடக்கும் படிசெய்து, அழிவு நேர்ந்தாலும் கூட உடனிருந்து உதவிகள் செய்யும் கஜேந்திரனுக்கு நீங்கள் அவன் கேளாமலே உதவியிருக்கலாம் தானே'' என்றாள் காமாட்சியம்மாள்.

''அவனுக்குக் காசு தேவையென்று எமக்கு எப்படித் தெரியும்? தகப்பனும் இவனை மாதிரித்தான். நான் பல முறை வற்புறுதிதிக் கேட்ட பின்பு தான் தான் சொன்னதாகக் கூறவேண்டாமென்று சொல்லிச் சொன்னவர். இவற்றையெல்லாம் நாம் சோதிடம் பார்த்தா அறிந்து கொள்வது'' ஆத்திரப்பட்டார் தணிகாசலம்.

அவர் ஆத்திரப்பட்டதைப் பார்த்து வியப்படைந்தார் பரமேஸ்வரன்; ''சரி, சரி விடுங்கோ. கஜன் எதையும் வெட்கப்படாமல் எம்மிடங் கோளடாப்பா. ஒருவருக்கொருவர் உதவி செய்யாமல் எப்படி வாழ்வது? நீ உண்மையான நட்புடனும் உரிமையுடனும் எம்முடன் பழகினால் எம்மைக் கேட்க வெட்கப்படத் தேவையில்லை'' என்றார் பரமேஸ்வரன்.

அவர்கள் கூறியதைக் கேட்கக் கஜேந்திரனுக்கு ஆச்சரியமாக இருந்தது;

“இப்படிப்பட்ட மனிதர்களும் உலகில் வாழ்கிறார்களா?” என்று நினைத்தான். “நீ சமைக்க வேண்டுமா…? சிவகுரு தனது வீட்டில் வந்து சாப்பிடலாமென்று சொன்னான். அவன் யார்….? உனது தாயாரின் சகோதரியின் கணவன் தானே. ஒரு சகோதரிக்கு உதவ இன்னொரு சகோதரிக்கு உரிமை இல்லையா….? இதுதானா உனது கல்வி” என்று கேட்டார் தணிகாசலம்.

---

**787. அழிவின் அவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு.**

---

அழிவைத் தருகின்ற தீமைகள் செய்வதைத் தடுத்து நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவு வந்த சமயத்திலும் உடனிருந்து துன்பப் படுவதே நட்பாகும்.

## கைபோல்

“அம்மா நிரந்தர நோயாளி. தினமும் மருந்தோடுதான் வாழ்கிறார். சிவகுருச் சித்தப்பாவுக்கு நான்கு பிள்ளைகள். நான்கும் சிறுவர்கள். அவர்களுக்குச் சித்தி சமைத்தல் வேண்டும். அத்துடன் அவாவால் எமக்கும் சமைக்க முடியுமா….? அம்மாவுக்குத் தேங்காய்ப் பால் பாவிக்கக்கூடாது. உப்புச் சேர்க்கக்கூடாது. சகோதரி என்றாலும் அவர்களால் தினமும் உதவ முடியுமா…..?அத்துடன் அவர்களின் வீடு எமது வீட்டில் இருந்து வெகு தூரத்தில் உள்ளது. தினமும் மூன்று வேளையும் அங்கு சென்று தான்

நாம் உணவு உண்ண வேண்டும். அத்துடன் அம்மாவுக்கு அங்கிருந்து தான் உணவு கொண்டு வருதல் வேண்டும். இது நடைமுறைச் சாத்தியமானதல்ல. அதைவிட நாம் சமைக்கலாம். தோட்டத்திற்குச் செல்லுமுன் அப்பா சமைப்பார். இல்லாவிட்டால் நான் சமைப்பேன். நாங்கள் இல்லா விட்டாலும் சமைத்த உணவை அம்மா எடுத்துச் சாப்பிடுவா. சித்தி வீட்டில் சமைத்தால் அதை அங்கிருந்து கொண்டு வர ஓர் ஆள் வேணும். இது தினமும் சரிப்படுமா….? அதனால் தான் நான் வீட்டில் சமைக்கிறேன்'' என்றான் கஜேந்திரன்.

அதற்குத் தணிகாசலத்தால் விடை கூற முடியவில்லை. அதனால் பேசாமல் இருந்தார்; ‘‘கஜேந்திரன் சொல்வதில் உண்மையில்லாமலில்லை. ஓரிரு நாட்களென்றால் எதையுஞ் செய்யலாம். தினமும் சென்று வருவது கஷ்டம்தான். உணவு விஷயம் நீ கூறியது சரி. பணம், உதவி போன்ற விஷயங்களில் நீ கூறுபவற்றை நான் ஒத்துக் கொள்ளமாட்டேன். நெருங்கிய உறவினர்களிட.மும் தூய நண்பர்களிடமும் நாம் எதையும் எப்போதும் கேட்கலாம். அதைவிடத் தனது துயரங்களை எடுத்துக் கூறி ஆறுதல் பெறலாம். என்னுடைய உயிர் நண்பன் கணநாதன். அவனிடம் நான் எத்தனையோ உதவிகள் பெற்றிருக்கிறேன். ஆரம்பத்தில் ஒரு தொழிற்சாலையில் இருவரும் கூலிகளாகத்தான் வாழ்க்கையை ஆரம்பித்தோம். நான் வேலையில்லாமல் இருந்த காலத்தில் எனக்கு உணவு உடை மட்டுமல்ல எனது தேவைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றியது கணநாதன் தான். உடை அவிழும் போது உடனே அதைத் தடுக்க

விரைந்து செயற்படும் கைகளைப் போல, துன்பங்கள் வரும்போது அதை உடனே போக்க முயல்வது தான் நட்பு. அதை அவமானமாகக் கருத முடியாது. நான் உன் மீது நட்புத்தான் வைத்திருக்கிறேன். நட்பு வைப்பதற்கு இரண்டு உள்ளங்கள் இருந்தால் போதும். வயது, சாதி, மதம், அந்தஸ்து இவையெல்லாம் நட்புக்கில்லை. நான் வயது முதிர்ந்தவன். உன்மீது நட்பு வைத்திருக்கிறேன். நீ இளைஞன் என்மீது என்ன வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டு விட்டு நிறுத்தினார் பரமேஸ்வரன். அவரின் கேள்விக்குக் கஜேந்திரனால் உடனடியாகப் பதில் கூற முடியவில்லை.

``நீ சொன்னதை நான் உனக்குத் திரும்பிச் சொல்கிறேன்; ``நல்லவர்கள் எப்போதும் துன்பப்படுவர்களுக்கு உதவி செய்வதையே நோக்காகக் கொண்டுள்ளனர். மற்றவர்களின் நன்மைக்காக நல்லவர்கள் தம்மைத்தாமே தியாகஞ் செய்தமையால் தான் துன்பப்பட்ட வர்களின் வாழ்க்கையில் பிடிப்பேற்படுகிறது. ஒருவனுக்கு நன்மை செய்பவன் அதற்கான பயனை அனுபவிப்பான்'' என்றாய். அதை விட நீ ஒரு உத்தமமான சமூக சேவகன். அதைவிடச் சிறந்த ஓர் எழுத்தாளன். செயலிலும், வார்த்தைகளிலும், எழுத்திலும் துன்பப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என்று விரும்பு நீ, உனக்குத் துன்பம் வந்த போது மற்றவர்கள் செய்யும் உதவிகளை விரும்பாமல் விடுவதன் நோக்கம் என்ன? அத்துடன் ஏமநாதனும் மணிமாறனும் கொண்ட நட்பைப் பற்றி எழுதிய உனக்கு நாம் உன்மீது கொண்ட நட்பின்

தன்மை புரியாதது ஏன்…?” என்று கேட்டார் பரமேஸ்வரன்.

“படிக்கிறது தேவாரம். இடிக்கிறது சிவன்கோயில் என்பார்கள்” அது போலவா நாமெல்லாம் இலட்சிய புரிஷன் என்று நினைக்கும் நீ, நடந்து கொள்ளம் முறைகள் சரியில்லை” என்றார் கணநாதன்.

“நீங்கள் கஜனைக் குழப்ப வேண்டாம். நீங்கள் தாராளமாக உதவி செய்யுங்கள். அதைக் கஜன் பெற்றுக் கொள்வான்” என்றாள் காமாட்சியம்மாள்.

“உடை அவிழும் போது விரைந்து சென்று அதைத் தடுக்கும் கைகளைப் போல, துன்பம் வரும் போது அதை உடன் போக்க முயல்வது தான் நட்பு” உனது சங்க நூல் அப்படித்தான் கூறுகிறது” என்றார் பரமேஸ்வரன்.

கணநாதன் சிரித்தார்; “உங்களுக்குத் தெரியாது, என்னிடம் கஜேந்திரன் எழுதிய பல கதைகள் உண்டு வாசித்துப்பாருங்கள். பின் கதையுங்கள்” என்றார் பரமேஸ்வரன்.

**788. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதுஆம் நட்பு.**

உடை அவிழும் போது கை உடனே உதவி மானத்தைக் காப்பது போல, துன்பம் வரும்போது அதை உடன் போக்குவது நட்பு.

## தாங்குவது

திடீரென்று அன்று இரவு இலட்சுமி மயக்கமடைந்து விட்டாள். கஜேந்திரன் உடனடியாக அவளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றான். அங்குஷன் அவளைப் பரீட்சித்துப் பார்த்து விட்டு பட்டணத்தில் உள்ள தனியார் வைத்திய சாலையில் அவளை அனுமதிக்குமாறு கூறினார்.

‘‘கஜன், உங்கள் தாயாரது இருதயம் மிகவும் பலவீனமடைந்திருக்கிறது. அவாவைப் பரிசோதனை செய்ய இங்கு போதியளவு உபகரணங்கள் இல்லை. தனியார் வைத்தியசாலைக்குப் போவதானால் அதிக பணம் தேவை. உம்மிடம் இருக்கா. இல்லாவிட்டால் நான் தருகிறேன்’’ என்றார் அங்குஷன்.

‘‘என்னிடம் இருக்கு’ என்றான் கஜேந்திரன்.

‘‘தாமதியாது கொண்டு செல்லுங்கள்’’ என்று கூறிவிட்டுச் சென்றார் அங்குஷன்.

சில வாரங்களுக்குமுன் இலட்சுமி சுகவீனமுற்றதால் மருந்திற்கு இருபதினாயிரம் ரூபா செலவானது. அதற்காக அவன் தாயாரின் சங்கிலியை அடைவு வைத்தான். அதைக் கணநாதன் கொடுத்த பணத்தில் மீட்டான். திரும்பவும் அதை அடைவு வைக்கலாம் அல்லது விற்கலாம் என்று நினைத்தான் கஜேந்திரன்.

இரவு பத்துமணிக்குக் கஜேந்திரனது வீட்டு வாசலில் கணநாதனது மோட்டார் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து கணநாதன் இறங்கி வந்தார்; கஜன், நான் அங்குஷனின் வீட்டில் இருந்தேன். அங்குஷன் வந்து உனது தாயாருக்குக் கடுஞ் சுகவீனமேற்பட்டு விட்டதென்றும் உடனடியாகத் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டுமென்றும் சொன்னார். அனுமதித்து விட்டாயா....?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்று தலையசைத்தான் கஜேந்திரன்.

''புறப்படு.... புறப்படு.... எனது மோட்டார் வண்டியில் அம்மாவைக் கொண்டு செல்லலாம். நோயாளியை வீட்டில் வைத்திருப்பது ஆபத்து. அம்மாவை அழைத்து வா' என்று அவரசப்படுத்தினார் கணநாதன்.

கஜேந்திரன் தயங்கினான்; ''ஏன் கஜன் தயங்குகிறாய். பணமில்லை என்று மட்டும் தயங்காதே. தேவையானளவு பணம் என்னிடமிருக்கு. கடுமையான நோயாளியை வீட்டில் வைத்திருப்பது ஆபத்தானது. விரைவாகச் சென்று அம்மாவை அழைத்து வா'' என்றார்.

இலட்சுமியை வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு அவர்கள் இருவரும் வீட்டுக்குப் புறப்பட்ட போது தணிகாசலமும் பரமேஸ்வரனும் அங்கே வந்தனர்.

“உங்களைக் காணவில்லையே என்று நாம் அங்குஷனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது நீங்கள் கஜேந்திரனது வீட்டுக்குச் சென்றதாக அங்குஷன் சொன்னார். அதனால் அங்கு சென்றோம். கஜனின் அப்பா நீங்கள் வைத்தியசாலைக்குச் சென்று விட்டதாகச் சொன்னார். அதனால் இங்கு வந்தோம்” என்றார் பரமேஸ்வரன்.

கஜேந்திரனை நினைக்கத் தணிகாசலத்திற்கு வேதனையாக இருந்தது. துள்ளித் திரியும் வயதில் வைத்தியசாலைக்கும் வீட்டுக்குமாக அலைவது மட்டுமல்ல, வீட்டு வேலைகளையும் கவனிக்க வேண்டிய அவல நிலைக்குட்பட்டிருப்பதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கஜேந்திரன் கூறுவதைப் போலத்தினமும் உணவுக்கு இன்னொருவர் வீட்டிற்குச் செல்ல முடியாது” என்று நினைத்தார். அவரது நினைவுத் திரைக்குள் வித்தியா வலம் வந்தாள். “வித்தியா இன்னொருவனுக்கு நிட்சயிக்கப் பட்டவள். அப்படிப்பட்டவள் இவனுடன் ஏன் துவிச்சக்கரவண்டியில் ஏறித் திரிகிறாள். அத்துடன் தாயாருடன் வைத்தியசாலையில் தங்கியிருக்கிறாள்” அதை நினைக்க அவருக்குக் கவலையாக இருந்தது.

“கஜன் நட்புக்குச் சிறந்த நிலை எதுவென்றால், எப்போதும் மனம் மாறுபடாமல், துன்பங்கள் வரும் போதெல்லாம் நண்பனுக்கு உதவிகள் செய்து அதைத் தாங்கும் நிலையாகும். இந்தா, இந்தப்பணத்தைப் பிடி” என்று ஒரு கட்டு

நோட்டைக் கஜேந்திரனது கைக்குள் வைத்தார் பரமேஸ்வரன்.

“அதைத்தான் நானும் சொல்கிறேன். நீ என்னுடைய நண்பன். இந்தா, இதைப் பிடி” என்று கணநாதனும் ஒரு தொகைப் பணத்தை நீட்டினார். மனமில்லா விட்டாலும் மறுக்க முடியாததால் அதைப் பெற்றுக் கொண்டான் கஜேந்திரன்.

“சரி புறப்படுவோம்” என்ற கணநாதன் தனது மோட்டார் வண்டியில் கஜேந்திரனை ஏற்றிக் கொண்டு புறப்பட்டார். தணிகாசலத்திற்குக் கஜேந்திரனது நடவடிக்கை பிடிக்கவில்லை. கவலையுடன் பரமேஸ்வரனின் மோட்டார் வண்டியில் ஏறினார். அவரது மனம் கஜேந்திரனை நினைத்து அல்லற்பட்டது.

**789. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்புன்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**

நட்புக்கு இலக்கணம் எதுவென்றால், எப்பொழுதும் மனம் கோணாமல் முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலை ஆகும்.

## சிறப்பில்லா நட்பு

பரமேஸ்வரன், கஜேந்திரனுக்குக் கொடுத்த பணத்தைப் பற்றித் தணிகாசலத்துக்கு கூடச் சொல்லவில்லை. முன்பு ஒருமுறை மகாகணபதி ஆலயத்தில் சுவாமியார் தனது உரையில் சொன்ன அறிவுரை பரமேஸ்வரனின்

காதுகளில் ஒலித்தது; “வலது கை கொடுப்பதை இடதுகை ஒருபோதும் அறியக்கூடாது. இங்கு நான் இடதுகை என்று கூறுவது உங்களது இடது கையை அல்ல. ஓர் ஆணின் இடது பக்கம் அவனது மனைவிக்குரியது. அதைத்தான் அர்த்த நாரீஸ்வர உருவம் எமக்குப் புலப்படுத்தகிறது. இறைவன் ஆணாகவும் பெண்ணாகவும் இருக்கிறான். அதுவும் ஓர் உடலில் இருக்கிறான். இதன் தத்துவம் திருமணமான பின் கணவனும் மனவியும் ஈருடலாகத் தோற்றத்தில் இருந்தாலும் எண்ணம்; சிந்தனை, ஒழுக்கம் முதலியவற்றில் ஒருமித்துச் செயற்படல் வேண்டும். தான தர்மத்தைப் பொறுத்த மட்டில் கொடுத்தவற்றை அன்றே மறந்து விடல் வேண்டும். அது மனைவிக்குக் கூடத் தெரிய வேண்டியதில்லை. பிறருக்கு நாம் செய்யும் தீமைகளையும் பிறர் உனக்குச் செய்த நன்மைகளையும் மட்டுமே நினைவில் வைதத்துக் கொள்ளல் வேண்டும். ஒரு பொருள் குறிப்பிட்ட தினத்திற்குப் பின்பு பாவனைக்குதவாதது போலத்தான் கொடுத்ததைக் குறித்து வைத்திருப்பவனும், அதற்கான பலனை இழக்கிறான். அதனால் நீங்கள் நண்பர்களுக்கு உதவுவதையோ, ஏழைகளுக்குத் தானஞ் செய்வதையோ கொடுத்த அக்கணமே மறந்து விடுங்கள். பெயருக்கும் புகழுக்குமாகக் கொடுப்பவன், பெயரையும் புகழையம் மட்டும் அடைவான். அதற்கான பயன்களை அடைய மாட்டான்”

அதனால் பரமேஸ்வரன் கஜேந்திரனுக்குப் பணம் கொடுத்த விஷயத்தை யாருக்கும் கூறவில்லை. ஆனால் கணநாதன் அதைப் பெரிதாக எடுத்தத் தணிகாசலத்திற்குக் கூறிவிட்டார். அதனால்

தணிகாசலம் பரமேஸ்வரனுக்குச்சொன்னார்; “மச்சான், மக்கட் பேற்றாலோ செல்வத்தாலோ நாம் பாக்கியவான்களாகி விட முடியாது.. தான தர்மஞ் செய்வதன் மூலந் தான் ஒருவன் அமரனாகிறான். கஜேந்திரன் வறியவன்; தகப்பன் கமம் செய்வதால் வருமானம் மிகவும் குறைவு. அத்துடன் அவன் கல்வி கற்கிறான். தாய் நோயாளி. இதனால் அக்குடும்பத்திற்குச் செலவு மிகமிக அதிகம். அதனால் அவனுக்குப் பலமுறை நான் பணம் கொடுக்க முயற்சித்தேன். அதை அவன் வாங்க மறுத்து விட்டான். அப்போது சொல்வான்; “தணியண்ணை நீங்கள் பெரும் பணக்காரனென்றால் நான் கூசாமல் வாங்குவன். நீங்களும் என்னைப் போலச் சாதாரண மனிதன். என்னைவிட உங்களுக்குக் குடும்பச் சுமை அதிகம். நீங்கள் எனக்குப் பணம் தருவதாக இருந்தால் உங்களது செலவைக் குறைத்துத்தான் தரவேண்டும். ஏற்கனவே பற்றாக்குறையுள்ள நீங்கள் இன்னும் குறைத்தால் எப்படி இருக்கும். நான் சொல்கிறேன் என்று குறை நினைக்காதைங்கோ, நீங்கள் எனக்குப் பணம் தருவதானால் உங்கள் சாப்பாட்டை வெட்டித்தான் தரவேண்டும். அது எனக்கு விருப்பமில்லை” என்றவன். அத்துடன் அவன் யாரிடமும் கடமைப்பட விரும்பமாட்டான். தான் எல்லோருக்கும் உதவுவானே தவிர யாரும் தனக்கு உதவி செய்வதை விரும்ப மாட்டான். அவன் எப்படி பழக்கமில்லாத உங்களிடம் பணம் வாங்கினான்…? அத்துடன் அவன் பாவம் தேவையேற்படும் போதெல்லாம் கொடுத்து உதவுங்கோ” என்றார்.

அதைக் கேட்ட பரமேஸ்வரன் மிகவும் பொறுமையிழந்து சொன்னார்; “நான் இதை

யாருக்கும் சொல்லக்கூடாது என்று நினைத்திருந்தேன். அதனால் தயவு செய்து இதை உங்கள் மனதுள் வைத்துக் கொள்ளுங்கள். கஜேந்திரன் மிகவும் சிறந்தவன்; ஒழுக்கமானவன்; கொள்கைப்பற்றுள்ளவன். நான் பணங்கொடுத்தது தெரிந்தால் வருத்தப்படுவான். அவனை நான் நண்பனாகத்தான் கருதுகிறேன். நண்பர்கள் இருவர், இவர் எனக்கு இத்தன்மையானவர், நான் அவருக்கு இன்ன தன்மையானவன் என்று புனைந்துரைத்தாலும் நட்புச் சிதைந்து விடும் என்பார்கள். அப்படியானது நட்பு. அதை மறந்து கஜேந்திரன் எனது நண்பன். அவன் கஷ்டப்பட்டதால் நான் அவனுக்கு உதவினேன்'' என்று நான் நினைத்தாலோ அல்லது பிறருக்குச் சொன்னாலோ எமது நட்பில் களங்கமேற்பட்டு விடும்.'' என்றார் பரமேஸ்வரன்.

''உண்மைதான். அவன் அப்படியானனவன். உங்களை நான் பாராட்டுவதற்காகச் சொன்னேனே தவிர குறையாகச் சொல்லவில்லை. இன்னும் கொடுத்துதவுங்கள். நான் யாருக்கும் சொல்லமாட்டேன்'' என்றார் தணிகாசலம்.

**790. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்என்னும் நட்பு.**

எமக்கு இவர், இத்தன்மையானவர்; யாம் இவருக்கு இத்தன்மையுடை யோம் என்று ஒருவரை ஒருவர் புனைந்துரைத்தாலும் நட்புச் சிறப்பை இழக்கும்.

## ஆராய்வு

பொழுது சரியாகப் புலருமுன்பு பரமேஸ்வரனும் தணிகாசலமும் வைத்தியசாலைக்கு வந்தனர். அப்போது கஜேந்திரன் வைத்தியசாலைக்கு வரவில்லை. பரமேஸ்வரன் வைத்தியரைச் சென்று சந்தித்தார்.

''இலட்சுமியின் நிலைமை அவ்வளவு மோசமில்லை. மூச்செடுப்பதற்குக் கஷ்டப்படுகிறார். அதனால் இன்னும் இரண்டு தினங்களுக்கு இங்கு தங்கிச் சிகிச்சை பெறல் வேண்டும்'' என்றார் வைத்தியார்.

''பாவம் கஜேந்திரன். அவனை நினைக்கப் பாவமாக உள்ளது. இங்கு குணப்படுத்தவது சிரமமென்றால் கூறுங்கள். நாம் கொழும்பில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்கிறோம்'' என்றார் பரமேஸ்வரன்.

''தேவையில்லை. இங்கு குணப்படுத்தலாம். நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை'' என்றார் வைத்தியர்.

தணிகாசலம் இலட்சுமியைப் பார்ப்பதற்காக வைத்தியசாலையுள்ச் சென்றார். பரமேஸ்வரன் வெளியே நின்றார். அப்போது கஜேந்திரன் அங்கு வந்தான். அவனது முகம் வாடிச் சோர்ந்திருந்தது. ''என்ன கஜன்... என்றுமில்லாதவாறு உனது முகம் வாடியிருக்கிறது'' என்றார் பரமேஸ்வரன்.

“என்ன ஐயா செய்வது. துன்பங்களும் பிரச்சினைகளும் எனக்குத் தொடர் கதையாகவே உள்ளன. சென்ற வாரம் அம்மா திடீரெனச் சுகவீனமுற்றதால் பெருஞ் செலவு ஏற்பட்டது. இப்போதும் பெருஞ் செலவு வரும் போலத் தெரிகிறது. அதைவிட கஷ்டங்கள் ஒன்று இரண்டல்ல. அம்மா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதால் என்னால் நிம்மதியாக வாழ முடியவில்லை. அப்பாவால் நிம்மதியாகத் தொழில் செய்ய முடியவில்லை. அத்துடன் என்னால் படிப்பில் ஒழுங்காகக் கவனஞ் செலுத்த முடியவில்லை” கலங்கினான் கஜேந்திரன். அவனைப் பார்க்கப் பரமேஸ்வரனுக்குக் கவலையாக இருந்தது. அவனது கவலையைப் போக்கக் கூடிய ஆறுதல் வார்த்தைகளைக் கூடக் கூறமுடியாது சிரமப்பட்டார் பரமேஸ்வரன்.

“நான் யாருக்கும் துன்பஞ் செய்ய நினைப்பதுகூட இல்லை. என்னால் முடிந்தளவு உதவிகளை மற்றவர்களுக்குச் செய்து வருகிறேன். கடவுளில் நம்பிக்கை வைத்து கடவுளுக்குக் தொண்டுகள் பலவும் செய்து வருகிறேன். நல்லொழுக்கம் மிக்கவனாக வாழ்கிறேன். நல்லொழுக்கமுள்ள வனாக வாழ்ந்தால் மற்றய செல்வங்கள் யாவும் அவனைத் தேடி வந்தடையும் என்று சொல்வார்கள். எண்ணும் எண்ணம், சொல்லும் சொல், செய்யும் செயல் இம்மூன்றிலும் நான் சுத்தமாகத்தான் இருக்கிறேன்.” கவலைப்பட்டான் கஜேந்திரன்.

“நோய் வருவதற்கும் நீ கூறியவற்றிற்கும் தொடர்பில்லை. ‘ஒவ்வொருவரும் முற்பிறப்பில்

செய்த பாவபுண்ணியங்களை இப்பிறப்பில் அனுபவிப்பார்கள்' என்று கூறக் கேட்டிருக்கிறேன். அப்படி முற்பிறப்பு வினைதான் உன்னைப் பற்றிப் பிடித்திருக்கிறது என்று நம்புகிறேன். கடவுள் ஒருவகையால் உனக்குத் துன்பங்களைக் கொடுத்த போதும் என்போன்ற பல நல்ல நண்பர்களை உனக்குத் தந்திருக்கிறார். உனது இயல்புகளால் கவரப்பட்டுத்தான் நான் உன்னோடு நட்புக் கொண்டேன். நட்புக் கொண்டவர்களுக்குப் பிரிவென்பதே இல்லை. அத்துடன் ஆராய்ந்து பராமல் நட்புக் கொள்வதைப் போலப் பெருந்தீமையும் எவையும் இல்லை. உனது குணவியல்புகளைக் கேட்டறிந்தபின், உன்னுடன் நன்றாகப் பழகினேன். அதன்பின் உனது எழுத்துக்களை வாசித்தேன். அதனால்தான் உன்மீது அளவற்ற அன்பு கொண்டு உன்னை எனது நண்பனாக்கிக் கொண்டேன். இனி நீ ஏன் கவலைப்படுகிறாய்? உனக்கு உதவி செய்ய நான் இருக்கிறேன்'' என்றார் பரமேஸ்வரன். அவரது வார்த்தைகள் உணர்ச்சி வசப்பட்டு வெளிவந்தன.

கஜேந்திரன் நிமிர்ந்து அவரைப் பார்த்தான்; ``உங்களைப் போன்ற நல்லவர்களின் நட்புத்தான் என்னை வாழவைத்து, உலகத்தின் மீது பற்றுக் கொள்ள வைத்துள்ளது'' என்றான் கஜேந்திரன்.

``நான், நன்கு ஆராயாமல் சிலருடன் நட்புப் பூண்டேன். அவர்களால் பெரும் துன்பத்தக்குள்ளானேன். அதனால், நான் இப்பொழுது பழகுபவர்கள் மிகவும் குறைவு. நான் தற்போது நட்புப் பூண்டுள்ளவர்களில்

உயர்ந்தவர்கள் நீயும் தணிகாசலமும் கணநாதனும் தான். நீ எதற்கும் பயப்படாதே. எல்லா உதவிகளையும் நான் உனக்குச் செய்வேன்.'' என்றார் பரமேஸ்வரன்.

அப்போது தணிகாசலம் அங்கே வந்து சொன்னார்; ''இப்ப அம்மாவுக்குச் சுகம். போய்ப்பார். நான் பால் கரைத்துத் தரவா என்று கேட்டேன். அவா வேண்டாம் என்று கூறினா. நீ போய்க் கரைத்துக் கொடு'' என்றார் தணிகாசலம். கஜேந்திரனுடன் பரமேஸ்வரனும் இலட்சுமியைப் பார்க்க உள்ளே சென்றார்.

**791. நாடாது நட்டலின் கேடுஇல்லை; நட்டபின்**
**வீடுஇல்லை நட்பாள் பவர்க்கு.**

நண்பர்களானவர்களுக்கு ஒரு போதும் அதிலிருந்து விடுதலை இல்லை. ஆகையால் ஆராயாது நட்புக் கொள்வதைப் போல் கெடுதியானது வேறு எதுவும் இல்லை.

## சாவுக்குக் காரணி

கணநாதன் அன்று காலை கொழும்புக்குப்புறப்படும்போது கூறினார்; ''பரமேஸ் சொல்கிறேன் என்று குறை நினைத்துக் கொள்ளாதே. வாதவூரனின் நட்பைத் துண்டித்து விடு. அவன் மூலமாகத்தான் நீ அமிர்தினிக்குப் பணம் அனுப்பிதாகக் கேள்விப்பட்டேன். நன்கு ஆராய்ந்து பாராமல் ஒருவன் மீது நாம் கொள்ளும் நட்பானது எமக்குப் பல துன்பங்களைக்கொண்டு வந்து சேர்க்கும். ஒருவனை மிக மிக நுணுக்கமாக

ஆராய்ந்து பார்த்த பின்பு தான் அவன் மீது நட்புக் கொள்ளுதல் வேண்டும். இல்லா விட்டால் அந்நட்பு எம்மைச் சாவுக்கே அழைத்துச் செல்லும் என்று உனக்குத் தெரியும். வாதவூரன் அமிர்தினிக்கு மிகமிக வேண்டியவன். ஆனால் அமிர்தினி அவன் தனக்கு வேண்டியவன் என்று கூறாமல், 'தான் கேள்விப்பட்டளவில் அவன் ஒரு நிபுணன் என்று உனக்கு இன்னொருவர் மூலம் அறிமுகப்படுத்தியவள். அவனைப் பற்றி நீ ஆராயாது அவனுடன் நட்புப் பூண்டாய். அவனை நம்பிப்பல செயல்களைச் செய்தாய். அவனும் அமிர்தினியும் சேர்ந்து திட்டமிட்ட பின்புதான் உன்னோடு அவன் அச்செயல்களைப்பற்றிக் கதைப்பான். அவளது பொய்யான பழக்க வழக்கங்கங்களை உண்மையென நீ நம்பியதால் தான் உனது தொழிற்சாலையில் பிரச்சினை உண்டானது. இதை இப்பொழுதும் நீ நம்புகிறாய் இல்லை. அது உனக்குத் தீராத கேட்டை உண்டு பண்ணப் போகிறது''

''வாதவூரன் நல்லவன். இதுவரை எனது மனம் நோகும்படியாகக் கூட அவன் கதைத்ததில்லை. அமிர்தினியால் நான் கெட்டழிந்தேன் என்பது உண்மை. அதற்காக வாதவூரன் தான் அவளுக்குத் திட்டம் போட்டுக் கொடுத்தான் என்பதை என்னால் நம்ப முடியவில்லை'' என்றார் பரமேஸ்வரன்.

''பரமேஸ், என்னைப் பற்றி உனக்குத் தெரியும். நான் ஏன் இன்னொருவன் மீது வீண்பழியைச் சுமத்துகிறேன் என்பதை நீ ஏன் நினைத்துப் பார்க்கிறாயில்லை? அதைத்தான் விடு.

நீ அமிர்தினிக்கு யாருக்கும் தெரியாமல் கொடுத்த காசைப்பற்றி எனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டு விட்டு நிறுத்தினார் கணநாதன்.

''முன்பும் கணநாதன் அமிர்தினிக்குப் பணம் கொடுத்து விடயத்தைப் பற்றிக் கூறியபோது யாருக்கும் தெரியாது கொடுத்தது எப்படிக் கணநாதனுக்குத் தெரிந்தது என்று மண்டையை உடைத்துக் கொண்டிருந்தார் பரமேஸ்வரன். இப்போது நான் வாதவூரன் மூலம் பணம் கொடுத்ததாகக் கூறுகிறார். இது எப்படி அவருக்குத் தெரிந்தது?'' என்று யோசித்தார் பரமேஸ்வரன்.

''நீ யாருக்கும் தெரியாது வாதவூரனிடம் கொடுத்து அமிர்தினிக்குப் பணம் கொடுத்தது எனக்கு எப்படித் தெரியும் என்று யோசிக்கிறாயா...?'' நான் உனது நண்பன். உனது சகல விடயங்களிலும் மிகமிக அக்கறையாக இருப்பவன்'' என்று கூறிவிட்டுப் பரமேஸ்வரனது முகத்தைப் பார்த்தார் கணநாதன்.

பரமேஸ்வரனுக்கு அந்தரமாக இருந்தது; ''அமிர்தினியுடன் இனி எந்த விதமான உறவும் வைக்க மாட்டேன்'' என்று கணநாதனுக்குக் கூறியது அவரது ஞாபகத்திற்கு வந்தது.

''நீ வார்த்தைக்கு வார்த்தை உயிர் நண்பனென்று சொல்வாய், அதன்படி நீ நடப்பதில்லை. அமிர்தினியோடு எந்தவிதமான தொடர்புகளும் இனிமேல் வைக்கமாட்டேன் என்று எனக்குக்கூறி விட்டு என்னை ஏமாற்ற உனக்கு எப்படி மனம் வந்தது? மனிதன் ஒழுக்கமாக

வாழத்தொடங்குவதன் முதற்படி பொய் சொல்லாதிருத்தல். நீ சென்ற மாதம் இருபத்திநான்காம் திகதி புதன்கிழமை காலை பத்துமணிக்கு வாதவூரனிடம் பணம் கொடுத்திருக்கிறாய்''

பரமேஸ்வரன் அதிர்ந்து போனார்; ''தான் பணம் கொடுத்தமை மட்டுமல்ல எந்தமாதம் எத்தனையாம் திகதி என்ன கிழமை என்ன நேரம் என்று இவனால் எப்படிச் சொல்ல முடிகிறது?'' என்று நினைத்தார். அவரது உடல் கூசியது. தான் பொய் சொன்னதை நினைக்க அவமானமாகவும் வெட்கமாகவும் இருந்தது. அதனால் தலை குனிந்தார்.

''இப்போதும் பெரிதாக எதுவும் நடக்கவில்லை. உனக்கு அமிர்தினி மீது இப்போது மோகமில்லை என்பது எனக்குத் தெரியும். முன்பு உன்னோடு உறவாடியவள் மிகவும் கஷ்டப்படுகிறாள் என்று வாதவூரன் உனக்குப் பக்குவமாகச் சொன்னதால் பணத்தைக் கொடுத்தாய். அது இரக்கமாகக் கூட இருக்கலாம். அந்தச் சந்தர்ப்பத்தை உனக்கெதிராக வாதவூரன் பயன்படுத்தியிருக்கிறான். அவன் நீ அமிர்தினியை இப்போதும் மறக்கவில்லை என்றும் தன்னிடம் பணம் தந்து, அமிர்தினிக்குக் கொடுக்கச் சொன்னதாகவும் அவன் குமர குருவுக்குச் சொல்லியிருக்கிறான். குமரகுரு எனக்குச் சொல்லி வருத்தப்பட்டார். ''ஒருவன் நுணுக்கமாக ஆராய்ந்து பாராமல் கொள்ளும் நட்பு, இறுதியில் அவனது மரணத்திற்குக் கூட வழிவகுத்து விடும்'' என்று

பெரியவர்கள் கூறுவார்கள். வாதவூரனின் நட்பு அப்படியானது'' என்றார் கணநாதன்

**792. ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை தான்சாம் துயரம் தரும்.**

நன்கு ஆராயாது நட்புக் கொண்டவனுடைய நட்பு, இறுதியில் அவன் சாவதற்குக் காரணமான துன்பத்தை உண்டாக்கி விடும்.

## மூன்றின் பின்

``பரமேஸ், அமிர்தினி பாவம். இப்போது மிகவும் கஷ்டப்படுகிறாள். கணநாதன் அவளை வேலையில் இருந்து நீக்கி விட்டார். அவள் உன்னோடு தொடர்பு வைத்திருந்தமையால் தான் அவளைப் பலரும் விரும்பாமலிருந்தனர். அவள் இன்னொருவனின் மனைவியாக இருந்த போதும் ஏதோ முன்வினைப் பயனால் உன்னுடன் தொடர்பு கொண்டு விட்டாள். உலகில் மிகப்பெரிய பாவம் இன்னொருவனது மனைவி மீது இச்சைப்பட்டு அவளது தோளைத் தழுவுவது. அந்தப் பாவத்தை நீ செய்து விட்டாய். இப்பொழுது அவள் மிகவும் கஷ்டப்படுகிறாள். அவளுக்கு உதவி செய்ய வேண்டியது உனது கடமை. அவளுடன் நீ ஐந்து வருடங்கள் வாழ்ந்திருக்கிறாய். அதனால் உனக்கு அந்தக் கடமை உண்டு. அவள் உன்னைத் தேடி வந்த போது அவளை ஒரு நாயாகக் கூட நீ மதிக்கவில்லை. அவள் யாரோ...... எப்படியும் அவள் வாழட்டும் என்று விட்டு விட முடியுமா..? உனக்காக அவள் வாழ்ந்தவள். உன்னை உயிருக்குயிராக நினைத்துப் பல விஷயங்களைச்

செய்தவள். இப்பொழுது நீ அவளது தொடர்பை விட்டு விட்டாய். அது நல்லது. இன்னொருவனது மனைவியை அவன் உயிரோடு இருக்கும் போது வைப்பாட்டியாக வைத்திருப்பது பாதகமான செயல். அதனால் அவளை ஒதுக்கிவை. அனால் அவள் கஷ்டப்படும்போது உதவுவது உனது கடமை. நான், நீ உதவி செய்வதைப் பற்றி யாருக்கும் வாய் திறந்து சொல்ல மாட்டேன். என்னை நீ நம்பு. உன்னுடன் நானும் பல வருடகாலமாகப் பழகி வருகிறேன். எப்போதாவது எனது நட்பில் களங்கம் கண்டாயா…?'' என்று வாதவூரன் கூறியது அவரது செவிகளில் ஒலித்தது.

“நான் அவளோடு நீ நட்பு வைத்த போதே எச்சரித்தேன். நீ கேட்கவில்லை. உனது அழிவுக்கு அவளும் ஒரு கர்த்தா என்று சொன்னேன். நீ அதை நம்பவில்லை. இப்பொழுது நீ கொடுத்த பணம் எவ்வளவு எப்போது கொடுத்தாய் என்ன கிழமை கொடுத்தாய் என்ன நேரங் கொடுத்தாய் என்ற விஷயத்தை நான் சொல்கிறேன். இதெல்லாம் எனக்கு எப்படித் தெரிந்தது. இவற்றையெல்லாம் நான் சொன்ன பின்பும் என்னை நம்பாது விடப் போகிறாயா….?'' என்று கேட்டார் கணநாதன்.

அப்போதும் பரமேஸ்வரன் கதைக்கவில்லை. அவரால் கதைக்க முடியவில்லை. யாரை மறக்க வேண்டுமென்பதற்காக இந்த ஊரில் வந்திருக்கிறாரோ அதே ஆளால் தொடர்ந்தும் பிரச்சனைகள் வந்ததால் அவருக்கு அவமானமாக இருந்தது.

“ஒருவனது குணத்தையும், குடிப்பிறப்பையும், அவனிடம் உள்ள குறைகளையும் அவனோடு சேர்ந்தவர்களின் இயல்பையும் அறிந்த பின்புதான் அவனுடன் நட்புக் கொள்ளுதல் வேண்டும். வாதவூரன் சரியான குடிகாரன். அவனது பெற்றோர் அவ்வளவு நல்லவர்கள் அல்லர். தாயும் தகப்பனும் நெடுநாட்களாகப் பிரிந்திருந்தவர்கள். தகப்பன் கொழும்பில் குடித்து விட்டுத் தெருத்தெருவாக அலைபவர். அத்துடன் ஒருநாள் அவர் குடித்து விட்டு வீதியில் விபத்துக்குள்ளாகி மரணமானவர். அவரை யாரென்று அடையாளம் காண்பதற்காகப் பல நாட்கள் பிரேத அறையில் வைத்திருந்தனர். யாரும் அடையாளங் காணாமையால் அனாதைப் பிணமென்று அடக்கஞ் செய்தனர். தனது தந்தை என்று தெரிந்தும் வாதவூரன் பிரேத அறைக்குச்சென்று தந்தையின் பிரேதத்தை எடுத்து அடக்கஞ் செய்யவில்லை. அத்துடன் அவனோடு சேர்ந்தவர்கள் ஒருவர் கூட நல்லவரில்லை. குமரகுரு எப்படியானவன் என்று உனக்குத் தெரியும். யார் குடிவகைகளை வாங்கிக் கொடுக்கிறார்களோ அவர்களுக்காக அவன் அன்று முழுவதும் எதுவும் செய்வான். மறுநாள் இன்னொருவன் குடிவகைகளை வாங்கிக் கொடுத்து முதல்நாள் குடிவகை வாங்கிக் கொடுத்தவனுக்கு அடிக்கச் சொன்னால், இவன் கூசாமல் அடிப்பான். ஆனால் உன்னுடன் மட்டும் அவன் மிக மிக அவதானமாக பழகுவகிறான்”

“வாதவூரன் வந்து அமிர்தினியைப் பற்றிச் சொன்ன போது எனது மனம் இளகி விட்டது. என்னுடன் இருக்கும் போது மிகவும் வசதியாக இருந்தவள் இப்போது மிகவும் கஷ்டப்படுகிறாளே

என்று மனம் அந்த நேரம் சற்றுத் தடுமாறி விட்டது. அதனால் கொடுத்தேனே தவிர அவளது உறவைப் புதுப்பிப்பதற்காகக் கொடுக்கவில்லை'' கலங்கினார் பரமேஸ்வரன்.

''ஆரம்பம் அப்படித்தான் இருக்கும். ஆரம்பத்தில் வாதவூரன் பணம் கேட்டு வந்தான். அடுத்து அவள் பணம் கேட்டு வருவாள். அவளைக் கண்டதும் இரங்கி விட்டேன் என்று நீ கூறுவாய்'' என்றார் கணநாதன்.

''இல்லை. இனிமேல் நான் அவளுக்குப் பணம் கொடுக்க மாட்டேன்'' என்றார் பரமேஸ்வரன்.

''சொல்வது மிகவும் எளிது. அதைக் கைக்கொள்வது மிகவும் கடினம். பரமேஸ் தயவு செய்து மரியாதையைக் காப்பாற்று'' கலங்கினார் கணநாதன்.

---

**793. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா**
**இனனும் அறிந்துயாக்க நட்பு.**

---

ஒருவனுடைய குணத்தையும், குடிப்பிறப்பையும், அவனிடம் உள்ள குறைகளையும், அவனது இனத்தவரின் இயல்பையும் அறிந்த பின்பு தான் அவனுடன் நட்புக் கொள்ளல் வேண்டும்.

**பொருள் கொடுத்துப் பெறு**

“கணா. உயர்ந்த குடியில் பிறந்தவனை, தனக்கு வருகின்ற பழிக்கு அஞ்சுகின்றவனை எவ்வளவு பொருள் கொடுத்தாவது நண்பனாக்கிக் கொள்ள வேண்டும்” என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது உன்னைப் பொறுத்தவரை தகும். நீ நல்ல குடியில் பிறந்தவன். உனது தந்தை நீ சிறுபிள்ளையாக இருக்கும் போது இறந்து போனார். உனது தாயார் மிகவும் கஷ்டடப்பட்டு ஒழுக்கமாக உன்னை வளர்த்தார். உனது தந்தையார் ஒழுக்க சீலர்; உத்தமமானவர் என்று எனது தாயார் அடிக்கடி கூறுவார். அதே போல நீயும் உத்தமன்; ஒழுக்கமானவன். நான் எவ்வளவு பொருள் கொடுத்தாவது உனது நட்பைப் பேண வேண்டும். நான் ஒழுக்கங் கெட்டவன். எவ்வளவு தில்லுமுல்லுகளைச் செய்திருப்பேன்; உனக்குக் கூடக் கொடுமைகள் செய்திருக்கிறேன். அப்படியிருந்தும் நீ எனது நட்பைக் கைவிடவில்லை. நீ எனக்கு எவ்வளவு நன்மைகள் செய்தாய். அதை நான் மறந்து உனக்குப் பல தீமைகள் செய்தேன். அப்படியிருந்தும் என்மீது நட்புக் கொண்டு, அதைக் குறையவிடாது காப்பாற்றி வருகிறாய். நான் அமிர்தினியுடன் உறவு வைத்திருந்தபோது அவ் உறவு தனக்கு நீங்காத அவமானத்தைத் தரும் என்று சொல்லி விநாயகரத்தினம் விலகிச் சென்று விட்டார். ஆனால் நீ ஏசினாய்; கண்டித்தாய்; அன்பாக எடுத்துரைத்தாய். இருந்த போதும்நான் உனது சொற்களைக் கேட்கவில்லை. ஆனால் நீ அதைப் பொருட்படுத்தாது எனக்குதவிகள் யாவும் செய்து வருகிறாய்..?” கண்கலங்கினார் பரமேஸ்வரன்.

“நான் சிறுவயதில் உனது தாயாரிடம் வாங்கி உண்டதை இன்றும் நினைவில் வைத்திருக்கிறேன். உனது தாயார் அடிக்கடி சொல்வார்; “கணநாதா, நீ உத்தமான பையன், பரமேஸ்வரன் குழப்படிக்காரன். உன்னுடன் அவன் சண்டைக்கு வந்தாலும், கோபங்கொண்டு அவனை வெறுத்து விடாதே. பிற்காலத்தில் நீங்கள் இருவரும் நல்ல நண்பர்களாக இருத்தல் வேண்டும்’’ என்பார். அதை என்னால் மறக்க முடியவில்லை. நீ தீய செயல்களைச் செய்யும் போதெல்லாம் எனக்குக் கோபம் வரும். உனக்கு நினைவிருக்கிறதா? நீ அமிர்தினியின் வலையில் சிக்கி அவளை உனது நிர்வாகத்திற்குப் பொறுப்பானவளாக நியமித்த போது நான் வந்து அவளை அப்பதவியிலிருந்து நீக்குமாறு சொன்னனேன். அதற்கு நீ சொன்னது இப்போதும் எனது ஞாபகத்தில் உள்ளது; “கணா, இது எனது தொழிற்சாலை; இங்கு யார் விசுவாசமானவர், யார் திறமைசாலிகள், யாரிடம் நிர்வாகப் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டுமென்று எனக்குத் தெரியும். இவ்வளவு காலத்தில் ஒருநாளாவது உனது நிர்வாகத்தில் நான் தலையிட்டிருப்பேனா…..? நீ ஏன் எனது நிர்வாகத்தில் அடிக்கடி தலையிடுகிறாய். எனக்கு நிர்வாகத்திறமையில்லாமல் இருந்து உனது உதவி தேவை என்று நான் கருதினால், அந்த நேரம் உன்னிடம் இத்தொழிற்சாலையை ஒப்படைக்கிறேன். அதுவரை நீ பேசாமலிரு’’ என்றாய். அதற்கு நான் என்ன சொன்னேன். சொல்லு பார்ப்பம்’’ என்றார் கணநாதன்.

“உன்மீதுள்ள அக்கறை காரணமாகத் தலையிட்டுவிட்டேன். இனிமேல் தலையிட மாட்டேன்.

நீ வேண்டுமானால் அமிர்தினியோடு குடித்தனம்நடத்து. ஆனால் அமிர்தினியிடம் நிர்வாகத்தை ஒப்படைக்காதே என்றனீ.''

கணநாதன் சிரித்தார்; "அன்றுடன் உனது நட்பு வேண்டாம் என்று நினைத்தவாறு படுத்தேன். இரவு எனது கனவில் உனது தாயார் வந்து என்னுடன் கதைத்துச் சிரித்து விட்டுப் போனார். அவாவிடம் நான் எத்தனை நாட்கள் உணவு பெற்றுச் சாப்பிட்டனான். அதனால் தான் உன்னை என்னால் மறக்க முடியவில்லை. அதை நீ எனது பலவீனமாகக் கருதுகிறாய்'' என்று கலங்கினார் கணநாதன்.

அதைக் கேட்டுத் துடிதுடித்தார் பரமேஸ்வரன்; "உயர்குடியில் பிறந்தவனை, தனக்கு வருகின்ற பழிக்கு அஞ்சுபவனை பொருள் கொடுத்தாவது நட்புக் கொள்ள வேண்டுமென்பார்கள். அதனால்தான் கஜேந்திரனை நான் நட்பாக்கிக் கொண்டுள்ளேன். அவனுடன் கதைத்தால் எனது கெட்ட குணங்கள் யாவும் அற்றுப் போய்விடும். நீ கவலைப்படாதே. இனிமேல் நான் அமிர்தினியுடனோ அல்லது வாதவூரனுடனோ எக்காரங் கொண்டும் தொடர்பு கொள்ள மாட்டேன். அவர்கள் தேடி வந்தாலும் உறவு கொள்ள மாட்டேன்'' என்றார் பரமேஸ்வரன்.

''கண்டபடி வாக்குக் கொடுக்காதைங்கோ. பின் அதைக் காப்பாற்றுவது கஷ்டம்'' என்று கூறியபடி அங்கு வந்தார் தணிகாசலம். பரமேஸ்வரன் கணநாதனைப் பார்த்தார்; ''என்ன…?

அவருக்கும் சொல்லி விட்டாயா...?” என்று கேட்பதைப் போலிருந்தது அப்பார்வை.

“அவருக்கு நான் எதுவும் சொல்லவில்லை” என்று பேசாது தலையாட்டினார் கணநாதன். ஒருநிமிடம் பரமேஸ்வரனின் உயிர் நகரலோகம் சென்று வந்தது.

**794. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.**

உயர்ந்த குடியில் பிறந்து, தனக்கு வரக் கூடிய பழிக்குஅஞ்சுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நண்பனாக்கிக் கொள்ளல் வேண்டும்.

## ஆராய்ந்து கொள்

பரமேஸ்வரனது வீட்டுக்கு வாதாரவூரன் வந்தார். பரமேஸ்வரன் அவரை வரவேற்று ஆசனத்தில் இருத்தினார். தணிகாசலத்தோடும் காமாட்சியம்மாளோடும் வாதாரவூரன் நல்ல படியாகப் பேசுவார். அதனால் இருவரும் அவரை மிகவும் நல்லவரென நினைத்திருந்தனர். வாதவூரன் வந்தால்தணிகாசலம் அவருடன் மணிக்கணக்காகப் பேசுவார். நாவலர் ஸ்ரீவித்தியா மகாணகபதி ஆலயத்திற்கு அழைத்துச் செல்வார்; சுவாமியாரை அறிமுகஞ் செய்து வைத்தமையால் வாதவூரன் வரும் போதெல்லாம் சுவாமியாரைத் தரிசிக்காமல் சென்றதில்லை.

அன்று வீட்டுக்கு வந்த வாதாரனை பரமேஸ்வரன் மகாகணபதி ஆலயத்திற்கு

அழைத்துச் சென்றார். பகல் பதினொரு மணிக்கு அவர்கள் மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றமையால் அங்கு எவரும் இருக்கவில்லை. முன்மண்டபவாசலில் விசாலித்துக் கிளை பரப்பியிருந்த வேப்பமர நிழலில் இருவரும் மகா கணபதியை வணங்கி விட்டு அமர்ந்தனர். வாதவூரன் அமர்ந்ததும் பரமேஸ்வரன் சொன்னார்; ‘‘வாதவூரன், நீங்கள் எனது வீட்டுக்கு வருவதை நான் விரும்பவில்லை. இப்போ எதற்காக வந்திருக்கிறீர்கள். நான் கொழும்பில் இருந்த போது உங்களோடு நட்புக் கொண்டிருந்தது உண்மைதான். ஒரு நண்பன் என்று சொல்பவன் தனது நண்பன் நீதிக்குப் புறம்பான செயல்களைச் செய்யும் போது கண்டிக்க வேண்டும். உலக நடைமுறைக்கேற்ற வகையில் நடக்கக்கூடியவனாக இருத்தல் வேண்டும். அத்துடன் உலக நடைமுறையை அறியவல்லவனாக இருத்தல் வேண்டும். இத்தகைய பண்புகள் யாவும் கணநாதனிடமும் விநாயகரத்தினத்திடமும் உண்டு. நான் தீய செயல்களைச் செய்யும் போது, அதாவது அமிர்தினியுடன் நான் கள்ள உறவு வைத்திருந்த போது அவர்கள் இருவரும் என்னைக் கண்டித்தனர்; இடித்துரைத்தனர். அத்துடன் உலக நடைமுறையை அறிந்து என்னை அதன்படி நடக்கும்படி கண்டிப்புடன் கூறினர். அதனால் அவர்கள் தான் உண்மையான நண்பர்கள்.’’ கோபத்துடன் கூறிய பரமேஸ்வரன் பேசுவதை நிறுத்தி விட்டு மூச்சு விட்டார்.

வாதவூரன் திகைத்துப்போனர். அவருடன் பழகிய காலங்களில் அவர் அப்படி ஒருபோதும் கோபமாகக் கதைத்ததில்லை.

“இப்போது ஏன் வந்தீர்கள்? அமிர்தினி கஷ்டப்படுகிறாள். அவர் இன்னொருவனின் மனைவியானாலும் உங்கள் மீது அன்பும் அக்கறையும் உள்ளவள். அதனால் தான் அவள் உங்களுடன், அன்பாகப் பழகினாள். இப்போது அவள் கஷ்டப்படுகிறாள். நீங்கள் அவளுடன் அன்பாகப் பழகிக் கூடிக் குடும்பம் நடத்தினீர்கள். அதனால் அவளுக்கு உதவி செய்யுங்கள் என்று சொல்லத்தானே வந்தீர்கள்.” ஆத்திரத்துடன் கேட்டார் பரமேஸ்வரன்.

வாதவூரனுக்கு வாய்திறந்து பேசச் சற்றுப் பயமாக இருந்தது; “நான் அமிர்தினியுடன் கொண்ட உறவு மிகவும் தவறானது; பாவமானது; கேவலமானது; இழிவானது என்று ஏன் உங்களால் சொல்ல முடியவில்லை. என்னை நல்ல நண்பானகக் கருதியிருந்தால் நீங்கள் கண்டித்திருப்பீர்கள். ஆனால் நீங்கள் அந்தக் கள்ள உறவை ஆதரித்தீர்கள். அந்த உறவை நான் வெறுத்தொதுக்கிய போதெல்லாம் அவளுக்காகப் பரிந்து பேசி அவளின் தொடர்பைப் புதுப்பித்தீர்கள். நான் அவளது உறவில் கெட்டழிந்து போன போதுங் கூட நீங்கள் அவளுக்காகப் பரிந்து பேசியதால் தான் நான் மனமிரங்கிக் கேவலப்பட்டேன். உங்களுக்கு உலக நடைமுறை தெரியாதா….? உலகநடை முறை தெரியாத உங்களுடன் நட்பு வைக்க எனக்கு விருப்பமில்லை. தயவு செய்து இனிமேல் இங்கு வந்து என்னைச் சந்திக்காதீர்கள்.”

“நான் இங்கு சென்ற மாதம் வந்தபோது அமிர்தினி மிகவும் கஷ்டப்படுகிறாள். அவளுக்கு

உதவி செய்யுங்கள் என்றுசொன்னனான் தான்'' வாதவூரன் பேசிக் கொண்டிருக்கையில் பரமேஸ்வரன் குறுக்கிட்டுச் சொன்னார்; ''சரி சொன்னதற்காக கொஞ்சப் பணம் தந்தேன். அதைக் கொண்டு சென்று இரகசியமாகக் கொடுத்திருக்கலாம். நீங்கள் பணத்தைக் கொடுத்த விஷயம் ஊர் முழுவதற்கும் தெரிந்து விட்டது. பணத்தை நான் தரும்போது, நான் பணம் தரும் விஷயம் யாருக்கும் தெரியக் கூடாதென்று சொல்லித்தான் தந்தேன். ஆனால் அந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்து விட்டது. ஒரு மனிதன் தவறு செய்வது இயற்கை. அது தவறென்று தெரிந்து அவன் திருந்திய பின் அவனைத் தொடர்ந்தும் அத்தவறுகளைச் செய்யத் தூண்டுவதா நண்பனின் இயல்பு? நீங்கள் எனது நண்பரல்ல. அதனால் எனது வீட்டுக்கு இனிமேல் வரவேண்டாம்'' என்று கோபமாகக் கூறினார் பரமேஸ்வரன்.

---

**795. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.**

---

தீய செயல்களைச் செய்யும் போது வருத்தும் படியாக இடித்துச் சொல்லி, உலக நடைமுறையை அறிய வல்லவனாகவும் உள்ளவனின் நட்பை ஆராய்ந்து கொள்ளல் வேண்டும்.

## கேட்டின் நன்மை

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? நான் அமிர்தினியின் மீது பாசம் வைத்திருக்கிறேன். உங்கள் மீது அளவில்லாத அன்பு அதாவது நட்பு

வைத்திருக்கிறேன். உங்களை நான் ஒரு சிறந்த நண்பனாகத்தான் இப்பொழுதும் கருதுகிறேன். அமிர்தினி நல்லவள்; உங்கள் மீது அளவில்லாத அன்பு கொண்டவள்'' என்று வாதவூரன் சொல்லும் போது பரமேஸ்வரன் ஆத்திரத்துடன் குறுக்கிட்டார்; ''எதை வைத்துக் கொண்டு அவளை நல்லவள் என்கிறீர்கள். அவள் எனக்கு எவ்வளவு தீமைகள் செய்தவள் என்று உங்களுக்குத் தெரியும்...''

''அமிர்தினி உங்கள் தொழிற்சாலையின் முன்னேற்றத்திற்காகத் திட்டமிட்டுக் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றியவள்'' என்றார் வாதவூரன்.

பரமேஸ்வரன் சிரித்தார்; ''நீங்கள் சொல்வது உண்மை. அவள் தனது குறிக்கோளை நிறைவேற்ற நன்கு திட்டமிட்டுத் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றியவள். அவளது குறிக்கோள் தொழிற்சாலையின் நிர்வாகத்தைத்தான் ஏற்றுக் கொள்வது. அதற்காக அவள் என்னைத் தேடி இங்கும் வந்தாள்.'' என்றார் பரமேஸ்வரன்.

''நான், நீங்கள் தந்த பணத்தைக் கொண்டு சென்று அமிர்தினியிடம் கொடுத்து விட்டேன். சிலவேளைகளில் மதுபாவிப்பது உங்களுக்குத் தெரியும். ஒருநாள் சற்று அதிகமாகக் குடித்துவிட்டு கூடக் கதைத்து விட்டேன்'' கவலைப்பட்டார் வாதவூரன்.

''குடிகாரர்களுடன் நட்பு வைத்தால், அது பலரும் இருக்குமிடத்தில் வெளியாகி அவமானத்தை

உண்டு பண்ணும்” என்று எனது தந்தையார் கூறுவார். அதனால் நான் உங்களுடன் நட்பு வைக்கவிரும்பவில்லை.’’ என்றார் பரமேஸ்வரன்.

வாதவூரன் அவர் கூறுவதைக் கருத்தில் கொள்ளவில்லை; ‘‘என்னுடன் அமிர்தினியும் வந்து உங்களைச் சந்திக்க விரும்பினாள். நான் தான் வேண்டாமென்று கூறினேன். அமிர்தினி தற்பொழுது தொழில் இல்லாமலிருக்கிறாள். அவள் புதிதாக ஒரு தொழிற்சாலையை தொடங்கவிருக்கிறாள்.’’ வாதவூரன் பேசிக் கொண்டிருக்கும் போது பரமேஸ்வரன் குறுக்கிட்டுச் சொன்னார்; ‘‘அவள் தனது தேவைக்கேற்ற மாதிரிப் பணக்காரர்களை வளைத்துப் பிடிப்பதில் வல்லவள். தொழிற்சாலையை ஆரம்பிக்க யாரைப் பிடித்திருக்கிறாள்’’

‘‘நீங்கள் அமிர்தினியை அப்படிக் கேவலமாக நினைக்கக் கூடாது. அவள் உங்கள் ஒருவரோடுதான் உறவு வைத்திருந்தவள்.’’

பரமேஸ்வரன் பலத்துச் சிரித்தார்; ‘‘ஒருபெண் தனது கணவனை விட்டுவிட்டு இன்னொருவனோடு தொடர்பு கொண்டாளென்றால் அவள் இன்னும் பலருடன் தேவை கருதி உறவு கொள்ளத் தயாராக இருப்பாள் என்றுதான் அர்த்தம். அவள் என்னுடன் உறவு வைத்திருந்த காலத்தில் இன்னொருவனுடன் மோட்டார் வாகனத்தில் இரவு பகலாகத் திரிந்தவள். நான் கேட்டால் அவன் தனது உறவினன் என்றவள். அவளுக்கு உலகத்தில்

உள்ளவர்களெல்லாம் உறவினர்கள். நீ எனக்கு கதை சொல்ல வேண்டாம்'' என்றார் பரமேஸ்வரன்.

வாதவூரனுக்குத் தான் வந்த விஷயம் சரிப்பட்டு வராதென்று தெரிந்தது. பரமேஸ்வரனிடம் பணம் வாங்கிக் கொண்டு சென்று கொடுத்தால் அமிர்தினி அவருக்கும் கொடுப்பாள். அவர் இம்முறை பணம் தரமாட்டாரென்று தெரிந்தது. அது வாதவூரனுக்குக் கவலையைக் கொடுத்தது.

''ஒருவனுக்குக் கேடு வருவதிலும் நன்மை இருக்கிறது. கேடுவரும் போது நண்பர்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம்; ''கேடுதான் நண்பனை அறிந்து கொள்ளும் அளவுகோள்" என்று பெரியவர்கள் கூறுவார்கள். எனது தொழிற்சாலையில் நட்டம் வந்த போதும், தொழிற்சாலை தீப்பற்றி எரிந்து நாசமாகிய போதும் எனக்கு உதவியவர்கள் தான் உண்மையான நண்பர்கள். கணநாதனும், விநாயகரத்தினமும் தான் எனக்குதவி னார்கள். மற்றவர்களெல்லோரும் செத்த நாயில் தெள்ளுக் கழன்று போவதைப் போல மெல்லக் கழன்று விட்டனர். அதில் முதல் சென்றது அமிர்தினிதான். அடுத்து குமரகுரு. இப்ப இரண்டு பெரும் மீண்டும் தமது சுயநலத்திற்காக என்னை வந்தடைந்து மயக்கப் பார்க்கிறார்கள். நான் பாடம் படித்து விட்டேன். இனிக் கடைசி வரையும் அவர்களோடு உறவு வைக்க மாட்டேன். அவர்களையும் என்னோடு தொடர்பு வைக்க வேண்டாமென்று சொல். அவர்களுடன் தொடர்பு வைத்தால் உண்மையான நண்பர்கள் என்னைப் பிரிந்து சென்று விடுவார்கள்'' என்றார் பரமேஸ்வரன்.

வாதவூரனுக்குத் துக்கமாக இருந்தது. 'தான் இனி எதைக் கதைத்தாலும் பரமேஸ்வரன் ஏற்கமாட்டார்' என்று தெரிந்து கொண்டார்.

**796. கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்.**

கேடு வருவதிலும் ஒரு வகை நன்மை உண்டு; அக்கேடு நண்பனின் இயல்புகளை அளந்து பார்க்கக் கூடிய அளவு கோல் ஆகும்.

## சிறந்த செல்வம்.

பரமேஸ்வரன், கஜேந்திரனைத் தேடி அவனது வீட்டுக்கு வந்தார். அப்போது கஜேந்திரன் ஓய்வாக இருந்தான். பரமேஸ்வரனைக் கண்டதும் அவன் எழுந்து வந்து, அவரை அழைத்துச் சென்று முன் வாசலில் இருந்த நாற்காலி ஒன்றில் அமரச் செய்து விட்டுத் தானும் அவருக்கருகில் அமர்ந்து கொண்டான்.

பரமேஸ்வரன் எதுவும் பேசாமல் யோசித்துக் கொண்டிருந்தார். அவன் அவரைச் சந்திக்கும் வேளைகளிலெல்லாம் யோசித்தபடியே இருப்பார்; அதனால் அவராகக் கதையைத் தொடங்கட்டுமென்று பேசாது அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவர் மனம் குழம்பிய நேரங்களில் தான் அதிகமாக அவனைத் தேடி வருவார்.

“கஜன், அறிவுள்ளவர்கள் கூட உலக நடைமுறைகளை அறியாது பெருந்தவறுகள் இழைத்து வருகிறார்கள். நான் செய்த சில தவறுகள் இப்போது என்னை அச்சுறுத்துகின்றன. நீ வயதில் குறைந்தவனானாலும் அறிவுள்ளவன். உலக நடப்பைப் புரிந்து கொண்டவன். நட்பு உண்டாவதற்கு வயது சமயம் சாதி என்பன குறுக்கே நிற்காது. அத்துடன் நட்பென்பது ஒருவருக்கொருவர் சிரித்து மகிழ்வதற்காக ஏற்படுவதில்லை. இதெல்லாம் உனக்குத் தெரியும். அதனால் தான் உன்னுடன் நட்புப் பூண்டேன். தணிகாசலம் நல்லவர். அவரிடம் மனதில் உள்ளவற்றை மனம் திறந்து கதைக்க எனக்கு விருப்பமில்லை. ஏனென்றால் அவர் இனத்தவர். அதனால் தான் நட்புக் கொள்வதற்குச் சகல தகுதிகளுமுடைய உன்னுடன் நட்புப் பூண்டேன்.” என்று கூறிவிட்டு நிறுத்தினார் பரமேஸ்வரன்.

“அவருடன் நட்புப் பூணமுன் பரமேஸ்வரன் நல்லவர்; தீயவற்றை விரும்பாதவர்; கண்ணியவான் என்று நினைத்திருந்த அவனுக்கு அவர் அமிர்தினியின் கதைகளைக் கூறிய பின் அவரின் மீதிருந்த நன்மதிப்புக் குறைந்து விட்டது. இந்த வயதில் இப்படி ஒரு தவறான உறவு தேவைதானா என்ற நினைவு அவனது மனதில் எழுந்தது. அதைவிட வாதவூரன் முன்பு வந்த போது அவரிடம் அமிர்தினிக்குப் பணங் கொடுத்தனுப்பியதைக் கூறிய பின்பு, “அவர் மீண்டும் அமிர்தினியின் உறவை விரும்புகிறாரோ” என்றும் எண்ணினான்.

“ஒருவனுக்குச் சிறந்த செல்வம் என்று சொல்லக்கூடியது, அவன் அறிவற்ற வர்களின்

நட்பை நீக்குவதாகும். நான் இப்போது பலருடைய நட்பை நீக்கி விட்டேன். இரண்டொருவரோடு மட்டும் தான் நான் நட்பு வைத்திருக்கிறேன். நான் இதைக் கூறுவதன் மூலம் நீ, எனது நட்பை விலக்க வேண்டும் என்றும் நினைப்பாய். ‘‘அறிவற்றவர்களின் நட்பைத்தான் நீக்க வேண்டும்’’ என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். வாதவூரன் கற்றாலும் நல்லவற்றை ஒருபோதும் எனக்குச் சொல்வதில்லை. அவன் தீயவற்றையே கூறுவான். அதனால்தான் கற்ற போதும் அவன் அறிவில்லாதவன் என்று நினைத்து அவனை நீக்கி விட்டேன். நீ அறிவு மிக்கவன்’’ என்று கூறியவாறு தனது ஆசனத்தால் எழுந்து வந்து கஜேந்திரனது கையைப் பிடித்தார். அவரது கண்கள் கலங்கின.

கஜேந்திரன் அவர் அப்படிச் செய்வாரென நினைக்காததால் சற்றுத் தடுமாறினான்; ‘‘நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காதீர்கள். உங்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்வேன். தீய செயல்களைச் செய்யக்கூடாது என்று நீங்கள் நினைத்தால் மட்டும் போதாது. அதைச் செயலிலும் காட்ட வேண்டும்.’’ என்றான் கஜேந்திரன்.

‘‘நான் தவறு விட்டது உண்மைதான். நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன் என்று இப்பொழுதும் என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அமிர்தினி நன்கு திட்டமிட்டுத் தான் செயலாற்றியிருக்கிறாள். அவள்தான் வலிய என்னுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டாள். சிரித்துக் கதைப்பது, ஆடையை நழுவவிடுவது, உரசியபடி கதைப்பது, ஏதாவது பொருட்களை வாங்கும் போது எனது கையையும் சேர்த்துப்

பிடிப்பது. இப்போது நினைத்துப் பார்த்தால் அவளது செயல்கள் ஒவ்வொன்றும் திட்டமிடப் பட்டே செய்யப்பட்டன என்று தெரிகிறது. இப்படி ஒரு பெண் இருப்பாளா என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவளது தொடர்பை அறுக்க உன்போன்ற அறிவுள்ள ஒருவனின் துணை எனக்குத்தேவை.'' என்றார் பரமேஸ்வரன்.

''நான் என்னாலான உதவிகளைச் செய்வதாக ஒப்புக் கொண்டு விட்டேன். பிறகேன் கவலைப்படுகிறீர்கள்'' என்று சிரித்தான் கஜேந்திரன்.

**797. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்**
**கேண்மை ஒரிஇ விடல்.**

ஒருவனின் சிறந்த செல்வம் என்று சொல்லப்படுவது அவன் அறிவில்லாதவருடன் நட்புக் கொண்டிருந்தால், அந்த நட்பை நீக்கி அவரைக் கைவிடுவதாகும்.

## தொடரக்கூடாத நட்பு

''எனது தொழிற்சாலை எரிந்த போது எனது நண்பர்கள் பலர் ஒப்புக்கு வந்து விசாரித்து விட்டுச் சென்றனர். சரவணபவன் என்ற பெரியதொரு தொழில் அதிபர் என்னுடன் நட்பாக இருந்தார். அவருக்கு ஒருமுறை நிதிநெருக்கடி ஏற்பட்டு விட்டது. நான் அவருக்குத் தேவையானளவு நிதியுதவி செய்தேன். அவர் என்னிடம் பெற்ற பணத்தை இரு வருடங்களின் பின்பே வட்டியில்லாமல் திருப்பித் தந்தார். என்னிடம்

அப்போது ஏராளமான பணம் இருந்தது. அதனால் நான்பணத்தைத் தரும்படி வற்புறுத்தவில்லை. ஆனால் எனது தொழிற்சாலை எரிந்த போது சரவணபவன் ஒப்புக்கு வந்து போனாரே தவிர எனக்கு உதவி செய்யவில்லை. நான் அவரிடம் உதவி கோரிய போதும் கூடச் செய்யவில்லை. அவரைத் தேடி நான் வீட்டுக்குச் சென்ற போது அவர் உள்ளே இருந்து கொண்டு இல்லை என்று கூறுமாறு சொல்லி விட்டார். அவர் இன்று எனது வீட்டுக்கு வருவதாகத் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார். நான் அவரைச் சந்திக்க விரும்பவில்லை. அதனால் இங்கு கொஞ்சநேரம் இருக்கப் போகிறேன்.'' என்றார் பரமேஸ்வரன்.

``சரி நன்றாக இருங்கள்'' என்றார் கஜேந்திரன்.

மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார் பரமேஸ்வரன். அவர் யோசனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட கஜேந்திரன் கூறினான்; ``ஐயா, நீங்கள் யோசித்துக் கொண்டிருப் பதைப் பார்த்தால் பழைய பிரச்சினைகளைப் பற்றி எண்ணுகிறீர்கள் போலத் தெரிகிறது. நடந்து முடிந்த செயல்களைப் பற்றி எண்ணுவதால் மனவருத்தம் தான் உண்டாகும். நடந்து முடிந்த செயல்களை நினைவில் வைத்துக் கொள்ளக் கூடாது. அதுவும் தீய செயல்களானால் உடனுக்குடன் மறந்து விடுதல் வேண்டும். அத்துடன் ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணக்கூடாது. ஊக்கம் குறைந்த செயல்களை நினைப்பதன் மூலம் மனம் பலவீனப்படும்; நிம்மதியிராது; அச்செயல்கள் தோல்வியைத்

தருவதால் மனிதன் பலவீனப்பட்டு விடுவான்'' என்றான் கஜேந்திரன்.

''உண்மைதான் தம்பி'' என்று பரமேஸ்வரன் கூறிக் கொண்டிருக்கையில் ஒரு மோட்டார் வண்டியொன்று வந்து கஜேந்திரனின் வீட்டுக்கு முன்னால் நின்றது. அதலிருந்து தணிகாசலம் இறங்கி வந்து சொன்னார்; ''உங்கள் நண்பரான சரவணபவன் மோட்டார் வண்டியுள் இருக்கிறார். இன்று உங்களைச் சந்திக்க வருவதாகக் கூறியவராம், மறந்து விடீர்களா'' என்று கேட்டார் தணிகாசலம்.

எழுந்து வந்த பரமேஸ்வரன் மோட்டார் வண்டியுள் இருந்த சரவணபவனைப் பார்த்துச் சொன்னார்; ''என்னிடம் பணம் இல்லையென்றும், நீங்கள் இங்கு வரவேண்டாமென்றும் எத்தனை தரம் தொலைபேசியில் சொன்னேன். என்னிடம் இப்போது பணமில்லை. நீங்கள் போகலாம் என்றார்'' பரமேஸ்வரன்.

''பரமேஸ், மிகவும் சிக்கலானதொரு பிரச்சினையில் மாட்டுப்பட்டு விட்டேன். உன்னைவிட்டால் எனக்கு வேறு எவரும் உதவி செய்ய மாட்டார்கள். உன்னிட மில்லாவிட்டால் கணநாதனிடமாவது பெற்றுத்தா''.

''நான் அவருடன் முன்பு போலப் பழகுவதில்லை. அவர் எனக்குத் தர வேண்டிய பணத்திற்குகே தவணை சொல்கிறார். அவரிடம் நான் பணங் கேட்டால் எனக்கு என்ன

தேவையென்று கேட்பார். நீ நேரடியாக அவரைக் கேட்டுப்பார்’’ என்றார் பரமேஸ்வரன்.

‘‘அவர் எனக்கு முன்பும் உதவி செய்யவில்லை. பலமுறை கேட்டும் அவர் அதைப்பற்றிக் கதைக்கக் கூட இல்லை. நீதான் முன்பு நான் கேளாமலே உதவினாய். பின் நீ தந்த பணத்தைக் கேட்கவே இல்லை. நானாகத்தான் கொண்டு வந்து தந்தேன்” அழுவது போலச் சொன்னார் சரவணபவன்.

‘‘அப்போ நீ கேட்காமலே தந்தேன். பின் நீயாகக் கொண்டு வந்து தரும்வரை கேட்காமலே இருந்தேன். இப்போது என்னிடம் பணம் இருந்தால் அப்படித்தான் செய்வேன். என்னிடம் பணம் இல்லை’’ என்று கூறிவிட்டு அவருடைய பதிலை எதிர்பாராது தனது மோட்டார் வண்டியில் ஏறிச்சென்றார் பரமேஸ்வரன்.

சரவணபவன், பரமேஸ்வரன் அப்படி செய்வாரென எதிர்பார்க்கவில்லை. ‘‘தான் கஷ்டப்பட்ட போது நான் உதவாததால்தான் தனது நட்பைத் துண்டித்து விட்டார்’’ என்று நினைத்தார் சரவணபவன்.

---

**798. உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க**
**அல்லல்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு.**

---

ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை ஒருவன் எண்ணக் கூடாது. அது போலத் துன்பம் வந்த போது கைவிடுபவரின் நட்பைத் தொடரக் கூடாது.

## இறப்பெனும் துன்பம்

பரமேஸ்வரன் முகத்திற்கு நேரே, அதுவும் பலர் முன்னிலையில் அப்படிச் சொல்வாரென எதிர்பாராத தணிகாசலமும் கஜேந்திரனும் சற்றுத் திகைத்து விட்டனர். சரவணபவனால் அவர்களது முகத்தைப் பார்க்க முடியவில்லை. சரவணபவன் தணிகாசலத்துடன் மிகவும் அன்னியோன்யமாகப் பழகியவர். அத்துடன் தணிகாசலமும் அவருடன் மிகவும் அன்னியோன்யமாகப் பழகுபவர். அத்துடன் தணிகாசலம் அவரை மிகவும் பெரியதொரு கனவானாக நினைத்திருந்தார். கஜேந்திரனுக்கு அவரைத் தெரியாது. அன்றுதான் அவன் முதன்முதலாக அவரைக் காண்கிறான். எனினும் அவரைப் பற்றி நிறையப் பரமேஸ்வரன் கஜேந்திரனுக்குக் கூறியிருந்தார்.

"பரமேஸ்வரன், உங்களது நெடுங்கால நண்பர் என்று முன்பு ஒருமுறை எனக்குக் கூறியுள்ளீர்கள். என்னை விட உங்களுக்குத்தான் அவரைப் பற்றித் தெரியும். நான் இரண்டு மூன்று மாதகாலமாகத்தான் பழகுகிறேன். எனினும் அவரைப் பற்றிச் சிறிது அறிந்து வைத்திருக்கிறேன். அவர் முன்கோபக்காரரே தவிர கூடாதவர் அல்ல. நீங்கள் பெருந்தொகையாகப் பணம் தேவையென்று சொல்கிறீர்கள். அவரை இன்னொருமுறை சந்தித்துக் கேட்டுப் பாருங்கள்" என்றார் தணிகாசலம்.

கஜேந்திரன் எதுவும் பேசவில்லை. வேர்த்து விறுவிறுக்க நின்ற சரவணபவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது; "கஜன், சரவணபவன் மிகவும் கெட்டவன். நான் அவனுக்கு அடிக்கடி பண

உதவி செய்துள்ளேன். சுருக்கமாகச் சொல்லப்போனால் நான் உதவா விட்டால் அவனை நாய் இழுத்துக் கொண்டு போய்விடும். அப்படிப்பல முறை நான் உதவிய போதும் நான் மிகவும் மனம் நொந்து, பணத்தை இழந்திருந்த போது எனக்கு அவன் உதவி செய்யவில்லை. தன்னிடம் பணம் இல்லாவிட்டால் இன்னொருவரிடம் கடனாகப் பெற்றுத் தன்னும் தந்திருக்கலாம். இன்னொருவரை விட்டு தனக்கு என்று சொல்லாமல் எனது தொழிற்சாலையை விலை பேசியவன். இன்று வருகிறான். அவனுக்குச் செருப்பால் அடித்தல் வேண்டும்'' என்று சிறிது நேரத்திற்கு முன் பரமேஸ்வரன் ஆத்திரத்துடன் கூறியது நினைவுக்கு வந்தது; ``பரமேஸ்வரன் மிகவும் நல்லவர். ஆனால் பிடிவாதக்காரன். கடைசிவரையும் தான் நினைத்ததைத் தான் செய்வார் என்று அவருடன் பழகிய சில நாட்களுக்குள்க் கஜேந்திரன் தெரிந்து கொண்டான்

``அவரைச் சந்திப்பதால் எந்த விதமான பிரயோசனமும் இல்லை. நான் பலமுறை தொலைபேசியில் கதைத்தேன். அவர் உதவி செய்ய முடியாதென்று திட்டவட்டமாக மறுத்து விட்டார். அதனால்தான் அவருக்கு அறிவித்து விட்டு வந்தேன். என்னைச் சந்திக்க விரும்பாததால் தான் அவர் இங்கு வந்திருந்தார். அவர் பிடிவாதக்காரர். சொன்ன சொல்லை மாற்றமாட்டார். இப்போது எனக்குச் சரியான பண நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அவரிடம் பணம் இருக்கிறது. அப்படி அவரிடம் பணமில்லாவிட்டால் வேறு ஒருவரிடம் எனக்கும் பணம் கொடுக்குமாறு கூறுவாரே தவிர இப்படி முகத்திற்கு நேரே கூறி விட்டுச் செல்ல மாட்டார்''

என்று கவலைப்பட்டார் சரவணபவன். அப்போது பரமேஸ்வரனின் மோட்டார் வண்டி அங்கு வந்து நின்றது. பரமேஸ்வரன் இயந்திரத்தை நிறுத்தாது கூறினார்; "மச்சான், வந்து வண்டியில் ஏறுங்கோ. இவன் உங்களை வீட்டிற்குக் கூட்டி வருஞ் சாட்டாகக்க கூட எனது வீட்டுக்கு வருவதை நான் வீரும்பவில்லை. நண்பன் கஷ்டப்படும் போது தன் நலங் கருதாது உதவுவது தான் நட்பு. இவன் துன்பப்படும் போது நான் பல தடவைகள் உதவி செய்திருக்கிறேன். ஆனால் எனக்குத் துன்பம் நேர்ந்த போது இவன் என்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டான். இப்படியானவர்களின் நட்பை இறக்கும் போது நினைத்தாலுங் கூட அத்துன்பம் இறப்பதை விட மோசமான துன்பத்தைத் தரும். அதனால் தான் நான் பலருக்கு முன் இவனை ஏசினேன். நீங்கள் வாருங்கள்" என்றார்.

தணிகாசலம் எதுவும் பேசாமல் சென்று பரமேஸ்வரனின் மோட்டர் வண்டியில் ஏற, அது விரைந்து சென்றது. சரவணபவன் வேகமாகச் செல்லும் அவ்வண்டியைப் பார்த்துக் கொண்டு நின்றார். தன்னில் உள்ள அளவுக்கதிகமான கோபந்தான் அவரை அப்படி வேகமாக வண்டியைச் செலுத்த வைத்தது என்று அவருக்குத் தோன்றியது; "நீர் யார் என்று எனக்குத் தெரியவில்லை. நான் வாறன் தம்பி." என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் சரவணபவன். அவரது வண்டி மறைந்த பின்பும் அவ்விடத்திலேயே நின்றான் கஜேந்திரன்.

---

**799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடும்காலை**
**உள்ளினும் உள்ளம் சுடும்.**

---

துன்பம் வந்த போது விட்டுப் பிரிபவரின் நட்பை இறக்கும் போது நினைத்தாலும் நினைத்த உள்ளத்தை அது சுடும்.

## கொடுத்து விடு

சரவணபவன் மிகவும் துயரத்துடன் நின்ற கோலம் அடிக்கடி கஜேந்திரனது மனதில் தோன்றித் துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. சரவணபவன் நடந்து கொண்ட முறைக்குப் பரமேஸ்வரன் நடந்து கொண்ட முறை சரியென்று கஜேந்திரனுக்குத் தோன்றிய போதும் பரமேஸ்வரன் நடந்து கொண்ட முறை அவனுக்கு வருத்தத்தைக் கொடுத்தது. மிகவும் நல்லவரான பரமேஸ்வரனை மற்றவர்கள் தமது சுயதேவைக்காகக் கெடுக்கிறார்கள் என்றே அவன் நினைத்தான்; “அமிர்தினியைப் பற்றி பரமேஸ்வரன் கூறியதிலிருந்து அவள் மிகவும் கச்சிதமாகத் திட்டமிட்டுச் செயலாற்றியவள் என்பது அவனுக்குப் புரிந்தது. முற்றும் துறந்த ஞானிகள் கூடத் திட்டமிட்டு பெண்களால் தமது தவபலத்தை இழந்துள்ளார்கள். ஒருவன் சரியாகத் திட்டமிட்டால் எதையுஞ் செய்யலாம். அதன்படி அமிர்தினி நன்கு திட்டமிட்டு இளகிய மனமுடைய பரமேஸ்வரனைத் தனது கைக்குள்ப் போட்டுச் செயலாற்றியிருக்கிறாள்” என்றே அவனுக்குத் தோன்றியது. அத்துடன் சரவணபவனின் தோற்றம் அவனது மனதில் தோன்றி வேதனையைக் கொடுத்தது. அதனால் தனது துவிச்சக்கரவண்டியை எடுத்துக் கொண்டு பரமேஸ்வரனின் வீட்டுக்குச் சென்றான். பரமேஸ்வரனும் தணிகாசலமும் வேப்ப மரநிழலில் இருந்தனர். கஜேந்திரனைக் கண்டதும்

தணிகாசலம் சொன்னார்; “கஜேந்திரனுக்கு இழகிய மனம். சரவணப வனுக்காகக் கதைக்க வருகிறான்” என்றார்.

கஜேந்திரன் வந்து பரமேஸ்வரன் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான். பரமேஸ்வரன் கஜேந்தினைப் பார்த்துக் கொண்டிருந்தாரே தவிர எதுவும் பேசவில்லை.

“எனக்கென்றால் நீங்கள் நடந்து கொண்ட விதம் சரியெனப்படுகிறது. துன்பம் வரும் போது நண்பர்கள் உதவிகள் ஒத்தாசைகள் புரிதல் வேண்டும். அதை விட்டு விட்டுத் துன்பம் நேர்ந்த போது பிரிந்து செல்கின்றவர்களின் நட்பை நினைத்தால் இறக்கும் போது கூடப் பெருந்துன்பமேற்படும் என்று நீங்கள் கூறுவது மிகவும் சரியானது. இருந்தாலும்...” என்று கூறிவிட்டு நிறுத்தினான் கஜேந்திரன்.

அவன் என்ன சொல்லப் போகிறான் என்று தணிகாசலத்திற்கு விளங்கியதால் அவர் சிரித்தார். பரமேஸ்வரனுக்குச் சிரிப்பு வரவில்லை. அவரது முகம் கோபந் தணியாமையால் இறுகி இருந்தது.

“நீ நினைத்ததைச் சொல்” என்றார் தணிகாசலம்.

“பரமேஸ்வரன் ஐயா மிகவும் நல்லவர். அவருக்குத் தாங்க முடியாதளவிற்குக் கோபம் வந்தமையால் தான் அவர் எமக்கு முன் அப்படி நடந்து கொண்டார். துரோகஞ் செய்தவனானாலும் அவருக்கு நீங்கள் உதவ வேண்டும்”

பரமேஸ்வரன் அவனை நிமிர்ந்து பார்த்தார். ஆனால் எதுவும் பேசவில்லை. “குற்றமில்லாதவர்களின் நட்பை விரும்பி ஏற்றுக் கொள்ளல் வேண்டும். பண்பில்லாதவர்களின் நட்பை அவர்கள் விரும்பியதைக் கொடுத்துத் துண்டித்து விட வேண்டும்” என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நீங்கள் சரவணபவனின் நட்பைத் துண்டித்தது சரி. ஆனால் அவன் விரும்பியதைக் கொடுத்துத்தான் துண்டித்திருத்தல் வேண்டும்’’ என்றான்.

‘‘அவன் ரோசமில்லாதவன். அதனால் யாரும் அவனுக்கு உதவி செய்ய மாட்டார்கள். அவனது செயலை அவனுக்கு உணர்த்தியுள்ளேன். அவன் திரும்பவும் வருவான் நீ கவலைப்படாதே’’ என்று பரமேஸ்வரன் கூறிக் கொண்டிருக்கும் போது சரவணபவன் அங்கு வந்தான்.

‘‘நல்லவர்களின் நட்பைத் தான் தொடர்ந்து பேணுதல் வேண்டும். உன்னைப் போன்றவர்களின் நட்பை அவர்கள் கேட்டதைக் கொடுத்துவிட்டு துண்டித்தல் வேண்டும்’’ என்று கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கிறான். இப்போது என்னிடம் பணமில்லை. நான் கணநாதனுக்குச் சொல்கிறேன் அவரிடஞ் சென்று வாங்கு. இனிமேல் இந்தப் பக்கம் வராதே போ.’’ என்று சினந்தார் பரமேஸ்வரன்.

‘‘நன்றி, ஐயா, உங்களின் குணம் எனக்குத் தெரியும். பேசி விட்டுத் தருவீர்கள்’’ என்று கூறிவிட்டு நடந்தான் சரவணபவன்.

“என்னிடம் பணம் இருக்கிறது. இவனுக்குக் கொடுத்தால் அதைத் திருப்பித் தரும் சாட்டாக இங்கு வருவான். இவனது முகத்தில் விழிக்க எனக்கு விருப்பமில்லை” என்று பலமாகச் சொன்னார் பரமேஸ்வரன். அது சரவணபவனுக்குக் கேட்டது. அவன் கேளாதது போலச் சென்று கொண்டிருந்தான்.

---

**800. மருவுக மாசற்றார் கேண்மை ஒன்றுஈத்தும்**
**ஒருவுக ஒப்பிலார் நட்பு.**

---

குற்றமில்லாதவர்களின் நட்பை, விரும்பி ஏற்றுக் கொள்ளல் வேண்டும். ஒத்த பண்பில்லாதவருடைய நட்பைப் பொருளைக் கொடுத்தாவது கைவிடுதல் வேண்டும்.

## ஏற்றுக் கொள்

பரமேஸ்வரன் மோட்டார் வாகனத்தில் சென்ற போது விபத்துக்குள்ளானதால் மயக்கமுற்ற நிலையில் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதை அறிந்தவுடன் வைத்தியசாலைக்கு முதலில் வந்தவன் கஜேந்திரன். பட்டணத்திற்குத் தணிகாசலத்துடன் பரமேஸ்வரன் சென்ற போது எதிராக வந்த மோட்டார் வண்டியுடன் நேருக்கு நேராக அவரது வண்டி மோதியதால் இருவருக்கும் கடுங்காயங்கள் ஏற்பட்டன.

அன்று இரவு முழுவதும் கஜேந்திரன் தான் அவர்களுடன் துணையாக வைத்திய சாலையில் தங்கியிருந்தான். வத்சல்யன் கல்வி நிமிர்த்தம் முதல் நாள் கொழும்பிற்குச் சென்றிருந்தான். அத்துடன் கிராமத்தில் செய்தி பரவியதும் பலர் வைத்தியவாலைக்கு வந்தனர்.

மறுநாள்த்தான் பரமேஸ்வரனுக்கு மயக்கம் தெளிந்தது. அவர் மயங்கிய நிலையில் உருண்டு பிரண்டார்; பலமாக கத்தினார்; கால் கைகளை அடித்தார். வைத்தியர் வந்து அவரைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளும் படி கூறிவிட்டுச் சென்றார்.

தணிகாசலத்தின் இடது காலில் முறிவு ஏற்பட்ட போதும் அவர் சுயநினைவுடன் இருந்தார். பரமேஸ்வரனுடன் கஜேந்திரன் படும் கஷ்டத்தைப் பார்க்க அவருக்குக் கவலையாக இருந்தது. காமாட்சியம்மாள் கூலிக்கு யாராவது ஒருவரை அமர்த்திப் பரமேஸ்வரனைக் கவனிக்க வேண்டுமென விரும்பினாள். அதற்கு கஜேந்திரன் ஒப்புக் கொள்ளவில்லை. தான் கவனிப்பதாகக் கூறினான். அத்துடன் தணிகாசலத்தாலும் எழுந்து நடக்க முடியாது. அதனால் சிறுநீரைக் கழிக்க வேண்டுமானால் அதற்கென வைக்கப்பட்ட பாத்திரத்தில் தான் கழிக்க வேண்டும். இரவு அவர்களுடன் கஜேந்திரன்தான் நின்றான். அப்பாத்திரத்தை எடுத்துத் தரும்படி கஜேந்திரனைக் கேட்க தணிகாசலத்திற்கு ஒரு மாதிரியாக இருந்தது. அதனால் எழும்ப முயற்சித்தார். அதைக் கண்ட கஜேந்திரன் அவருக்கருகில் விரைந்து வந்தான். ‘‘இப்போது ஏன் எழும்ப முயற்சிக்கிறீர்கள். உங்களால் எழும்ப முடியாது’’ என்ற கஜேந்திரன்;

“சிறுநீர் கழிக்க போகிறீர்களா?” என்று கேட்டு விட்டு அப்பாத்திரத்தை எடுத்து வந்து அவர் கட்டியிருந்து வேட்டியை ஒதுக்கிப் பிடித்தபடி பாத்திரத்தைப் பிடித்தான்.

“நீ போ… நான் பாத்திரத்தைப் பிடிக்கிறேன்’’ என்றார் தணிகாசலம்.

“இல்லை விடுங்கோ. ஏன் வெட்கப்படுகிறீர்கள். நான் என்ன அன்னியனா…? உங்களது நண்பன். அடிக்கடி நீங்கள் என்ன சொல்வீர்கள்; “கஜன் நீ என்ரை பிள்ளை மாதிரி. ஆனால் நான் உன்னைப் பிள்ளை என்று நினைக்க மாட்டன். நான் உன்னை எனது உயிருக்குயிரான நண்பனாகத்தான் நினைத்திருக்கிறன். ஏனென்றால் எனது எல்லா விஷயங்களுக்கும் உன்னைத் தேவை என்றனீங்கள். பிறகேன் தயக்கம்’’ என்று கேட்டான்.

அவர் சிறுநீர் கழித்ததும் கஜேந்திரன் அப்பாத்திரத்தைக் கொண்டு சென்று கழிவறையில் கழுவி வைத்தான்.

மறுநாள் பரமேஸ்வரன் மயக்கம் தீர்ந்து எழுந்தார். இரவு முழுவதும் அவன் அவரோடு பட்ட கஷ்டங்களைப் பற்றித் தணிகாசலம் அவருக்குக் கூறியிருந்தார். நடுச்சாம வேளையில் பரமேஸ்வரன் உணர்வின்றி உடுப்புடன் மலம்கழித்ததையும் அதைக் கஜேந்திரன் துப்பரவு செய்ததையும் கூறினார்.

இரண்டு தினங்களின் பின் இருவரும் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு வந்தனர். அவர்கள் வீட்டுக்கு வந்தன்று தான் கொழும்பிலிருந்து வத்சல்யன் வந்தான். அவன் வந்தபோது கஜேந்திரன் அங்கு இருந்தான்.

“கஜன், நீ செய்த உதவியை நாங்கள் இருவரும் மறக்க மாட்டோம். பிள்ளைகள் கூடச் செய்யத் தயங்கும் செயல்கள் பலவற்றைச் செய்துள்ளாய்” என்று சொன்னார் பரமேஸ்வரன்.

“உயிருக்குயிராகப் பழகுவோர் இப்படியெல்லாம் செய்வார்கள். நாளைக்கு நான் வைத்தியசாலையில் படுக்க வேண்டி வந்தால் எனக்கு நீங்கள் செய்ய மாட்டீர்களா…? நன்கு பழகியவர்கள் உரிமை மிகுதியால் எதையுஞ் செய்வார்கள். அதைப் பெரியவர்கள் ‘பழைமை’ என்று கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் பெரிதாகக் கருதக்கூடாது” என்றான் கஜேந்திரன்.

அதற்குப் பின்பு தணிகாசலமும் பரமேஸ்வரனும் எதுவும் கதைக்கவில்லை. எதைக் கதைத்தாலும் அதற்குத் தர்க்கரீதியாகச் சரியான பதிலைக் கஜேந்திரன் கூறுவான். அதைவிடப் பேசாமல் இருப்பது நல்லது என்று நினைத்தார் பரமேஸ்வரன். தணிகாசலத்தால் அச்செயலை மறக்க முடியவில்லை.

---

**801. பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்**
**கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.**

---

பழைமை என்று சொல்லப்படுவது நன்கு பழகியவர் உரிமையோடு செய்யும் செயலை இழிவானது என்று எண்ணாமல் ஏற்றுக் கொள்ளும் நட்பாகும்.

## உடன்படு

பரமேஸ்வரனுக்கு விபத்துக்குள்ளான பின்பு இடுப்பில் தங்கமுடியாத வலி இருந்தது. காலில் ஏற்பட்ட முறிவு குணமாகி விட்டது. அவர் மெதுவாக எழுந்து நடமாட ஆரம்பித்தார். வத்சல்யன் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வைத்தியசாலையில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தான். எலும்பு முறிவு சம்பந்தமான நிபுணத்துவ மருத்துவக் கல்வி கற்றவர் வைத்திய கலாநிதி மகேஸ்வரன். அவர் தொட்டாலே முறிந்த எலும்புகள் இணைந்து விடுமளவிற்குக் கைராசிக்காரரென மக்களிடம் பெயர் பெற்றவர். அதனால் மக்கள் மத்தியில் பெரும் புகழ் பெற்று விளங்குபவர்.

வத்சல்யன் அவருடன் எலும்பு முறிவு தொடாபான சிகிச்சைப் பகுதியில் அவருக்கு உதவியாளனாக இருந்து பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தான். அதனால் மகேஸ்வரனுடன் அவன் நல்லுறவை வளர்த்து வைத்திருந்தான். அவன் மீதிருந்த பாசமிகுதியால் மகேஸ்வரன், பரமேஸ்வரனை அடிக்கடி பரிசோதித்து மருந்து வகைகளைக் கொடுத்து வந்தார். இருப்பினும் அவரது இடுப்பில் இருந்த வலி சற்றும் குறையவில்லை. அதனால் அவர் நவீன இயந்திரங்கள் மூலம் பரமேஸ்வரனின் இடுப்புப்

பகுதியைப் படம் பிடித்தும், பரிசோதித்தும் மருந்து வகைகளைக் கொடுத்து வந்தார். அண்மையில் பத்தாயிரம் ரூபா விலையுள்ள ஊசி மருந்து ஒன்றை வாங்கி அவருக்கு ஏற்றினார். அப்படியிருந்தும் பரமேஸ்வரனது இடுப்பு வலி குறையவில்லை. அது மகேஸ்வரனுக்கும் வத்சல்யனுக்கும் மனவருத்த்தைக் கொடுத்தது.

அன்று மாலை பரமேஸ்வரனின் வீட்டுக்குச் சுதேச வைத்தியர் ஒருவரை அழைத்து வந்தான் கஜேந்திரன்.

“ஐயா, இவ்வளவு காலமும் நீங்கள் ஆங்கில வைத்தியஞ் செய்தீர்கள். வைத்திய நிபுணர் மகேஸ்வரன் தன்னாலான வைத்திய முறைகள் எல்லாவற்றையும் மேற்கொண்டும் உங்களின் நோய் குறையவில்லை. இவர் இராசரத்தினம். ஆயுள் வேத மருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமைபுரிகிறார். பச்சிலைகள், எண்ணெய் வகைகள், பட்டைகள் போன்றவற்றால் தான் வைத்தியஞ் செய்வார். ஒருவாரத்திற்கு ஆங்கில வைத்தியத்தைக் கைவிட்டு விட்டு விட்டு எமது சுதேச சைத்தியஞ் செய்யுங்கள். ஒருவாரத்திற்கு ஆங்கில மருந்தைச் சாப்பிடாமல் விடுவதால் எந்தத் தீமையும் வராது. நம் முன்னோர் சுதேச வைத்தியந்தான் செய்தனர். எனது தாயாரின் தகப்பனார் இப்போதும் சுதேச வைத்தியத்தான் செய்கிறார். சுதேச வைத்திய மென்பது உணவு மூலம் உடலைக் குணப்படுத்துவது. இலை குழைகளை உணவாகவும் விதைகளில் இருந்து பெறும் எண்ணையைத் தைலமாகவும் பட்டை வகைகளை அவித்துப் பானமாகவும் குடிக்கச்

சொல்வார்கள். நான் எனக்கு நோய் வந்தால் சுதேச வைத்தியம்தான் செய்வேன்.'' என்றான் கஜேந்திரன்.

“நட்புக் காரணமாக நண்பர் ஒருவர் செய்யும் செயலைக் கட்டாயம் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். அது சான்றோரது கடமை'' என்று பரமேஸ்வரன் கருதி ஒப்புக் கொண்டார்.

அன்று மாலை வத்சல்யன் மருந்து கொடுத்த போது அவர் அதைக் குடிக் க மறுத்து விட்டார். அத்துடன் கஜேந்திரன் அழைத்து வந்த சுதேச வைத்தியர் கொடுத்த மருந்துகளைக் காட்டினார்.

வத்சல்யனுக்கு தந்தையின் செயல் பிடிக்கவல்லை. எனினும் அவர் கஜேந்திரன் கூறுவதைத் தட்டமாட்டார் என்று அவனுக்குத தெரியும். அதனால் கதைத்துப் பிரச்சினைப்பட அவன் விரும்பவில்லை.

“எனக்கும் கசக்கும் பச்சிலைகளையும் பட்டைகளையும் மருந்தாக உண்ண விருப்பவில்லை. அத்துடன் சாப்பாட்டிலும் உப்புப் புளி முதலியவற்றைக் குறைக்கச் சொல்லி வைத்தியர் சொல்லியிருக்கிறார். எனக்கு விருப்பமில்லாவிட்டாலும் கஜேந்திரனுக்காக நான் குடித்தே தீர வேண்டும். அவன் அன்போடு செய்வதை என்னால் தடுக்க முடியவிலலை'' என்றார் பரமேஸ்வரன்.

ஒருவாரம் கழிந்தது. பரமேஸ்வரனது இடுப்புவலி முற்றாகக் குறைந்து விட்டது.

வைத்தியர் இராசரத்தினம் இன்னும் ஒருவராகாலத்திற்கு அம்மருந்துகளைத் தொடர்ந்து சாப்பிடும்படி கூறிவிட்டுச் சென்றார்.

அன்று கஜேந்திரன் பரமேஸ்வரனது வீட்டுக்கு வந்தான்; ''கஜன், நீ வைத்தியரைக் கூட்டி வந்த போது எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் அவரில் நம்பிக்கை வரவில்லை. உனது முகத்தை முறிக்கக்கூடாது என்பதற்காக நான் அவர் தந்த கசப்பான மருந்து வகைகளை மிகவும் சிரமப்பட்டு உண்டேன். இன்று இடுப்பு வலி முற்றாகக் குணமாகி விட்டது. மிகவும் நன்றி'' என்றார் பரமேஸ்வரன்.

“உங்களுக்கு விருப்பமில்லை என்று எனக்குத் தெரியும். ஆனால் சுதேச வைதகியத்தில் எனக்கு நம்பிக்கையும், உங்கள் மீது இருந்த அக்கறையும் பாசமும் என்னைச் செயற்படுத்தின'' என்றான் கஜேந்திரன்.

## 802. நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்று அதற்கு உப்புஆதல் சான்றோர் கடன்.

நட்புக்கு உறுப்பாவது நண்பர்கள் உரிமையோடு செய்கின்ற செயல், அந்த உரிமையான செயலுக்கு உடன்படுவது சான்றோரது கடமையாகும்.

## பயனற்று விடும்

“உங்களுக்குச் சுதேச வைத்தியஞ் செய்ய விருப்பமில்லை என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் உங்களது மகன் ஒரு பெரிய வைத்தியர். அத்துடன் இந்த மாவட்டத்தில் எலும்பு முறிவு சத்திர சிகிச்சை வல்லுனர், மிகுந்த கைராசிக்காரரர் என்று அனைவராலும் போற்றப்படும் வைத்திய நிபுனர் மகேஸ்வரனிடம் சிகிட்சை பெறும் ஒருவர் எக்காரணங் கொண்டும் இன்னொரு வைத்தியரிடம் சிகிட்சை பெறமாட்டார். அதற்கு நீங்கள் மட்டும் விதிவிலக்காகி விட முடியுமா...? அத்துடன் உங்கள் மகன் மேலைத்தேச வைத்தியத்தைக் கற்பவர். அதனால் அவருக்கு சுதேச வைத்தியத்தின் மீது நம்பிக்கையிராது. அதுமட்டுமல்ல உங்கள் மகனது மேலாளர் பெரிய வைத்திய நிபுணரெனப் பெயரெடுத்தவர். மக்கள் அவரை நடமாடும் தெய்வமெனப் போற்றுகிறார்கள். அப்படியான திறமை மிக்க ஒரு நிபுணரின் கீழ் வேலை செய்யும் உங்கள் மகன் அவரைத் தெய்வமாக மதிக்கிறார். அதனால் நீங்கள் அவரை விட்டு விட்டு ஊர் பேர் தெரியாத ஒருவரிடம் சிகிட்சை பெறுவதை யாராவது அவருக்குச் சொல்லி விட்டால் உங்கள் மகனை அவர் மதிப்பாரா....? இல்லை மிகவும் நுட்பமான விஷயங்களைக் கற்பிப்பாரா....?” என்று சொல்லிக் கொண்டிருந்தான் கஜேந்திரன்.

பரமேஸ்வரன் சிரித்தார். சில தினங்களுக்கு முன் அவரது மகன் வத்சலனும் மருமகள் நாமகளும் அவரது மனைவியும சொன்ன வார்த்தைகள் அவரின் காதில் ஒலித்தன.

“அப்பா நீங்கள் என்ன செய்திருக்கிறீர்களென சற்று யோசித்துப் பார்த்தீர்களா..? மகேஸ்வரன் ஐயாவின் கைபடாதா என்று பெரும்பெரும் பிரமுகர்கள் மாதக்கணக்காகக் காத்திருக்கும் போது அவர் தினமும் எமது வீட்டுக்கு வந்து உங்களைப் பரிசோதித்து மருந்தும் தந்து உங்களுக்குத் தேவையான பயிற்சிகளையும் செய்வித்துச் செல்கிறார். இப்படியான ஒருநிலை பெரியதொரு கோடீஸ்வரனுக்குக் கூடக்கிடையாது. இதை அவர் அறிந்தால் என்னைப் பற்றி என்ன நினைப்பார்.” என்றான் வத்சல்யன்.

“கஜேந்திரன் மிகவும் நல்லவன்; கெட்டிக்காரன்; அறிவாளி; உலக நடைமுறையை அறிந்தவன். அதனால் நீங்கள் அவனுக்கு எதைக் கூறினாலும் கேட்டிருப்பான். நீங்கள் நிலைமையை விளக்கிச் சொல்லியிருக்கலாம். நாளைக்கு வைத்தியர் வருவார். நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்” என்று கேட்டாள் காமாட்சியம்மாள்.

பரமேஸ்வரன் எதுவும் சொல்லாமல் பேசாமல் இருந்தார். அவரால் அவர்களுக்குப் பதில் கூறமுடியவில்லை. அவரது மனைவி கூறியது போல; “கஜேந்திரனுக்குத் தனது நிலையை விளக்கிக் கூறியிருக்கலாம்” என்று நினைத்தார்.

“உங்களுக்கு வயது போய் விட்டது. எலும்புகள் பொருந்த, நோ சுகமாக நாளெடுக்கும். அவசரப்பட முடியுமா…? இப்போது நீங்கள் நான் தரும் மருந்துகளைக் குடிப்பதில்லை. நீங்கள் செய்யும் வைத்தியத்திற்கு நோ சுகமாகாவிட்டால்

திரும்பவும் மகேஸ்வரன் ஐயாவிடம் தான் சிகிட்சை பெற வேண்டும். ஏனென்றால் அவர்தான் வைத்திய நிபுணர்'' வத்சல்யன் கோபமாகச் சொல்லிக் கொண்டிருக்கையில் நாமகள் குறுக்கிட்டாள்; ''மாமாவைப் பேசாதைங்கோ. கஜேந்திரன் மாமாவின் சிறந்த நண்பன். அந்த உரிமை காரணமாக அவர் சுதேச வைத்தியரை அழைத்து வந்து விட்டார். அன்பும் பாசமும் கொண்ட கஜேந்திரனது செயலைத் தடுக்கச் சக்தியற்றுத்தான் மாமா ஒப்புக் கொண்டார். மறுத்து விட்டால் தான் அவன் மீது கொண்ட நட்பால் பயனில்லை என்று நினைத்தாரே தவிர நீங்கள் கூறும் எவற்றையும் அவர் நினைத்துப் பார்க்கவில்லை. அப்போதய நிலையில் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை'' என்றாள்.

''இல்லை, அப்பாதான் தான் அந்த வைத்தியரைக் கூட்டி வரச் சொன்னதாகச் சொன்னவர்.'' என்றான் வத்சல்யன்.

''அப்படி மாமா சொல்லியிருக்க மாட்டார். நாம் கஜேந்திரனைக் குறை கூறுவோம் என்பதற்காகப் பழியைத் தான் ஏற்றுக் கொண்டார்'' என்றாள் நாமகள்.

''உண்மைதான். நான் கஜேந்திரனை மிகவும் விரும்புகிறேன். அதனால்தான் அப்படிச் சொன்னேன்'' என்றார் பரமேஸ்வரன்.

''என்ன ஐயா நீங்கள் சொல்கிறீர்கள்?'' என்று கஜேந்திரன் அவரது தோளில் கையை வைத்தான். அவர் திடுக்கிட்டுத் தடுமாறினார்.

## 803. பழகிய நட்புஎவன் செய்யும் கெழுதகைமை செய்தாங்கு அமையாக் கடை?

பழகியவர் உரிமை காரணமாகச் செய்யும் செயலைத் தான் செய்ததாகக் கருதி ஏற்றுக் கொள்ளா விட்டால் அவரோடு பழகிய நட்பால் பயன் இல்லை.

**போற்றி ஏர்**

“என்னையா நான் ஏதோ சொல்கிறேன். நீங்கள் வேறு எதையோ சொல்கிறீர்கள்” என்றான் கஜேந்திரன்.

சிரித்தார் பரமேஸ்வரன். “உண்மைதான். நீ சொன்ன அனைத்தையும் எனது மகனும் சொன்னான். அதற்கு நான் பதில் கூறவில்லை. நான்தான் சுதேச வைத்தியரை அழைத்து வரும்படி உன்னிடம் கூறியதாகவே மகனும் மனைவியும் நினைத்து என்னை அன்பாகக் கண்டித்தனர். ஆனால் நாமகளுக்கு யாவும் தெரியும். அவள் தணிகாசலதத்தின் மகளல்லவா….. உலக நடப்பை தனது மனதில் ஆராய்ந்து கண்டு பிடித்து விட்டாள். சுதேச வைத்தியர் வந்தன்று எனது மகன் என்னைக் கண்டித்து விட்டுச் சென்றதும் தணிகாசலம் வந்து சொன்னார்; “மச்சான், நீங்கள் அறிவுள்ளவர். நான் சித்த வைத்தியர் இராசரத்தினத்தைக் கடைசிவரையும் குறைத்து மதிப்பிட மாட்டன். ஏனென்றால் அவரது குடும்பம் இந்தக் கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக வைத்தியம் செய்து வருகிறது. அவர் நாடி பிடித்துப் பார்த்து விட்டு இன்ன நோய் என்று சொல்வார். அவர் சொன்னால்

சொன்னது தான். நவீன வைத்தியர் கருவிகளால் கூடக் கண்டு பிடிக்க முடியாத நோய்களையெல்லாம் அவர் கண்டு பிடித்துச் சொல்லி விடுவார். நான் வைத்திய சாலையால் வந்த பின்பு வைத்திய நிபுணர் மகேஸ்வரனிடம், மருமகன் என்னை அழைத்துச் சென்றுகாட்டி மருந்துகள் வாங்கித் தந்தான். நான் அவற்றைச் சாப்பிடவில்லை. நான் வைத்தியர் இராச ரத்தினத்தின் வீட்டுக்குச் சென்று மருந்து வாங்கிச் சாப்பிட்டேன். அவர்தான் எமது குடும்ப வைத்தியர். நாமகளுக்கு இப்போது வருத்தம் வந்தாலும் அவள் இராசரத்தினத்திடம் தான் மருந்து வாங்கிச் சாப்பிடுவாள். ஆனால் நீங்கள் நடக்க முடியாது இருந்ததாலும், உங்களது மகன் குறை நினைப்பார் என்பதாலும் என்னை உங்களுக்குச் சொல்ல நாமகள் விடவில்லை. எனக்குத் தெரியும் கஜேந்திரனுக்கு நீங்கள் கூறவில்லை. அவன் உங்கள் மீதிருந்த நட்பால் நீங்கள் படும் வேதனையைக் கண்டு வருத்தப்பட்டு என்னிடம் சொன்னவன். நான் அவனைக் கண்டித்தேன். இருந்தும் நீங்கள் படும் வேதனையால் உங்களைக் கேளாமல் உரிமையோடு பெரியதொரு குற்றத்தைச் செய்து விட்டான். நீங்கள் அவனது உரிமையைப் போற்றி அச்செயலை நீங்கள் செய்தது போல ஏற்று விட்டீர்கள்'' என்றார்.

''உண்மைதான். பரமேஸ்வரன் ஐயா, தணிகாலசமண்ணை உங்களுக்குத் தெரியாமல் இராசரத்தினத்திடம் மருந்து வாங்கி சாப்பிடுவதைக் கேள்விப்பட்டு நான் தணிகாசலம் அண்ணையைச் சந்தித்துக் கேட்க அவர் சொன்னர்; ''கஜன், நாம் இந்த ஊரவர். இராசரத்தினத்தைப் பற்றி நன்கு

அறிந்தவர்கள். ஆனால் அவர்களுக்கு இராசரத்தினத்தைத் தெரியாது. அத்துடன் அவர்கள் பணக்காரர். அவருடைய மகன் வைத்தியர். அதோடு மகேஸ்வரன் பெயரோடும் புகழோடும் வாழும் வைத்தியர். அவரின் உதவியாளராக வத்சல்யன் கடமை புரிகிறார். அப்படியிருக்கையில் அவர்களுக்கு நாம் எப்படிக் கூறமுடியும்?. நான் நாமகளுக்குச் சொல்ல அவள் எக்காரணம் கொண்டும் சொல்ல வேண்டாமென்று கண்டிப்புடன் சொல்லி விட்டாள். அதனால் தான் நான் சொல்லவில்லை'' என்று தணிகாசலம் அண்ணை சொன்னவர்'' என்றான் கஜேந்திரன்.

''சரிசரி அதை மறப்பதுதான் நல்லது'' என்றார் பரமேஸ்வரன்.

''உங்களது குடும்பத்தினரை விட நீங்கள் என்மீது அன்பும் நம்பிக்கையும் வைத்திருப்பதை எண்ண எனக்கு என்றுமில்லாத மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கு'' என்றான் கஜேந்திரன்.

''என்னைக் கேட்காமல், என் மீதிருந்த நட்புக் காரணமாக அவரை அழைத்து வந்து விட்டாய். அந்த நன்றியை மறந்து உன்னை எனது வீட்டார் வெறுக்கத்தக்கதாகச் செய்ய எனக்கு விருப்ப மேற்படவில்லை. அதனால் தான் நான் தான் அவரை அழைத்து வரச் சொன்னதாகச் சொன்னேன்'' என்று சிரித்தார் பரமேஸ்வரன்.

''என்கு இராசரத்தினததின் மீது பூரண நம்பிக்கை இருந்தமையால் தான் அழைத்து வந்தேன். அந்த நேரம் தணிகாசலமண்ணை

கூறியவை எவையும் எனக்கு ஞாபகத்திற்கு வரவில்லை'' என்றான் கஜேந்திரன்.

**804. விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையால் கேளாது நட்டார் செயின்.**

உரிமை காரணமாகக் கேட்காமலே நண்பர் ஒரு செயலைச் செய்தால், அந்த உரிமையைப் போற்றி அச் செயலைத் தாமே செய்தது போல் விரும்பி ஏற்றுக் கொள்வது அறிஞரது செயலாகும்.

### உரிமைதான்

தனபாலன் நன்றாக மது அருந்திவிட்டு நாவலர் ஸ்ரீ வித்தியா மகாகணபதி சனசமூக நிலைய முன்றலில் நின்று தணிகாசலத்தை மட்டுமரியாதையின்றி தூஷண வார்த்தைகளால் ஏசிக் கொண்டிருந்தான். தனது சகோதரன் ஜெயபாலன் வெளிநாட்டிலிருந்து வந்து நாவலடிக் கிராமத்தில் பெரியதொரு மாடிவீட்டை விலைக்கு வாங்கிஅ ங்கிருந்து கொண்டு ஊரவர்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் கோயில்களுக்கும் பெருந்தொகையாக உதவிக் கொண்டிருந்தான். அவன் முன்பு கிராமத்தில் பல அடாவடித்தனங்களிலும் திருட்டுக் களிலும் ஈடுபட்டவன். தற்போது மனம் திருந்தித் தான் முன்பு திருடியவர்களுக்கு உதவிகள் செய்து கொண்டிருந்தான். இது சில ஊர்ப்பிரமுகர்களுக்குப் பிடிக்கவில்லை. முக்கியமாக வேலாயுதபிள்ளைக்கு அது அறவே பிடிக்கவில்லை. அதனால் அவர்

அதைச் சிலரிடம் நேரடியாகவே கண்டித்துக் கூறியிருந்தார். அது ஜெயபாலனுக்குப் பிடிக்கவில்லை. அதைப்பற்றிஅ வன் தணிகாசலத்துடன் வருத்தப்பட்டான்.

“தணிகாசலமண்ணை நான் முன்பு சில தவறுகள் செய்தனான்தான். அதை ஒப்புக் கொள்கிறேன். ஒருவன் தவறுகள் செய்தால் அவன் திருந்தக்கூடாது, தொடர்ந்தும் தவறுகள் செய்து கொண்டே இருக்க வேண்டுமென்று இக்கிராமத்துப் பெரிய மனிதர்கள் விரும்புகிறார்கள். உங்களது நண்பர் வேலாயுதபிள்ளை என்னைப் பற்றிக் கண்டபடி கதைத்துத் திரிகிறார். நான் அந்த நேரம் அறியாமையாலும், பஞ்சத்தாலும், பெரிய மனிதர்களின் தூண்டுதலாலும் தான் அப்படி நடந்து கொண்டேன். ஆனால் நீங்கள் கோவிலில் இப்போதும் தவறு செய்கிறீர்கள். மகா கணபதி ஆலயத்தில் பத்து திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இரண்டு திருவிழாக்கள் நீங்கள் கழித்து வைத்த சாதிகள் செய்யுது. அந்த இரண்டு திருவிழாவிலன்றும் பூசை செய்யிற குருக்களும், மகா கணபதியும் கீழ் சாதிக்காரராகி விடீனை. அன்று சுவாமிக்கு நிவேதிக்கப்பட்ட பஞ்சாமிர்தம், பொங்கல், பழம், பாக்கு, வெற்றிலையைக் கூட நீங்களொருவரும் வாங்குவதில்லை. அப்படியான படிச்ச மனிசரிட்டை நான் நீதி கேட்க முடியுமே….?” என்று கேட்டான் ஜெயபாலன்.

ஜெயபாலன் அன்று மனம் வருந்தி, அதைத் தனபாலனுக்கும் வீட்டில் இருந்த சிலருக்கும் சொன்னான். அதைக் கேட்ட தனபாலன் நன்றாகக் குடித்து விட்டு வந்து தணிகாசலத்தைக் கண்டபடி பேசிக் கொண்டிருந்தான். அதைப் பொறுக்கமாட்டாத

வேலாயுதபிள்ளை தனபாலனைத் தள்ளி விழுத்தி அடித்து விட்டார். அதனால் பெரும் கலகம் மூண்டு விட்டது.

தனபாலனின் நண்பர்கள் பலர் குடிகாரர். அவர்கள் பொல்லுகள் கொட்டன்கள் கத்திகளுடன் வேலாயுத பிள்ளையின் வீட்டுக்குச் சென்று அங்கிருந்த பொருட்களை அடித்துக் நொருக்கி விட்டார்கள்.

விக்னேஸ்வரமூர்த்தி வேலாயுதபிள்ளையின் வீட்டுக்கு வந்து அவரை ஏசினார்; "அவன் சரியான குடிகாரன். எதையும் பேசி விட்டுப் போகட்டன். எதற்கும் பலாத்காரம் தீர்வாகாது. இவ்வளவு காலமும் பொறுமையாக இருந்த உனக்கு இன்று என்ன நடந்தது. நாம் ஒரு செயலைச் செய்யுமுன் அதை நாம் செய்யலாமா...? எனது தகுதியென்ன? நான் அப்படி நடப்பதன் மூலம் என்னென்ன நடக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவன் தணிகாசலத்தைத் தான் ஏசியவன். தணிகாசலத்திற்கு வராத கோபம் உனக்கேன் வந்தது?" என்று கேட்டார்.

"என்ன இருந்தாலும் வேலாயுதண்ணை அவனுக்கு அடித்திருக்கக்கூடாது" என்றான் கஜேந்திரன்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த தணிகாலததிற்குக் கோபம் வந்தது. ":தன்னைப் பாதிக்கக் கூடியதொரு செயலை நண்பன் ஒருவன் செய்தால், அது அவனது அறியாமை மட்டுமல்ல, அது அவன்மீது கொண்ட அன்பும் உரிமையுமாகும்

என்றுதான் நல்லவர்கள் நினைப்பார்கள்'' என்று நினைத்த தணிகாசலம் சொன்னார்; ''வேலாயுதம் அடித்தது சரி. அந்த இடத்திலே நான் இருந்திருந்தாலும் அதைத்தான் செய்திருப்பேன்'' என்றார்.

அதைக்கேட்டு விக்னேஸ்வரமூர்த்தி திகைத்துப்போனர்... அவரால் பேசமுடிய வில்லை. ஆனால் கஜேந்திரன் ஆச்சரியப்படவில்லை. ''வேலாயுதபிள்ளை தனது நண்பர் என்பதால் தான் தணிகாசலம் அப்படிச் சொல்கிறார்'' என்று நினைத்தான். முகம் கறுத்துக் கவலையோடு இருந்த வேலாயுதபிள்ளையின் முகம் மகிழ்ந்து பொலிந்தது.

---

**805. பேதமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க**
**நோதக்க நட்டார் செயின்.**

---

வருந்தத்தக்க செயல்களை நண்பர் செய்தால் அதற்குக் காரணம் அவரது அறியாமை என்றோ, மிகுந்த உரிமை என்றோ உணர்தல் வேண்டும்.

**அறுக்கார்**

''இங்கு பெரும்படிப்புப் படித்தவை, பெரும் அறிஞர்கள் எல்லோரும் இருக்கினை. இவையெல்லாம் என்ன படிச்சவை. நான் வினாயகபுராணம் படித்தனான். அதில் பிராமணன் ஒருவனைக் கொலை செய்த ஒருவன் காட்டில் மறைந்து திருடி வாழ்ந்தான். அவன் நோயாளியான பின்பு காட்டு வழியால் வந்த பெரியவரொருவரிடம்

தான் செய்த தீய செயல்கள் அனைத்தையும் கூறி அதற்குப் பரிகாரம் கேட்டான் அதற்கு அந்தப் பெரியவர்; “காட்டில் பாழடைந்து உள்ள விநாயகர் கோயிலைத் திருத்தி கும்பாவிஷேகம் செய்தாயானால் உனது பழிபாவாங்களெல்லாம் மறைந்து விடும். உனக்கு முத்தி கிடைக்கும்” என்றவர். அவன் அப்படியே செய்து முத்தியடைந்தவனாம். அதைவிட ஒருபெண் பெற்றோரையும் கணவனையும் கொன்றவள். அவள் சங்கட சதுர்த்தியன்று ஒரு பிராமணனது வீட்டில் உணவுக்காககக் காத்திருந்த போது உள்ளே வீட்டார் விநாயகரின் மந்திரத்தைச் செபிக்க அவளும் அதைக் கேட்டுச் சொன்னாளாம். அதனால் அவள் இறந்ததும் விநாயகபுரத்திலிருந்து விமானம் வந்து அவளை அழைத்துச் சென்றதாக நான் படிச்சனான். இதெல்லாவற்றையும் நீங்கள் படிக்கவில்லையா..? இல்லா விட்டால் படித்ததெல்லாம் கட்டுக்கதை, நாம் கோயில் கோயில் என்று சொல்லி ஊரை ஏமாற்றி எம்மையும் ஏமாற்றி வாழ்வோம் என்று நினைத்து விட்டீர்களா..?” தனபாலன் பெருங்குரலில் கத்திக் கொண்டிருந்தான்.

விக்னேஸ்வர மூர்த்தியாலோ அங்கு கூடிநின்ற அறிஞர்களாலோ அவனது கேள்விக்குப் பதில் கூற முடியவில்லை.

அதனால் தனபாலன் சொன்னான் “வெள்ளை வேட்டி கட்டி, பெரும் பெரும் அறிஞர்களாக உங்களைக் காட்டிக் கொண்டு திரியுங்கோ. அண்ணை காசு கொடுத்தால் உங்களுக்குப் பிடிக்காது. நீங்கள் எல்லோரும் ஒழுங்காக

வாழ்கிறீர்களா....? நீங்கள் தவறு செய்யவில்லை என்று நினைக்கிறீர்களா...? விநாயகபுராணக்கதைப்படி நீங்கள் அண்ணனிடம் பணம் வாங்க மறுப்பதும், அவன் கொடுப்பதைத் தூற்றித் திரிவதும் தவறில்லையா...? நான் குடித்து விட்டு மதி மயக்கத்தில் பேசி விட்டேன். அதற்குத் தண்டனை வழங்குவதும், அது சரியென்று வாதிடுவதும் மிகவும் நாகரீகமானது'' என்ற தனபாலன் சிறிது நேரம் எல்லோரையும் பார்த்தான். பின்; "நான் போறன். இனி நான் வேலாயுதபிள்ளையோடு பிரச்சினைக்குப் போக மாட்டன். ஏனென்றால் என்ரை மனதில் உள்ள யாவற்றையும் உங்களுக்குச் சொல்லி விட்டேன். அது எனக்குத் திருப்தி. நீங்கள் என்னைப் போல உணர்ந்து திருந்துவீர்களா...?'' என்று கேட்டுவிட்டு நடந்தான்.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசத்தோன்றாது தலை குனிந்து பேசாமல் இருந்தார். அவரது மனதில் தனபாலன் சொன்ன வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டிருந்தன. நினைத்துப் பார்த்தால் அவன் சொல்வதில் என்ன பிழை இருக்கிறது. மகா கணபதி ஆலயத்தில் அவன் கூறியது போல இரண்டு திருவிழாக்களின் போது எனக்குத் தெரிந்த நாள் முதல் குருக்கள் செய்த பிரசாதத்தையே உயர்சாதியினர் என்று தம்மை நினைத்திருப்போர் வாங்குவதில்லை. வாங்கும்படி கூறினால் அது பெரும் குழப்பத்தில் முடியும்.'' பெருமூச்சு விட்டார் விக்கேனஸ்வரமூர்த்தி.

"வேலாயுதம் யார் எதைச் சொன்ன போதும் நீ அவனுக்கு அடித்தது சரி. உன்னோடு நான்

ஐம்பது வருடங்களாக நட்புப் பூண்டுள்ளேன். இதுவரை அந்த நட்பில் ஒரு சிறு கீறல் கூட விழுந்ததில்லை. வளர்பிறைபோலத் தினமும் அது வளர்ந்து வருகிறது. என்ரை உயிர் போனாலும் நான் உன்னைக் குற்றஞ் சொல்ல மாட்டன். அதோடு நீ எனக்கு எந்தத் துரோகஞ் செய்தாலும் நான் உன்னுடைய நட்பை அறுத்துக் கொள்ளவும் மாட்டான். எல்லாம் தெரிந்த அதிபர் கூட உன்னைத் தவறாகப்புரிந்து கொண்டு விட்டார்'' என்றார் தணிகாசலம்.

விக்னேஸ்வரமூர்த்தியால் தணிகாசலம் கூறியதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இருப்பினும் அவர்மீது கொண்ட நட்புக் காரணமாக அவர் சொன்னதைக் கண்டிக்கவும் முடியவில்லை.

''நீங்கள் போங்கோ. அவன் வெறிகாரன். குடித்தால் யோசிக்காமல் கதைப்பான். வேலாயுதம் அவனுக்கடிச்சது நொந்திருக்குமே... சும்மாய் நடிக்கிறான். நீங்கள் போங்கோ'' என்றார் தனபாலசிங்கம். விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசாமல் எழுந்து நடந்தார். அவரது மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

**806. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்**
**தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.**

நட்பின் உரிமையினை அறிந்தவர் தமக்கு அழிவு வந்தாலும் பழைய நண்பர்களின் உறவைக் கைவிட மாட்டார்.

## அன்பை நீக்கார்

தணிகாசலம், விக்னேஸ்வரமூர்த்தியின் மீது மதிப்பும் மரியாதையும் கொண்டவர். அவரைத் தெய்வமாகவே மதிப்பவர். அப்படிப்பபடிட்ட தணிகாசலத்திற்கு விக்னேஸ்வர மூர்த்தி அன்று நடந்து கொண்ட முறை பிடிக்கவில்லை. அவர், வேலாயுதபிள்ளை தனபாலனுக்கு அடித்தது பிழை'' என்று சொன்னதால் மிகுந்த கவலைப்பட்டார். பெருங்குடிகாரனான தனபாலன் மதிமயங்கும் படியாகக் குடித்து விட்டுத் தன்னை மிகவும் கேவலமாகப் பேசியதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அது வேலாயுதபிள்ளைக்கும் கோபத்தை உண்டாக்கியமையால் தான் அவர் தனபாலனுக்கு அடித்தார். அன்பின் அடிப்படையில் நீண்ட நாள் என்னுடன் உயிருக்குயிராக வேலாயுதபிள்ளை பழகியமை யால்தான் அவருக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. அவருக்கு வந்த கோபம் நியாயமானது என்று ஏன் விக்னேஸ்வரமூர்த்திக்குத் தோன்றவில்லை'' என்ற நினைக்க தணிகாசலத்திற்குக் கவலையாக இருந்தது.

அப்போது தணிகாசலத்தைத் தேடிக் கஜேந்திரன் வந்தான். தணிகாசலம் கவலையுடனிருப்பதைக் கண்ட கஜேந்திரன் கேட்டான்; ''இன்னும் நீங்கள் அந்த விஷயத்தை மறக்கவில்லையா?''

''மறக்கக்கூடிய விஷயமா அது. வேலாயுதம் அன்பின் அடிப்படையில் நீண்ட நாட்களாக என்னுடன் நட்புக் கொண்டிருக்கிறான். அவன்

எனக்குக் கேடு வந்தால் பொறுப்பானா…?'' என்று கேட்டார் தணிகாசலம்.

“அண்ணை நீங்கள் நட்புக்காரணமாக அப்படி நினைக்கிறீர்கள். முன்பு யாராவது சண்டையிட்டால் நீங்கள் சமாதானஞ் செய்து வைப்பீர்களே தவிரச் சண்டைக்குப் போனீர்களா….? இப்போ சாதாரண ஒரு விஷயத்தைப் பெரிதுபடுத்துகிறீர்கள்'' என்றான் கஜேந்திரன்.

“எனக்காக, என்னைப் பற்றித் தரக்குறைவாகத் தனபாலன் பேசியமையால் தான் வேலாயுதபிள்ளை அவனுக்கு அடித்தது. வேலாயுதபிள்ளை எனக்கு அடித்தால் நான்வாங்கிக் கொண்டு பேசாமல் செல்வேன். அவன் எனக்குக் கேடு செய்தாலும் அதைப் பற்றிப் பொருட்படுத்த மாட்டன். ஆனால் வேலாயுதத்திற்கு ஏதாவது நடந்தால் நான் துடித்துப் போவன்'' என்றார் தணிகாசலம்.

“நட்பென்றால் அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் தனபாலன் குடிகாரன் என்றாலும் அவன் கூறிய வார்த்தைகளில் நியாயம் இருக்கு.'' என்று கஜேந்திரன் கூறும் போது தணிகாசலம் குறுக்கிட்டுச் சொன்னார்: “அதில் நியாயமிருக்கலாம். அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் இப்பவும் சொல்லுவன்; எப்பவும் சொல்லுவன். தனபாலனுக்கு வேலாயுதம் அடித்தது சரி''

“நான் வரட்டே....” என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் கஜேந்திரன். அது தணிகாசலத்திற்குச் சற்றுக் கோபத்தை வரவழைத்தது. தான் கூறியது பிடிக்காததால் தான் அவன் அப்படிக் கூறி விட்டுச் செல்கிறான் என்று நினைத்தார்.

“கஜன், உனக்குத் தெரியாது வேலாயுதம் நான் செய்த தோட்டக் காணியைத் தரகு காசுக்காக மணிவண்ணனுக்கு வாங்கிக் கொடுத்தது. அதோடு தன்னுடைய காசை பேரம்பலத்தின்ரை காசு என்று சொல்லிக் கூடுதலான வட்டிக்கு எனக்குத் தந்தது. இப்படிப் பல பிரச்சினை எங்கள் இருவருக்குமிடையே இருக்கு. அன்பின் அடிப்படையில் நீண்ட நாட்கள் நட்புக் கொண்ட வேலாயுதபிள்ளை எனக்குக் கேடு செய்த போதும் அதை நான் பொருட்படுத்தவில்லை. அதனால் அவர் மீதிருந்த அன்பும் குறையவில்லை. ஆனால் அன்று என்னைப் பற்றித் தரக்குறைவாகத் தனபாலன் பேசியது பிழை.” என்றார் தணிகாசலம்.

கஜேந்திரனுக்கு அவர் கூறுவதைக் கேட்க முடியவில்லை. அதனால்; “அதை மறவுங்கோ” என்று கூறிவிட்டுச் சென்றான். அவனது மனம்; “தணிகாசலம் பிழை விடுகிறார்” என்று அடித்துக் கூறியது. “தனபாலன் கூறிய சில வார்த்தைகளைப் பற்றி நாம் இனியும் சிந்திக்காமல் இருக்க முடியாது” என்று விக்னேஸ்வரமூர்த்தி கூறியது சரி. ஆனால் யாரும் அதைச் சரியென்று கூறமாட்டார்கள். வேலாயுதபிள்ளை, தனபாலசிங்கம், தணிகாசலம் போன்றோர் கடைசிவரையும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அதனால் விக்னேஸ்வரமூர்த்திக்கும் அவர்களுக்கும்

பிரச்சினைகள் வரலாம்.'' என்று நினைத்தான் கஜேந்திரன்.

**807. அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்**
**வழிவந்த கேண்மை யவர்.**

அன்புடன் நீண்ட நாட்கள் நட்புக் கொண்டு பழகியவர், தனக்கு அழிவு தரும் செயல்களைப் பழகியவர்கள் செய்தாலும் அவரிடம் அன்பு நீங்காமல் இருப்பர்.

## பயனுள்ள நாள்

வேலாயுதபிள்ளைக்கு விக்னேஸ்வரமூர்த்தி அன்று வீட்டுக்கு வந்து ஏசியது பிடிக்கவில்லை. அவரது செவிக்குள் விக்னேஸ்வரமூர்த்தி சொன்ன வார்த்தைகள் எதிரொலித்தன; "அவன் சரியான குடிகாரன். எதையும் பேசிவிட்டுப் போகட்டன். எதற்கும் பலாத்காரம் தீர்வாகாது. இவ்வளவு காலமும் பொறுமையாக இருந்த உனக்கு இன்று என்ன நடந்தது..? நாம் ஒருசெயலைச் செய்யுமுன் அதை நாம் செய்யலாமா... என்றும் எமது தகுதியென்ன... என்றும் சிந்திக்க வேண்டும்''

"விக்னேஸ்வரமூர்த்திக்குக் கல்விப் பணிப்பாளர் பதவி கிடைத்ததும் மாறிவிட்டார். உன்னை அவர் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. அத்துடன் கஜேந்திரன் 'நீங்கள் செய்ததை மன்னிக்க முடியாது என்று சொல்கிறான். அப்படித்தான் சுவாமியாருஞ் சொல்கிறார்.

சுவாமியாருக்கு வயது போனதால் வாக்கு மாறிவிட்டது'' என்றார் தனபாலசிங்கம்.

அன்று காலை சுவாமியார் வேலாயுதபிள்ளையை அழைத்துச் சொன்னார்: ''மகனே தனபாலனை ஊரில் யாரும் மதிப்பதில்லை. அவன் குடிகாரன். குடித்துவிட்டுப் பலவருட காலமாக அவன் வீதிகளில் அலம்பிக் கொண்டு திரிகிறான். அதை யாரும் இதுவரை கேட்டதில்லை. ஏனென்றால் மதுபானம் குடிப்பவன் விசரனை விட மோசமானவன். அவனுடன் நீ ஏன் சண்டைக்குப் போனாய்? அகிம்சையில் நம்பிக்கையும், அமைதியுங் கொண்ட நீ ஏன் பொங்கி எழுந்தாய்? சினத்தைக் காப்பவன் தன்னைக் காத்தவனாகிறான்; தன் குடும்பத்தையும் சுற்றத்தவரையும் காத்தவனாகிறான். பலிக்கும் இடத்தில் கோபப் படாமல் இருப்பவன் மகான். கோபம் அற்பமானது. பல துன்பங்களுக்கு அடிப்படையானது. மகிழ்ச்சியின் எதிரி. அது நண்பனையும் சுற்றத்தவரையும் பிரித்து விடும். நீ அன்று நடந்து கொண்ட முறையால் உனது நண்பர்களான விக்னேஸ்வரமூர்த்தியினதும் கஜேந்திரனதும் வெறுப்புக்குள்ளானாய். எனவே இனியாவது நீ அமைதியைப் பேணு. வயது சென்ற காலத்தில் ஒருவன் சினத்தை அடக்குதல் வேண்டும்; பொறுமையைக் காத்தல் வேண்டும். இனிமேல் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடாதே'' என்றார்.

''விக்னேஸ்வரமூர்த்தி எனது நண்பர்; நான் விசுவாசிப்பவர்; அவர் எதையுஞ் சொல்லட்டும். அவர் நான் செய்த தவறைச் சுட்டிக் காட்டினாரே

தவிர குறை சொல்ல வில்லை. கண்டித்தாரே தவிர கோபிக்கவில்லை. அதனால் அவர் எதையும் சொல்லலாம். சொல்லவும் கண்டிக்கவும் அவருக்கு உரிமை இருக்கிறது.'' என்றார் வேலாயுதபிள்ளை.

அப்போது தணிகாசலம் அங்கு வந்தார்; ‘‘எப்பவோ நடந்த விஷயத்தைப் பற்றி இப்போதும் ஏன் கதைக்கிறீர்கள்? அதைப்பற்றி இனிக் கதைக்கக்கூடாது'' என்றார் தணிகாசலம்.

‘‘நான் ஏன் கதைக்கப் போறன். விக்னேஸ்வரமூர்த்திக்கு இன்னும் மனம் சரிவரவில்லை. நேற்றும் ஒரு கதையில்; ‘‘வேலாயுதபிள்ளைக்கு இப்ப கோபம் வருகிறது. அவருடன் எதையும் கதைக்க முடியாதுள்ளது'' என்றார். ஜெயபாலன் நேற்று வந்து தனது தம்பியார் வேலாயுதபிள்ளைக்கு அடித்தது பிழை. அவன் கள்ளருந்திவிட்டு மயக்கத்தில் அப்படி நடந்து விட்டான். அவனை எனக்காக மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் அவன் அப்படி நடக்க மாட்டான். அதற்கு நான் பொறுப்பு'' என்று கூறினவனாம். அவன் அப்படிக் கூறிய பின்பு விக்னேஸ்வரமூர்த்தியின் போக்குச் சற்று மாறியுள்ளது. ‘‘கோயிலிலும் நாங்கள் நடந்து கொள்ளும் முறைகளைச் சற்று மாற்ற வேண்டும்'' என்றவர். இவ்வளவு காலமும் வராத சிந்தனை அவருக்கு இப்ப வந்திருக்கு. அதனால் தான் வேலாயுதபிள்ளை செய்ததைத் தவறு என்கிறார்'' என்றார் தனபாலசிங்கம்.

“அவர் எனது நண்பர். பலகாலமாக அவருடன் நான் பழகி வருகிறேன். அவர் தவறு செய்தாலும் பரவாயில்லை. நான் அதைப் பற்றிக் கதைக்க மாட்டன். முன்பு போலத்தான் பழகுவன். அவர் தவறு செய்யமாட்டார். அப்படி அவர் தவறு செய்தால் அத்தவறை அவர் செய்தநாள் மிகவும் நல்ல நாளென்றே நான் கருதுவேன்” என்றார் வேலாயுதபிள்ளை.

“விக்னேஸ்வரமூர்த்தி மிகவும் நேர்மையானவர். யார் தவறு செய்தாலும் அதைச் சுட்டிக்காட்டுபவர். எந்த ஒன்றையும் முகத்திற்கு நேரே சொல்பவர். அப்படியானவர் தவறு செய்யமாட்டார். செய்தாலும் அதைப்பற்றிப் பரவாயில்லை. ஏனென்றால் அத்தவறால் யாருக்கும் துன்பம் நேராது” என்றார் தணிகாசலம்.

வேலாயுதபிள்ளை வழக்கம் போலச் சத்தமாகச் சிரித்தார். அவர் அப்படிச் சிரித்தால் பூரணமான மகிழ்வுடன் இருக்கிறார் என்று அர்த்தம்.

**808.கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு**
**நாள்இழுக்கம் நட்டார் செயின்.**

பழகிய நண்பர் செய்த தவறு பற்றிப் பிறர் சொன்னாலும் கேளாத உரிமை உள்ளவருக்கு, அந்த நண்பர் தவறு செய்வாரானால் அந்த நாள் பயனுள்ள நாளாகும்.

**உலகம் போற்றும்**

நாவலர் ஸ்ரீ வித்தியா மகாகணபதி கோயில் ஆனி மாதம் கொடியேறிப் பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். அதன் ஆறாம் திருவிழாவையும் ஏழாம் திருவிழாவையும் செய்பவர்கள் வேளாளர் அல்லர். அதனால் அவ்விரு திருவிழாக்களிலும் பிரசாதங்களை வேளாளர் வாங்குவதில்லை. வேளாளர்களுக்கு அவ்விரு தினங்களும் குருக்கள் திருநீறும் சந்தணமும் தீர்த்தமும் பூவும்தான் கொடுப்பார். அவற்றைப் பெற்றதும் அவர்கள் சென்று விடுவார்கள். ஆறாந்திருவிழாவின்போது அத்திருவிழா உபயகாரர் பகல் திருவிழா முடிந்ததும் அன்னதானம் கொடுப்பார்கள். ஆறாந்திருவிழாக்காரரும் வேறுசிலரும் தான் அன்னதான நிகழ்வில் கலந்து கொள்வார்கள். ஜெயபாலன் ஆறாந்திருவிழா உபயகாரன். அதனால் ஜெயபாலன் விக்னேஸ்வரமூர்த்தியோடு காரசாரமாக அதைப்பற்றிக் கதைத்து விட்டான். அவன் கதைத்த பின்பு அவன் கதைத்ததில் நியாயமிருப்பதாக விக்னேஸ் வரமூர்த்தி நினைத்தார். ஆறாம் திருவிழாவன்றும் ஏழாம் திருவிழாவன்றும் குருக்கள் செய்து மகாகணபதிக்கு நிவேதித்த பஞ்சாமிர்தம், மோதகம், வடை போன்றவற்றைப் பலர் வாங்குவதில்லை. அது மிகப்பெரிய தவறு என்று நினைத்தார். விக்னேஸ்வரமூர்த்தி தான் இம்முறைத் திருவிழாவின் போது பிரசாதத்தை வாங்குவேன் என்றும் அன்னதானத்தில் கலந்து கொள்வேன் என்றும் தணிகாலசலத்திற்குச் சொன்னார். தணிகாசலத்திற்கு அது பிடிக்கவில்லை.

“உங்களின் விஷயத்தில் தலையிட நான் விரும்பவில்லை. நீங்கள் படித்தவர் அதனால் யாவும் தெரிந்தவர். அதனால் நான் உங்கள் விஷயத்தில் தலையிட விரும்பவில்லை. நீங்கள் விரும்பியபடி

செய்யுங்கள். ஆனால் மற்றவர்களைத் தெண்டிக்காதீர்கள். அவர்கள் குறை நினைப்பார்கள். எனக்கு வாங்க விருப்பமில்லை. அதைப் போலத்தான் மற்றவர்களும் விரும்பாமலிருப்பார்கள்'' என்றார் தணிகாசலம்.

''நான் யாரையும் வற்புறுத்தவோ, வாங்கிச் சாப்பிடச் சொல்லியோ சொல்ல மாட்டன். அது அவரவர் விருப்பம். உன்னுடன் நீண்ட நாள் அன்பின் அடிப்படையில் பழகி நட்புக் கொண்டிருந்தேன். நட்பின் காரணமாகத்தான் உனக்குச் சொல்கிறேன். உரிமை விட்டுப் போகாமல் தொடர்ந்து நாம் நண்பர்களாக இருப்பவர்கள். நீ தவறு செய்தாலும் கூட நான் அதைப் பெரிதாக நினைக்கமாட்டன். உனது நட்பைத் துண்டிக்க மாட்டன்; தொடர்ந்து பழகியபடியே பழகுவேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நான் ஆறாம் திருவிழாவின் போதும் ஏழாம் திருவிழாவின் போதும் பிரசாதங்களை வாங்கியுண்ணாதது தவறு என்று நினைக்கிறீர்களா..?'' தணிகாசலம் கேட்டார்.

''தவறுதான். கோயிலில் மகா கணபதிக்கு நிவேதிக்கப்பட்ட உணவான பிரசாதத்தை வாங்கி உண்ணாது விட்டால் மகாகணபதி கோபிப்பார்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

அதைத் தணிகாசலத்தால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. உரிமையுடன் நீண்ட நாட்களாக நட்புக் கொண்டிருக்கும் விக்னேஸ்வரமூர்த்தியோடு

ஏன் விவாதிப்பான் என்று நினைத்த தணிகாசலம்; “திருவிழாவுக்கு இன்னும் மூன்று மாதங்கள் இருக்கிறது. திருவிழா வரட்டும். அதைப்பற்றி யோசிப்போம்” என்றார்.

“நான் வாறன் தணி, இப்ப நீ எனது வீட்டுக்கு வருவதில்லை. இரவைக்கு வாறியா?” என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி”.

“நீங்கள் இப்போது வீட்டில் இருப்பது குறைவுதானே. முன்பென்றால் பாடசாலையில் இருப்பீர்கள். வந்து சந்திக்கலாம். இப்ப பட்டணத்திற்குச் சென்று விடுகிறீர்கள்” என்றார் தணிகாசலம்.

அன்றிரவு தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்று நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

நாட்கள் நகர்ந்தன. விக்னேஸ்வரமூர்த்தியும் தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் முன்பு போலவே பழகி வந்தனர்.

அன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய ஆறாம் திருவிழா. பூசை முடிந்து சுவாமி வீதிவலம் வந்தபின் விக்னேஸ்வரமூர்த்தி அன்னதான மடத்திற்குச் சென்று சபையில் அமர்ந்தார். வெகுநேரத்தின் பின் தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் வந்து அவருக்குப் பக்கத்தில் அமர்ந்தனர்.

விக்னேஸ்வரமூர்த்தியின் நட்பை வேலாயுதபிள்ளையும் தணிகாசலமும் விடமாட்டார்கள் என்று அந்த வருடத் திருவிழா முடியும்வரை மக்கள் ஓயாமல் புகழ்ந்து கதைத்தனர்.

**809. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**
**விடாஅர் விழையும் உலகு.**

உரிமை கெடாமல் தொடர்ந்து நண்பர்களாய் இருப்பவர்களுள் ஒருவர் தவறு செய்த போதும், அவரது நட்பைக் கைவிடாதவரை உலகம் போற்றும்.

## பகைவரும் விரும்புவர்

மகாகணபதி ஆலய ஆறாம்திருவிழாவுவில் வழமையாக நடைபெறும் அன்னதான நிகழ்வில் விக்னேஸ்வரமூர்த்தி பங்குபற்றுவாரென அவ்வூர் மக்கள் நினைத்திருந்தனர். “இதைப் பற்றி முன்பே நான் யோசிக்கவில்லை. குடிகாரனென்றாலும் தனபாலன் அன்று கூறிய வார்த்தைகள் உண்மையானவை. இதற்கு முன்பு அப்படியாராவது சொல்லவில்லை. அப்படி யாராவது சொல்லியிருந்தால் நான் இப்படியான தவறைச் செய்திருக்க மாட்டன்” என்று தன்னைச் சந்திப்போரிடம் விக்னேஸ்வரமூர்த்தி சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் அவர் தனது மனைவிக்கு அதைக் கூறிக் கவலைப்பட்ட போது அவள் சொன்னாள்; “நான் அறிந்தவரை நீங்கள்

எப்போதென்றாலும் கோயிலுக்குப் பகல் திருவிழாவுக்குப் போனனீங்களா..? தேர்த்திருவிழாவிலன்றும் கூட உங்களுக்குப் பாடசாலையில் வேலைகள் இருக்கும். காலையில் ஆறுமணிக்குப் பாடசாலைக்குச் சென்று இரவு ஏழுமணிக்குப் பின்புதான் வருகிறீர்கள். அந்த நேரம் இரவு பூசை கூடச் சில சமயம் முடிந்து விடும். பிறகு எப்படிப் பகலில் நடைபெறும் அன்னதானத்தில் நீங்கள் கலந்து கொண்டு சாப்பிடுவது?''

விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார். ''இதுவும் எனக்கு நினைவுக்கு வரவில்லை. அதனால் நான் தேவையில்லாமல் கவலைப்பட்டனான்'' என்றார்.

ஆறாம் திருவிழாவன்று விக்னேஸ்வரமூர்த்தி சகலருடனும் பந்தியில் அமர்ந்ததும் அவரின் அருகில் இருந்தவர்கள் மெல்ல எழுந்து மறு கரையில் சென்று அமர்ந்தனர். பலர் வந்து வேடிக்கை பார்த்தனர். கனகலிங்கமும், ஜெயபாலனும், தனபாலனும் ஆச்சரியத்துடன் பார்த்தனர்; ''விக்னேஸ்வரமூர்த்தி வாத்தியார் வந்து பந்தியிலிருந்து சாப்பிடுவர் என்று எனக்குத் தெரியும். தணிகாசலமும் வேலாயுத பிள்ளையும் கடைசிவரையும் வந்து சாப்பிடாங்கள். அவங்கள் சரியான சாதித்திமிர் பிடிச்சவங்கள். ஒருநாளைக்கு நன்றாகக் கள்ளைக்குடித்து விட்டு தணிகாசலத்திற்கும் வேலாயுதபிள்ளைக்கும் அடிக்க வேண்டும். அடித்தால் ஏழெட்டு நாட்களுக்கு அவர்கள் வைத்தியசாலையில் படுக்க வேண்டும். காவல்துறையினர் பிடித்தால், அண்ணை காசைக் கொடுத்துச் சமாளிப்பர். கோயில் திருவிழா

முடியட்டும்'' என்று நினைத்தான் தனபாலன். அவன் அதை ஜெயபாலனுக்குச் சொன்ன போது அவன் மிகவும் மகிழ்ந்தான்; ''நீ இரண்டு பேரையும் அடித்து முறி. நான் செலவு செய்யிறன். காசாலை எதையுஞ் செய்யலாம். என்னை முந்தி ஒரு பொருட்டாக மதியாதவங்கள் இப்ப மதிக்கிறாங்களெண்டால் அதுக்கு காரணம் என்னட்டை காசு இருக்கிறது தான். நீ அதை முதலில் செய். நீ செய்யாட்டியும் ஆரிட்டையாவது காசைக்கொடுத்துச் செய்வீ''

அப்படி ஜெயபாலன் சொல்வானென நினைக்காத தனபாலன் மிகவும் மகிழ்ந்தான். ''சீனியனிடமும் கிருஷ்னனிடமுஞ் சொன்னால் செய்து முடிப்பார்கள்'' என்றான்.

திருவிழா முடிய தணிகாசலத்திற்கும் வேலாயுதபிள்ளைக்கும் அடிக்க வேண்டும் என்று நினைத்த தனபாலனுக்கு அவர்கள் இருவரும் பந்தியில் வந்தமர்ந்து சாப்பிட்டது அதிர்ச்சியைக் கொடுத்தது.

''அண்ணை வாத்தியாருக்கும் வேலாயுதபிள்ளை அண்ணைக்கும் தணிகாசல மண்ணைக்கும் சாப்பாட்டைப் போடு. அவர்கள் சாப்பிட்டு முடியும்வரை அவர்களுக்குப் பக்கதத்தில் இருந்து கவனி'' என்றான் தனபாலன்.

தொப்புளுக்குக் கீழ் அரையடி தூரத்தில் தொங்கிய இரட்டைப் பட்டுப் பவுண் சங்கிலியைத் தூக்கி மடித்து தோளில் போட்டுவிட்டு, வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு அவரச அவசரமாக அவர்களுக்கருகில் சென்றான் ஜெயபாலன்.

“வேலாயுதபிள்ளையும் தணிசாலமும் விக்னேஸ்வரமூர்த்தி குறைநினைப்பார் என்பதற்காகத்தான் சபையில் இருந்து சாப்பிட்டவை. இரண்டு பேரும் சாதித்திமிர் பிடிச்சவங்கள்” என்றான் கிருஷ்னன்.

“மிகவும் பழகிய நண்பர் தவறு செய்த போதிலும் தம் நட்புரிமைக்காக அதைத் தாங்கி நடந்து கொள்பவர்களைப் பகைவர்களும் பாராட்டுவார்கள்; மதித்து நடப்பார்கள். தனபாலு, நீ வேலாயுதபிள்ளையையும் தணிகாசலத்தையும் இனிமேல் மதித்து நட. அன்று பிரச்சினைப்பட்டதற்கு மன்னிப்புக் கேள். இனிமேல் சந்திகளிலும் தெருவிலும் அவர்களைப் பற்றிக் கதையாதே” என்றான் ஜெயபாலன்.

**810. விழையார் விழையப் படுப பழையார்கண்**
**பண்பின் தலைப்பிரியா தார்.**

பழகிய நண்பர் தவறு செய்த போதிலும் தனது நட்புரிமையை விடாது போற்றுபவரைப் பகைவர்களும் விரும்புவார்கள்.

## தேய்வது நன்று

அன்று ஞாயிற்றுக்கிழமை பல நாட்களுக்குப் பின்பு கஜேந்திரன் வித்தியாவை அவளது வீட்டில் சென்று சந்தித்தான். வித்தியாவின் தாயாரும் சுவர்ணாவின் தாயாரும் அன்று வல்லிபுரக் கோயிலுக்குச் சென்று விட்டனர். வல்லிபுர ஆழ்வாருக்குப் பூசை செய்வதாயின்

ஞாயிற்றுக்கிழமைகளில் தான் பூசை செய்ய வேண்டுமென்று அவ்வூர் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். அதனால் முதல் நாளே வித்தியா அதைக் கஜேந்திரனுக்குக் கூறியிருந்தாள்.

அன்று அவள் இளஞ்சிவப்புச் சட்டை அணிந்திருந்தாள். மிகவும் அழகாக வாரிப்பின்னியிருந்த கூந்தலில் சிவப்புநிற ரோஜாப்பூவொன்றை அணிந்திருந்தாள். அவன் அவளது வீட்டுக்கு வரும் நாட்களில் அவள் தன்னைப் பிரமாதமாக அலங்கரித்திருப்பாள்.

தேநீர்க்கோப்பையைக் கொண்டு வந்து நீட்டினாள் வித்தியா. அவன் அதை அவளது கையோடு சேர்த்துப் பிடித்தான். அவள் எதுவும் பேசவில்லை. முறுவலித்தாள். மின்னல் கோட்டைப் போல அவளது கீழுதடு மெல்ல அசைந்தது.

தேநீரைக் கொடுத்து விட்டு அவனுக்கு எதிராக இருந்த நாற்காலியில் அமர்ந்தாள் வித்தியா.

“இன்று நீர் மிகவும் அழகாக இருக்கிறீர். அதனால் மனம் தவிக்கிறது” என்றான் கஜேந்திரன்.

“நான் உங்களுடன் கதைக்கமாட்டன்”

“ஏன்?” என்றவாறு எழுந்து அவளின் அருகே வந்தான் கஜேந்திரன். அவள் நாற்காலியால் எழுந்தாள். அவளது கூந்தலில் இருந்த ரோஜாப்பூ மூக்கை அரித்தது.

அவளது கண்கள் மிரண்டு தாழ்ந்தன; "என்ன செய்வது. உங்கள் மீது அன்பு வைத்துவிட்டேன். அதனால் உங்களைப் பார்ப்பதற்காகத் துடியாகத் துடிக்கிறேன். அதைப் பயன்படுத்தி நீங்கள் என்னைவிற்கிறீர்கள்.." அவளது கண்கள் கலங்கின.

"என்ன சொல்கிறீர்...?" பதறினான் கஜேந்திரன்.

"கதையெழுதுவதனால் எழுதுங்கோ. காயத்திரியின் வர்ணனையாவும் என்னைக் குறிக்கின்றன. வளர்மதி; "உனது முதுகில் மச்சம் இருக்கா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள். அந்த நேரம் எனது உயிர் அவமானத்ததால் போய்விட்டது" விம்மினாள்.

"அதுவா...? உமக்கு எங்கே முதுகில் மச்சமிருக்கு...? இருந்தாலும் எனக்கு எப்படித்தெரியும்?" என்று கேட்டான் கஜேந்திரன்.

"இருந்ததோ இல்லையோ... நீங்கள் எழுதியவுடன் எனது சிநேகிதிகள் நீங்கள் அனுபவப்பட்டவர் என்கிறார்கள்"

"என்னுடைய உலகம் நீர்தானே. அதனால் உமது செயல்கள், அசைவுகள் அனைத்தையும் வரலாறு ஆக்குகிறேன். நாம் இல்லாத காலத்திலும் எமது காதலை உலகம் போற்ற வேண்டும். உம் மீது நான் கொண்ட அன்பை உலகத்தினர் தெரிந்து கொள்ளல் வேண்டும். அதற்காகத் தான் எழுதுகிறேன். ஒரு கவிஞன் அல்லது எழுத்தாளன்

தனது அனுபவத்தைத்தான் எழுதுகிறான்'' என்றான் கஜேந்திரன்.

''பலநாட்களாக உங்களை நான் காணவில்லை. இப்போது உங்களுக்கு எனது அன்பைவிடப் பணம்தான் தேவையாக இருக்கிறது. ஜெயபாலனுடன் ஏன் கூடித்திரிகிறீர்கள்? அவனுக்கச் சார்பாகக் கதைக்கிறீர்கள் என்று பலர் குறைப்படுகிறார்கள்''

''யார் வேலாயுதபிள்ளை அண்ணை சொன்னவரா...?'' என்று கேட்டதும் வித்தியா சற்றுத் தடுமாறினாள்.

''வித்தி, நான் எப்படிப்பட்டவன் என்று உமக்கு நான் சொல்லத் தேவையில்லை. ஜெயபாலன் எப்படிப்பட்டவன் என்றும் உமக்குத் தெரியும்'' என்று கஜேந்திரன் கூறும் போது சற்றுக் கோபத்துடன் குறுக்கிட்டாள் வித்தியா; ''அவருக்கு எப்போது வந்தது இப்பணம். ஊர் முழுவதையும் கொள்ளை அடித்தவன். அம்மாவுடைய சங்கிலியை அறுத்தவன். அவனுடன் உங்களுக்கு என்ன கதை? உங்கள் மீது மிகுதி யான அன்பு கொண்டவன் போல அவன் நடிக்கிறான். ஆனால் அவன் கெட்டவன். நல்ல பண்பில்லாதவர்களுடன் நட்புக் கொள்ளக்கூடாது என்று எல்லாம் வல்லவரான உங்களுக்குத் தெரியாதா...?''

''எல்லாம் தெரியும். அவன் என்மீது அன்பு கொண்டவன் போல நடிக்கிறான். ஆனால் அவன் நல்ல பண்புகளில்லாதவன் என்பதும்தெரியும். அதனால் நானும் நடிக்கிறேன்.'' என்றவாறு அவளை

அணைத்த கஜேந்திரன்; "அம்மா கோயிலால் வருமுன்..." என்றான். அதன்பின் இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

சில கணங்களின் பின் வித்தியா சொன்னாள்; "நீங்கள் அவனோடு பழகுவதை என்னால் அனுமதிக்க முடியாது".

"சரி.... தாழ்மையுடன் ஏற்றுக் கொள்கிறேன்" என்றான் கஜேந்திரன்.

**811. பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை**
**பெருகலின் குன்றல் இனிது.**

அன்பு மிகுதியால் நலம் செய்வாரைப் போலத் தோன்றினாலும் நற்பண்புகள் இல்லாதவரது நட்பு வளர்வதை விடத் தேய்வதே மேலானது.

## தகுதியற்ற நட்பு

"உங்களைப் பற்றி எனக்குத் தெரியும். என்னைக் கண்டதும் பூனை மாதிரிக் கண்களை மூடி அடங்கியிருப்பீர்கள். நான் சொல்வதெல்லாவற்றையும் கேட்பீர்கள்; என்மீது அதிக அன்பு பூண்டவரைப் போலக் காட்டிக் கொள்வீர்கள். இதெல்லாம் நான் அருகில் இருக்கும் போது மட்டும் நடக்கும் செயல்கள். நானில்லாத இடங்களில் செய்வதெல்லாம் கூடாத செயல்கள். நான் அவற்றை அறிய மாட்டேன் என்ற துணிவு தானே அதற்குக் காரணம்." சீறினாள் வித்தியா.

“இப்படிக் கதைத்து என்னைக் கொல்வதற்காகவா இங்கு என்னை வரச்சொன்னீர். எனது மாமி இப்போது வந்தால்…..” அவன் வார்தைகளை முடிக்கு முன்; “மாமி வந்தாலென்ன? அம்மா, நீ இல்லாத போது இவர் வந்து என்னோடு கூடியிருந்து விட்டார். இவரது மயக்கு வார்த்தைகளை நம்பி நான்மோசம் போய் விட்டேன்” என்று ஊரைக் கூட்டுவேன்.

கஜேந்திரன் அட்டகாசமாகச் சிரித்தான்; “அப்போ இன்றைக்குக் கொண்டாட்டம் தான். மாமி வந்தால் மெல்லமாய்த் தப்பிவிடலாம். உம்முடைய கரைச்சலிலிருந்து விடுதலை பெறலாமென நினைத்துக் கூறினேன். ஆனால் மனிசிக்கும் அந்த ஆசை இருக்கு. அதை வெளிப்படுத்தற்கு நன்றி” என்றவாறு அவளை அணைத்தான்.

“ஐயோ, என்னுடைய உயிர் போகிறது. மூச்செடுக்க முடியவில்லை விடுங்கோ…”

மெல்லத் தனது அணைப்பைத் தளர்த்தினான் கஜேந்திரன்; “இப்ப நீங்கள் வலுமோசம்; கதைக்கும் கதைகளும் பிழை; செய்யும் செயல்களும் பிழை; கூடத் திரிபவர்களும் பிழையானவர்கள்” கொதித்தாள் வித்தியா.

சிரித்தான் கஜேந்திரன். அந்தச் சிரிப்பு அவளுக்கு ஆத்திரத்தைக் கூட்டியது; ”ஒரு பெண்ணுக்குத் தனது புரிசன் நல்லவனென்று ஊரவை சொன்னால் அதைவிடச் சந்தோசமானது

எதுவும் இல்லை. இப்போ நீங்கள் சேரக் கூடாதவர்களுடன் சேர்கிறீர்கள்.''

''வேலாயுதபிள்ளை அண்ணைதான் எல்லாவற்றிற்கும் காரணம்'' என்று அவன் சொல்லும் போது முதல் நாள் மாலை அவளது வீட்டுக்கு வந்த வேலாயுதபிள்ளை சொன்ன வார்த்தைகள் அவளது நினைவுக்கு வந்தது. ''இப்ப கஜேந்திரன் கெட்டுப் போனான். அவன் சேர்ற ஆட்கள் சரியில்லை. முன்பு நீதி நியாயம் என்று வரிக்கு வரி கூறுபவன் இப்ப குடிகாரருடனும் திருடர்களுடனும் சேர்ந்து திரிகிறான். இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.?''

''ஓம் வேலாயுதபிள்ளை அண்ணைதான் காரணம். அவர் கூடாதவர் என்று சொல்லுங்கோ பார்ப்பம். முன்பு நீங்கள் என்ன சொன்னனீங்கள்; ''வேலாயுதபிள்ளை அண்ணையை மாதிரி ஒரு நல்ல மனிதர் இந்த ஊரிலை இல்லை'' என்றனீங்கள். அவர் உங்களைப் பற்றி இல்லாத பொல்லாத செய்திகளைச் சொல்வாரே.... அதைத்தான் விட்டாலும் கெட்டவர்களைக் கூட அவர் மதிக்கிறவர்.'' கோபத்தால் கத்தினாள் வித்தியா.

''இவ்வளவு காலமும் எமது காதலைப் பற்றித் தான் பிரச்சினைப்பட்டோம்... இப்ப ஊரைப்பற்றி....'' என்று கஜேந்திரன் கூறும் போது வித்தியா குறுக்கிட்டாள்; ''எது ஊர்... எது ஊர்.... நீங்கள் கெட்டவர்களுடனும் திருடர்களுடனும் சேர்ந்து திரிவது ஊர்ப் பிரச்சினையா...? அதுவும்

காதல் பிரச்சினைதான். தமக்குப் பயனுள்ள போது நட்புக் கொள்வதும், பயனில்லாத போது நட்பிலிருந்து நீங்கி நல்லவர்களைக் குறை சொல்வதுதான் நட்பென்று நீங்கள் கருதுகிறீர்களா...? நட்பென்ற உறவுக்குத் தகுதியில்லாதவர்களை மதிக்கக்கூடாது; அவர்களுடன் பழகக்கூடாது; அவர்களை ஒதுக்கி விடல் வேண்டும். ஆனால் அவர்களைத்தான் நீங்கள் மதிக்கிறீர்கள்.'' என்றாள் வித்தியா.

"வித்தி...'' அன்போடு அழைத்தவாறு அவளின் அருகில் சென்றான் கஜேந்திரன்.

இன்று உங்களை வரச்சொன்னது உங்களது ஏமாற்று வார்த்தைகளைக் கேட்பதற்கல்ல. ஏமாற்றும் உங்களது உறவைத் துண்டிக்கப் போவதைச் சொல்வதற்கு'' என்றாள் வித்தியா.

**812. உறின்நட்டு அறின்ஒருஉம் ஒப்பிலார் கேண்மை**
**பெறினும் இழப்பினும் என்?**

தமக்குத் தேவையுள்ள போது நட்புப் பூண்டு, பயன் இல்லாத போது நீங்கிச் செல்லும் தகுதியற்றவரின் நட்பைப் பெற்றாலென்ன? இழந்தாலென்ன?

## சமமானவர்கள்

"இன்று நான் உங்களை இங்கு வரச்சொன்னது உங்கள் ஏமாற்று வார்த்தைகளைக் கேட்பதற்காக அல்ல. ஏமாற்றும் உங்களது

உறவைத் துண்டித்து விட்டேன் என்று சொல்வதற்கு'' திரும்பவும் கடுஞ் சினத்துடன் கூறினாள் வித்தியா.

கஜேந்திரன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். அவனது மனதுள் பெரும் பிரளயம் நடைபெற்றது. இவ்வளவு காலமும் அவளது மனம் நோகக்ககூடாதென்பதில் அவன் மிகவும் கவனமாக இருந்தான். அவளை விட உயர்ந்த பொருள் எதுவும் இல்லை என்று நினைத்திருந்தான். அதைப் போலவே அவளும் நினைக்க வேண்டும் என்பது தான் அவனது இலட்சியமாக இருந்தது. உண்மை நிலையை ஆராயாது யாரோ ஒருவர் சொன்னதை வைத்துத் தன்னை எடை போட்ட வித்தியாவை நினைக்க அவனுக்கு முதன்முதலாக வெறுப்பு வந்தது; ``சரி, நீர் அப்படி நினைத்தால் நான் எதுவும் செய்ய முடியாது. நம்பிக்கை என்பது மனதில் உண்டாக வேண்டும். அப்படி உண்டாகிய பின்பு மாறுதலடையக் கூடாது. நண்பர்கள் விஷயத்திலும் காதலர் விஷயத்திலும் நம்பிக்கையைப் பொறுத்துத்தான் யாவும் நடைபெறுகின்றன. தான் உயிருக்குயிராகக் காதலிக்கும் காதலனைவிட யாரோ ஒருவர் கூறிய வார்த்தைகளில் தான் உமக்கு நம்பிக்கை இருக்குமானால் அதைவிடப் பாவமான செயல் வேறு எதுவும் இல்லை. நான் உமது விருப்பத்தை ஏற்றுச் செல்கிறேன். உமக்கு என்மீது நம்பிக்கை பிறந்தால் என்னைத் தேடி வாரும். இல்லாவிட்டால் உம்மை நினைத்தே வாழ என்னால் முடியும்.'' என்று எழுந்தான் கஜேந்திரன்.

வித்தியா அவனை உற்றுப் பார்த்துக் கொண்டு சில கணங்கள் இருந்தாள். அவள், தான் சொன்ன வார்த்தைகளுக்கு அஞ்சியவளாகத் தெரியவில்லை என்று கஜேந்திரனுக்குப் புரிந்தது; ‘‘வேலாயுதபிள்ளை தனபாலனுக்கு அடித்தது மிகப் பெரிய தவறு’’ என்று அவன் கூறியதற்குப் பழிவாங்குவதற்காகவே வேலாயுதபிள்ளை அன்று அவளது வீட்டுக்குச் சென்று இவற்றைக் கூறியிருக்கிறார் என்று நினைத்தான் கஜேந்திரன். அன்று வித்தியாவைத் துவிச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்றதைக் கண்டதைப் பற்றிக் கதைக்கத்தான் அன்று வேலாயுதபிள்ளை வித்தியாவின் வீட்டுக்குச் சென்றிருப்பார்’’ என்றும் நினைத்தான் கஜேந்திரன்.

‘‘நட்பின் உயர்வைக் கருதாமல், தான் கொள்ளப் போகும் நட்பில் என்னென்ன பயன்கள் கிடைக்குமென்று கணக்குப் பார்ப்பவரும், அன்பினை நினைக்காமல் பொருளை மட்டும் நினைக்கும் விலைமாதரும், திருடர்களும் சமமானவர்கள்’’ என்றாள் வித்தியா.

கஜேந்திரன் அவள் கூறிய வார்த்தைகளுக்குப் பதில் கூறவிரும்பவில்லை. ஒவ்வொன்றிற்கும் பதில் கூறிக் கொண்டிருந்தால் அதுவீணாண பிரச்சினைகளை உருவாக்கி மனஸ்தாபத்தை உண்டு பண்ணுமே தவிர அதற்குத் தீர்வாக அமையாது என்பதால் எழுந்த அவன் வித்தியாவின் முகத்தைப் பார்த்தான். அவளுக்காக, அவளின் அன்புக்காக அவன் அலைந்த அலைச்சலை நினைத்துப் பார்த்தான்; ‘‘எய்தவன் இருக்க அம்மை நோவதால் எந்தப் பயனும்

இல்லை'' என்று நினைத்துத் திரும்பவும் நாற்காலியில் அமர்ந்தான்.

''போகப்போகிறீர்களா....? என்னை மறந்து போகப் போகிறீர்களா...? அந்தளவில் யாரோ ஒருவனின் நட்பு உங்களுக்கு உயர்வாகி விட்டது. பயன்கருதிப் பழகும் விலை மாந்தர்களினதும் திருடர்களினதும் நட்பு, உயிருக்குயிராக நேசிக்கும் என்னை வெறுக்கச் செய்து விட்டது'' கோபத்தை மறந்து விம்மி விம்மி அழுதாள் வித்தியா.

''பெண்களுடன் கதைக்கவே முடியாது. அதுவும் காதல் கொண்ட பெண்களோடு எதுவும் கதைக்க முடியாது. அவர்கள் ஆண்களின் பலவீனத்தைப் புரிந்து வைத்து, ஆண்களைக் கதைக்க விடாது தாமே யாவற்றையும் கற்பனை செய்து கதைப்பார்கள். உண்மையைச் சொன்னாலும் ஏற்கமாட்டார்கள்'' என்று நினைத்தான் கஜேந்திரன்.

''அழும் எனக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறவோ, அல்லது பயன்கருதி நட்புப் பூண்டுள்ள அத்தீயவர்களின் நட்பைத் துண்டிப்பேன் என்று சொல்லவோ இன்று உங்களால் ஏன் முடியாமற் போனது? என்னை விட அவர்கள் உயர்ந்தவர்களாகி விட்டார்களா...? நான் மோசம் போய் விட்டேன். உங்களுக்காக எனது உறவுகள் அனைத்தையும் வெறுத்தேன். நீங்கள்....'' மேலே பேசமுடியாது உணர்ச்சி மிகுதியால் அவதிப்பட்டாள் வித்தியா.

**813. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது கொள்வாரும் கள்வரும் நேர்.**

கிடைக்கப் போகும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், அன்பை நினைக்காமல் பொருளை விரும்பும் விலை மாதரும், திருடர்களும் சமமானவர் ஆவார்.

## அறிவற்ற குதிரை

எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அதை நம்பாது வீணான கற்பனைகளை மனதில் உருவாக்கி, அதனால் வந்த பெருந்துன்பத்தைத் தாங்க முடியாது அவதிப்படும் வித்தியாவைப் பார்த்தான் கஜேந்திரன்; "இவ்வளவு துன்பமும் தேவைதானா?" என்று அவனது மனம் கேட்டது.

மற்றைய வேளைகளில் அவள் சிறிது கலங்கினாலும் உடனே துடிதுடித்து, அவளது கன்னங்களால் வழியும் கண்ணீரைத் தனது கையால் துடைத்து; "அன்பே, என் அமுதே, என்னுயிரே, இச் சிறு சம்பவத்திற்காக இவ்வளவு கண்ணீரைச் செலவு செய்து உமது அழகைக் குறைக்கிறீரே இது உமக்கு நியாயமா? அழகிய தேரைப் போன்ற அற்புதமான அழகு கண்ணீரில்கரைந் தொழுகுகிறது. அதனால் வனப்புக் குறைகிறது. தயவு செய்து அழாதையும். நான் உமது விருப்பப்படி நடந்து உம்மைக் கண் கலங்காமல் வைத்திருப்பேன். என்னை நம்பும். சிரியும்; சிரியும்; தயவு செய்து சிரியும்" என்று தொடக்கூடாத இடங்களிலெல்லாம் அதைச்

சாட்டாக வைத்துத் தொட்டுத் தன்னை இன்பப் பரவசத்திலாழ்த்தும் கஜேந்திரன் பிடித்து வைத்த பிள்ளையார் போல இருந்தது அவளுக்குத் துக்கத்தை அதிகரிக்கச் செய்தது. அத்துடன் தான் சொன்னவையெல்லாம் பொய் என்று கூறித் தன்னைச் சமாதானஞ் செய்வானென்று எதிர்பார்த்தாள் வித்தியா. முதல் முறையாக அந்த எதிர்பார்ப்பு தோல்வியில் முடிந்ததை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"நான் உங்களை எந்த நிலையில் நேசித்தேன் என்பதைச் சற்று நினைத்துப் பாருங்கள். அம்மா தனது ஒரே ஒரு சகோதரனின் மகனுக்கு என்னைத் திருமணஞ் செய்து தருவதாகத் தனது சகோதரனுக்குக் கூறியுள்ளார். அவர் அதை மிகவும் மகிழ்வுடன் ஒப்புக் கொண்டு தற்பொழுது தினமும் அம்மாவுடன் அதைப் பற்றித் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைத்துக் கொண்டிருக்கிறார். நான் தான் ஏமாந்துவிட்டேன்...." கதைப்பதை விட்டுவிட்டு விம்மினாள் வித்தியா.

"இப்பவும் காலம்போகவில்லை, என்னை விட்டு விட்டு அவனைச் செய்" என்று கூற வேண்டும் போலக் கஜேந்திரனது உதடுகள் துடித்தன. ஆனால், அதனால் பெரும் பிரச்சினைகள் வருமென நினைத்துத் தன்னைக் கட்டுப்படுத்தினான் கஜேந்திரன்.

"போர் நடக்கும் காலத்தில் தன்னை நம்பிய வீரனை போர்க்களத்தில் கீழே தள்ளிவிட்டு ஓடும் நன்றிகெட்ட அறிவில்லாத குதிரையை விட, நட்பென்பதே இல்லாமல் தனித்திருப்பது நல்லது.

நான் அந்தப் போர்வீரனை மாதிரி ஏமாந்து விட்டேன்'' சற்றுப் பெரிதாக அழுதாள் வித்தியா.

கஜேந்திரன் எழுந்து அவளின் அருகில் வந்தான். வித்தியா மறுபக்கம் தனது முகத்தைத் திருப்பினாள்; ''இவ்வளவு காலமாக உயிருக்கயிராக நேசிப்பவனில் இல்லாத நம்பிக்கை, யாரோ ஒருவரில் வந்து விட்டது. என்னைப் பொறுத்தவரை நான் உண்மையைப் பேசுவேன்; நீதியானவற்றைக் கதைப்பேன். இது உமக்குத் தெரியும். நீதிக்காக எதையும் இழக்க நான் தயங்கமாட்டன் என்பதும் உமக்குத் தெரியும். உமது தாயார் தனது சகோதரனின் மகனுக்கு உம்மை நிட்சயம் செய்ததும் எனக்குத் தெரியும். அதனால் நீர் பெரும் பாக்கியங்களை இழக்கப் போகிறீர் என்றும் தெரியும். உமக்காக, உமது காதலுக்காக நான்பட்ட கஷ்டங்கள் யாவும் உமக்குத் தெரியும். அதே போல உம்மீது நான் கொண்ட அன்பின் வலிமையும் தெரியும். அத்தனையையும் தெரிந்து கொண்ட நீரா இப்படிப் பேசுவது? வார்த்தைகளுக்குள்ள சக்தி உலகத்தில் எவற்றிற்கும் கிடையாது. அதனால், ''எதைக் காக்கா விட்டாலும் நாவைக் காக்க வேண்டும்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். பெரியவர்களுக்கே ஆலோசனை கூறக்கூடிய மேதாவியான உமக்கு இது தெரியாதா…?'' கஜேந்திரன் கதைத்துக் கொண்டிருந்தான்.

அதைக் கேட்க வித்தியாவுக்குச் சிரிப்பு வந்தது. துயரத்தின் எல்லையில் நிற்கும் அவள் தட்டித் தவறிக் கூடச் சிரித்தால், கஜேந்திரன் அதை ஆயுதமாக வைத்துத் தன்னைப்

பலவீனப்படுத்தி விடுவான் என்பது அவளுக்குத் தெரியும்.

"வித்தியா, இதை ஏன் நான் உமக்குக் கூறுகிறேன் என்று உனக்குத் தெரிந்திருக்கும். அதனால் தான் கூறுகிறேன். நீர் சொன்னால் கஜேந்திரன் கேட்பான். அவன் நீ சொல்வதைத் தட்டமாட்டான். விபரமாக எல்லாவற்றையும் சொல். பிறகு கஷ்டப்படப் போவது நீதான்" வேலாயுதபிள்ளை கூறிய வார்த்தைகள் அவளின் காதில் ஒலித்து அவளைத் திடப்படுத்தின. மெல்லக் கசிந்த அவளது மனம் இறுக்கமடைந்தது; "இன்று இதற்கு முடிவுகாணவேண்டும்" என்று எண்ணினாள் வித்தியா.

**814.அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்**
**தமரின் தனிமை தலை.**

போர்களத்தில் தான் சுமந்து வந்தவனைத் தள்ளி விட்டு ஓடும் அறிவில்லாத குதிரையைப் போன்றவர்களின் நட்பை விட நட்பில்லாமல் தனித்திருத்தல் சிறந்தது.

### நன்மையானது

வேலாயுதபிள்ளை மிகவும் திறமையானவர். திட்டமிட்டு எதையும் செய்தாரானால் அது நிட்சயமாகக் கைகூடும். ஒருநாள் கஜேந்திரனும் வித்தியாவும் கடற்கரையில் தம்மை மறந்த நிலையில் இருந்ததைத் தற்செயலாகக் கடற்கரைக்கு வந்த வேலாயுதபிள்ளை கண்டுவிட்டார். ஏற்கனவே

வித்தியாவின் குடும்பத்தைப் பற்றி முழுவிபரமும் அறிந்தவர் அவர். அத்துடன் கஜேந்திரனின் மீது நல்ல அபிப்பிராயம் வைத்துள்ளவர். அவன் இன்னொரு வனுக்கென நிட்சயிக்கப்பட்ட ஒரு பெண்ணை விரும்பி, அவளோடு நெருக்கமாகக் கடற் கரையில், பலரும் கூடுமிடத்தில் இருப்பானென அவர் நம்பவில்லை. அதனால் கஜேந்திரனின் நண்பனான நகுலனைச் சந்தித்துக் கேட்டார்.

"அவன் சொன்னால் கேட்கிறானில்லை. அவளுக்குப் பின்னாலேயே திரிகிறான். திரிகிறான் இல்லை. நாயாய் அலைகிறான். ஏற்கனவே அவளுக்கு ஒருவனைப் பெற்றோர் நிட்சயம் செய்திருக்கிறாரகள். இதைச் சொன்னால் அவன்; 'வித்தியாவுக்குத் தாயும் தாய் மாமனும் சேர்ந்து தானாம் நிட்சயித்தவை. ஆனால் மாமனின் மகனுக்கு வித்தியாவின் மீது காதலில்லையாம். அவன் அவளோடு கதைத்து பத்து வருசத்துக்கு மேலையாம்." என்று வித்தியா சொன்னதாகச் சொல்கிறான். அவனுக்கு யார் சொன்னாலும் விளங்காது. அந்தளவில் அவளின் விசர் பிடித்திருக்கிறது" என்றான்.

பின் தணிகாசலம் சொன்னார்; "கஜேந்திரன் இப்ப கெட்டுப் போனான். தனபாலனைவிட மோசமாகிவிட்டான். தனபாலனுடன் சேர்ந்ததால் தான் இன்னொருவனுக்கு நிட்சயிக்கப்பட்ட பெண்ணைக் கூச்சமின்றி பிரதான வீதியால் துவிச்சக்கரவண்டியில் ஏற்றிக் கொண்டு திரிகிறான்"

பலரிடம் கேட்டு விஷயத்தை உறுதி செய்த வேலாயுதபிள்ளை வித்தியாவைக் கஜேந்திரனிடமிருந்து பிரித்து விடவேண்டுமென விரும்பினார். அதற்குத் தணிகாசலமும் ஆதரவு தெரிவித்தார். அதனால் தான் வித்தியாவின் வீட்டுக்கு வேலாயுதபிள்ளை சென்றார். வித்தியா; "கஜேந்திரனைப் பிரித்தால் தற்கொலை செய்வேன்" என்றாள். அதனால் வேலாயுதபிள்ளை கஜேந்திரனை நல்வழிப்படுத்தும்படி கூறிவிட்டு வந்தார். மிகவும் அருமையாகத் திட்டமிட்டு சென்ற வேலாயுதபிள்ளை வித்தியாவுக்கு நன்கு ஊறைக்கும்படி யாவற்றையும் கூறியிருந்தார். அதனால் நெருப்பாக நின்றாள் வித்தியா.

"நாம் ஓரிரு மாதங்கள் பழகியிருந்தால் ஒருவரையொருவர் அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருந்திருப்போம். ஆனால் நாம் நாலைந்து வருடங்களாகப் பழகுகிறோம். திருமணமானால் இரண்டு மூன்று பிள்ளைகள் கூடப் பிறந்திருக்கும்...?" மீண்டும் வித்தியாவுக்கு அடக்கமுடியாத சிரிப்பு வந்தது. மிகவும் சிரமப்பட்டு அதை அடக்கினாள்.

"காதலின் சுவைகள் முழுவதையும் அனுபவித்து, ஒருவரை ஒருவர் புரிந்த பின்பு இந்த நம்பிக்கையீனம் உமது மனதில் வந்ததற்காக நான் மிகவும் கவலைப்படுகிறேன்" கஜேந்திரனது குரல் மிகுந்த துயரத்துடன் ஒலித்தது.

"நான் இப்போதுள்ள நிலையில் உங்களை நம்பமாட்டேன்".

“எப்படித்தான் எடுத்துரைத்தாலும் அதைப் புரிந்து கொள்ள முடியாத இழிந்தவர் களுடன் உயர் கல்வி கற்கும் நீங்கள் நட்பு வைக்கலாமா....? தனபாலனையும் அவனது சகோதரனான ஜெயபாலனையும் உங்களைத் தவிர ஊரில் உள்ள நல்லவ ரொருவர் மதிக்கிறார்களா.....? குடிகாரர்களும் திருடர்களும் ஏமாற்றுப் பேர்வழிகளும் தான் அவர்களுடன் நட்புப் பூண்டுள்ளனர். அவர்களுக்கு நட்பென்றால் என்னவென்று தெரியுமா...? நீங்கள் எவ்வளவுதான் அன்பு வைத்தாலும் அவர்களுக்கு அது புரியாது. ஒரு நாளைக்குக் குடித்து விட்டு உங்களுக்கும் அடிப்பார்கள். அப்படியானவர்கள் அவர்கள்.”

“நான் அவர்களுடன் நட்புக் கொண்டுள்ளேன் என்று உமக்கு யார் சொன்னது. யாருடனாவது கலகலப்பாக, அன்னியோன்னியமாகக் கதைத்தால் அது நட்பா..? அப்படித்தானா நீர் கற்றகல்வி சொல்கிறது? அறிவு இருக்க வேண்டும். யாராவது எதையாவது சொன்னால் அது உண்மைதானா என்று அறிந்த பின்புதான் கதைத்தல் வேண்டும்...” அப்போது கோபத்துடன் குறுக்கிட்டாள் வித்தியா; “வேலாயுதபிள்ளை அண்ணை கெட்டவர்; குடிகாரர்; பொய் சொல்பவர் என்று தானே நீங்கள் நினைக்கிறீர்கள். ஒரு காலத்தில் நீங்களே மிகுந்த உத்தமர் என்று சொன்ன அவர் இன்று கூடாதவராகி விட்டார். அப்படித்தானே?”ருத்திரகாளியாகக் காட்சியளித்தாள் வித்தியா; “அவளுக்கு எதையும் கூறுவதால் பயனில்லை” என்று நினைத்தான் கஜேந்திரன்.

**815. சய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.**

எப்படித்தான் காத்தாலும் பாதுகாத்துக் கொள்ள முடியாத கீழ் மக்களின் தீய நட்பு, ஒருவனுக்கு ஏற்படுவதை விட ஏற்படாமல் இருப்பதே நன்மை பயக்கும்.

## கோடி நன்மை

“தெரியாத்தனமாக உங்கள் மீது அன்பு கொண்டு விட்டேன்”. விம்மி விம்மி அழுதாள் வித்தியா பின்; “அன்பு கொண்டாலும் பரவாயில்லை, உங்களை அத்துமீறி நடக்கவும் அனுமதித்து விட்டேன். அதனால் தான் நீங்கள் எழுதும் கதைகளிலெல்லாம் எனது அங்கங்களைப் பற்றி எழுதுகிறீர்கள். அறிவில்லாதவர்களிடம் கொள்கின்ற மிகப்பெரிய நட்பைவிட, அறிவுடையவர்களின் பகையைத் தேடிக் கொள்வது கோடி மடங்கு நன்மை தரும்” என்றாள் வித்தியா.

“அப்போ நான் அறிவில்லாதவன், நீர் மேதை அப்படித்தானே” என்று கேட்டான் கஜேந்திரன்.

“நீங்கள் எப்படியும் நினைத்துக் கொள்ளுங்கோ. ஏனென்றால் இப்போது உங்களுடைய புத்தி அப்படித்தான் போகிறது. நான் ஒன்றும் உங்களை அறிவில்லாதவன் என்று

சொல்லவில்லை. உங்கள் ஆருயிர் நண்பன் ஜெயபாலனைச் சொன்னேன். அவனுடன் கொள்ளும் நட்பைவிட, அறிஞர்களின்பகை நல்லது என்றுதான் சொன்னேன்''

''எவ்வளவு திமிரும் கொழுப்பும் உமக்கு இருக்கு. நீர் ஆரம்பத்தில் அறிவில்லாதவன் என்று சொன்னது என்னைத்தான். அதுவும் அறிவில்லாதவனை மேதையான நீர் நட்புக் கொண்டு விட்டீர்....?'' கஜேந்திரன் பேசிக் கொண்டிருக்கும் போது வித்தியா குறுக்கிட்டாள்; ''இப்போ உங்களது அறிவு வேறுவிதமாகத் தான் செயற்படுகிறது. முன்பு போலில்லாமல் நீங்கள் முற்றாக மாறிவிட்டீர்கள். நான்தான் பிழை செய்து விட்டேன். சென்ற மாதம் பௌணமி தினத்தன்று இங்கு வந்து என்னுடன் நீங்கள் நடந்து கொண்ட முறையால் என்னைப் புளித்து விட்டது. அன்றைய தினத்தை நினைத்துப் பாருங்கள்''.

அவள் கூறிய அந்தத் தினத்தை அவனால் மறக்க முடியாது. அன்று அவன் அங்கு வந்த போது அவள் குளியலறையில் குளித்துக் கொண்டிருந்தாள். வீட்டில் யாருமில்லாததால் அவள் குளிக்கும் அறைக்குத் தாள்ப்பாள் போடவில்லை. ஆனந்தமாகக் குளித்து விட்டு வெளியே வந்தாள். அப்போது அவள் சிறிய துவாய் ஒன்றை மார்பில் கட்டியிருந்தாள். முளங்காலுக்கு மேலுள்ள பகுதியும் மார்புக்கு மேலுள்ள பகுதியும் மறைப்பின்றிப் பளபளத்தது. அவனைக் கண்டதும் குளியலறையினுள் செல்ல முயற்சித்தாள். வாசலில் சவர்க்கார நுரை இருந்தமையால் கால் சறுக்கிக் கீழே விழுந்து விட்டாள். தலை சுவரில்

மோதியதால் அதில் காயம் பட்டிருந்தது. அதிலிருந்து இரத்தம் லேசாகக் கசிந்தது.

கஜேந்திரன் பரபரப்புடன் ஓடிச் சென்று அவளைத் தூக்கினான். துவாய் அவிள, அவளது கைசட்டென்று துவாயைப் பிடித்தது. ‘‘வெளியே போங்கோ’’ வெட்கத்துடன் சொன்னாள்.

கஜேந்திரன் அவளது நெற்றியால் வழிந்த இரத்தத்தைத் தனது கைக் குட்டையால் துடைத்தான். அவளுக்கு வெட்கமாக இருந்தது. ‘‘வெளியே போங்கோ’’ என்று சற்று உரத்துக் கோபமாகச் சொன்னாள். கஜேந்திரன் வெளியே சென்று விட்டான்.

வெகு நேரத்தின்பின் வித்தியா அவனிருக்கும் இடத்திற்கு வந்து தலைகுனிந்து நின்றாள்.

‘‘மனிசி நல்ல வடிவு. முதுகில் இருக்கும் பெரிய மச்சம் அசத்துகிறது. அது அதிஸ்ட மச்சம்’’ என்றான்.

வித்தியா நாணிக் கோணினாள் பின்பு; ‘‘அதைத்தான் காயத்திரியின் முதுகிலும் பார்த்திருக்கிறீர்கள்’’ என்றாள்.

ஓரிரு நிமிடங்கள் கஜேந்திரன் அந்தக் கற்பனையில் ஆழ்ந்தான்; ‘‘அந்த நிகழ்விற்குப் பின் நீங்கள் என்னுடன் நடந்து கொள்ளும் முறை பிழையாக உள்ளது. முன்பென்றால் நான் கண் கலங்கினால் உயிரை விட்டு விடுவீர்கள். இப்போது

என்னைத் துன்பப்படுத்துவது தான் உங்கள் நாளாந்த நிகழ்வாகி விட்டது’’

‘‘நான் அப்படி ஒருபோதும் நினைத்ததில்லை. நீர்தான் என்னையும் குழப்பி, நீரும் குழம்புறீர். நான் உம்மை மறப்பேனா..? உம்மை மறந்து என்னால் வாழ முடியுமா..? நீர் நினைப்பதைப் போல அறிவில்லாத யாருடனும் நான் நட்புக் கொள்ளவும் மாட்டேன்; அறிவுடையவர்களின் பகையையும் தேடிக் கொள்ள மாட்டேன். அன்று வேலாயுதபிள்ளை அண்ணை தனபாலனுக்கு அடித்தது தவறு. தமிழ்ச் சங்கத்தில் நக்கீரர் கூறியது போலத்தான் நான் கூறுகிறேன். யாராக இருந்தாலும் சரி பிழையைப் பேசித் தீர்க்கலாமே தவிர பலாக்காரத்தால் தீர்ப்பது, தீர்க்க நினைப்பது தவறு’’ என்றான் கஜேந்திரன்.

‘‘நான் அது பிழை என்று சொல்கிறேன். நீங்களும் அதை ஏற்றுத்தான் தீர வேண்டும்’’ என்றாள் வித்தியா சற்றுத் திமிராக.

‘‘நீரல்ல அந்த மகா கணபதி வந்து சொன்னாலும் அது தவறுதான்’’ என்றான் கஜேந்திரன். வித்தியா அதிர்ந்து போனாள்.

**816. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுஉடையார்
ஏதின்மை கோடி உறும்.**

அறிவில்லாதவனது மிகநெருங்கிய நட்பை விட அறிவுடையவர்களோடு நட்பில்லாமல் இருப்பது கோடி மடங்கு நன்மை தரும்.

# பத்துக்கோடி நன்மை

அவள் சுயநினைவடைய வெகுநேரம் எடுத்தது. பித்துப் பிடித்தவளைப் போலக் கஜேந்திரனைப் பார்த்தாள்; ‘‘என்ன சொன்னீர்கள்? ‘‘நீரல்ல அந்த மகா கணபதி வந்து சொன்னாலும் அது தவறுதான்’’ அப்படியா? அப்படியானால் இவ்வளவு காலமும் நீங்கள் என்னை ஏமாற்றியிருக்கிறீர்கள். நீர் என்னுடைய உயிர்; நீர்ரில்லாவிட்டால் நான் இறந்து விடுவேன்; உம்மைப் பார்ப்பதால் தான் நான் உயிர் வாழ்கிறேன்; நீர்தான் என் அரியபொக்கிசம் என்று கூறியதெல்லாம் பொய்யா?’’ விசரியைப் போலக் கத்தினாள் வித்தியா.

அவள் அப்படிக் கத்துவாள் என்று எதிர்பாராத கஜேந்திரன் அதிர்ந்து போனான். தலைகலைந்து, கண்கள் சிவந்து, முகம் வீங்கிக் கோரமாகக் காட்சியளித்த வித்தியாவை அவன் இதுவரை காணவில்லை. அதனால் அவன் குழம்பிப் போனான். அவனால் எதையும் சிந்திக்க முடியவில்லை. தற்செயலாக வித்தியா கத்துவது அயல் வீட்டாருக்குக் கேட்டு அவர்கள் வந்தார்களானால் பெரும் பிரச்சினைஎன்று நினைத்துச் சொன்னான்; ‘‘வித்தி, உமக்கு இன்று என்ன நடந்தது? ஏன் பலமாகக் கத்துகிறீர். அயல் வீட்டார் வந்து விடுவார்கள்’’ என்றான்.

“வரட்டும் வந்து உங்களது துரோகச் செயலைப் பார்க்கட்டும். நீங்கள் என்பின்னால் பேயாய் அலைந்தமையால் தான் நான் உங்களை விரும்பினேன். விரும்பியதற்கான பயனைத் தந்து விட்டீர்கள். இனிநான் உயிர் வாழ மாட்டன். நான் சாகிறத்தைக் காண அயலவர்கள் எல்லோரும் வரட்டும்” மீண்டும் கத்தினாள் வித்தியா.

“வித்தி தயவு செய்து சத்தம் போடாதயும். மானம் கெட்டுப் போம்” என்றான் கஜேந்திரன்.

“உங்களைக் காதலித்தன்றே எனது மானம் போய்விட்டது. உள்ளத்தில் அன்பில்லாமல், வெளியே சிரித்துப் பேசும் உங்களைப் போன்ற நயவஞ்சகர்களை விட பகைவர்களால் எனக்கு அதிக நன்மை கிடைக்கும்” என்றாள் வித்தியா.

“அப்படி ஏன் சொல்கிறீர்? உமக்கு நான் என்ன துரோகம் செய்தனான்” கலங்கினான் கஜேந்திரன்.

“இனி என்ன செய்ய வேண்டும்”

“மகாகணபதியையும் உம்மையும் ஒரேமாதிரித்தான் பூசிக்கிறேன். நீர் சொல்வதனைத்தும் வேதம்; உமதுவார்த்தைகளை ஒருபோதும் நான் தட்ட மாட்டேன்; நீர் விரும்பிய படியே நான் நடப்பேன்” என்று சொன்னது உங்களுக்கு நினைவிருக்கிறதா?. ஆரம்பத்தில் உணர்வுகளின் தாக்கத்தினால் பேசுவது என்வென்று

புரியாது விசரர்களைப் போல அலட்டிவிட்டு, இப்போது உணர்வுகள் அடங்கிய பின்; “உனக்கு நான் என்ன துரோகஞ் செய்தேன்?” என்று கேட்கிறீர்கள். இது உங்களுக்கு நியாயமாகத் தோன்றுகிறதா? என்னைவிட, வேலாயுதபிள்ளை அண்ணையைவிட உங்களுக்குக் குடிகாரரும் திருடர்களும் மேலானவர்களாகி விட்டனர். நான் உங்களை விரும்பாத போது எவ்வளவு மாயாஜாலக் கதைகள் பேசி மயக்கினீர்கள். இப்போது அவற்றையெல்லாம் மறந்து என்னைக் கொல்கிறீர்கள். உங்களுக்கு ஜெயபாலன் பணம் தருகிறானா…? இல்லாவிட்டால் உள்ளத்தில் அன்பில்லாமல் வெளியே சிரித்துப் பேசும் போலியானவர்களின் நட்பை ஏன் பெரிதாகக் கருதுகிறீர்கள்? அவர்களுடைய நட்பை விட நீங்கள் பகைவர்களாக நினைக்கும் வேலாயுதபிள்ளை அண்ணையாலும் தணிகாசலம் அண்ணையாலும் பத்துக் கோடி மடங்கு நன்மை கிடைக்கும். நீங்கள் அவர்களை எதிரியாகக் கருதினாலும் அவர்கள் உங்கள் மீது அன்பாக இருக்கிறார்” என்றாள் வித்தியா.

அதைக் கேட்கக் கஜேந்திரனுக்குத் தலை வலித்தது. தான் எதைச் சொன்னாலும் வித்தியா கேட்கமாட்டாள் என்பதை உணர்ந்த கஜேந்திரன் நாற்காலியை விட்டு எழுந்து; “நான் போயிட்டு வாறன்” என்றான்.

சில நிமிடங்கள் வித்தியா எதுவும் பேசவில்லை. அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

“நான் வாறன்” என்று கூறிவிட்டு அவளது பதிலை எதிர்பாராது நடந்தான்.

“இனிமேல் இங்கு வருவீர்களா? கடற்கரையில் என்னைச் சந்திப்பீர்களா..?” என்று கேட்டாள் வித்தியா.

அவன் பதில் கூறாது நடந்து கொண்டிருந்தான்; “நின்று நிதானமாக யோசித்துப் பதிலைக் கூறிவிட்டுச் செல்லுங்கள். விலை மதிக்க முடியாத உத்தமர் நீங்கள் என்று நம்பியிருந்த நான் இனிமேலும் வாழ வேண்டுமா என்று உங்கள் பதிலிலிருந்து தான் நான் தீர்மானிக்க வேண்டும்.”

“இவ்வளவு நேரமும் நீர் கத்தினீரே தவிர என்னைப் பேசவிட்டீரா...? ஒரு கணவன் என்று மதிப்பில்லாமல் கண்டபடி பேசிவிட்டு இப்போது என்ன கேட்கிறீர்?” என்று கேட்டான் கஜேந்திரன்

**817. நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும்.**

உள்ளத்தில் அன்பில்லாமல் வெளியே சிரித்துப் பேசும் தன்மை உடையவர்களின் நட்பை விடப் பகைவர்களால் பத்துக் கோடி மடங்கு நன்மை வரும்.

**சொல்லாமல் விடு**

“சரி இனி நான் கதைக்கவில்லை. நீங்கள் உங்கள் கருத்தைக் கூறுங்கள்” என்றாள் வித்தியா.

“நான் எனது கருத்தைக் கூறி முடித்தபின்புதான் நீர் உமது கருத்துக்களைக் கூறுதல் வேண்டும். இடையில் குறுக்கிடக்கூடாது” என்றான் கஜேந்திரன்.

“குறுக்கிடமாட்ட.ான்” என்றாள் வித்தியா.

பெருமூச்சு விட்ட கஜேந்திரன் சொன்னான்; “நான் ஜெயபாலனுடனோ, தனபாலனுடனோ நீர் கூறுவதைப் போல நட்புக் கொள்ளவில்லை. இலகுவாக நான் செய்து முடிக்க்கக்கூடிய செயல்களைக்கூட அவர்களுடன் சேர்ந்து செய்தால் செய்து முடிக்க முடியாதபடி பல குறுக்கீடுகளைச் செய்து அவர்கள் குழப்பி விடுவார்கள். அப்படியானவர்களின் நட்பைச் சொல்லமலே கைவிடுதல் வேண்டும்” என்று கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது வித்தியா குறுக்கிட்டுச் சொன்னாள்; “அப்படியென்றால் ஏன் அவர்களுடன் சேர்ந்தீர்கள்?”

“நான் பேசிமுடிக்கும்வரை உம்கைக் குறுக்கே பேசக்கூடாது என்று சொன்னனான்”

“தவறுதான். மன்னித்துக் கொள்ளுங்கோ. இனிக்குறுக்கிட்டுக் கதைக்கமாட்டேன்” என்றாள் வித்தியா.

“எனக்கு உம்மைத் தவிர வேறு யாரின் மீதும் அன்பில்லை. அதனால் நான் ஏன் அவர்களுடன் நட்பு வைக்கப் போகிறேன். அன்று தனபாலன் வாசிகசாலையில் தணிகாசலம் அண்ணையைப் பற்றிக் கண்டபடி தூசித்துக் கொண்டிந்தவன். வாசிக சாலையில் இருந்தவர்களெல்லோரும் எழுந்து சென்று விட்டனர். தீயவர்கள் ஆட்களைக் கண்டால் உற்சாகத்துடன் கதைப்பார்கள். அப்படிக் கதைப்பது தமக்குக் கௌரவம் என்றும் நினைப்பர்கள். எல்லோரும் எழுந்து சென்றது போல வேலாயுதபிள்ளை அண்ணையும் எழுந்து சென்றிருக்கலாம். அத்துடன் சுவாமியார் சொன்னது போல அவன் முப்பது நாற்பது வருடங்களாகப் பொது இடங்களிலும் வீதிகளிலும் குடித்து விட்டுக் கண்டபடி புலம்பிக் கொண்டு திரிகிறான். துட்டனைக் கண்டால் தூர விலக வேண்டுமென்று நீதி நூல்கள் கூறுகின்றனவே தவிர அவனை அடித்துத் திருத்துங்கள் என்று கூறவில்லை. அதைவிட அவன் அன்று மாலை தனது நண்பர்களோடு சேர்ந்து குடித்து விட்டு வேலாயுதபிள்ளை அண்ணனின் வீட்டுக்குச் சென்று தளபாடங்களை யெல்லாம் அடித்து நொருக்கியிருக்கிறான். அவனுடன் மேலும் சண்டைக்குப் போனால் அவனும் கூட்டாளிகளும் தொடர்ந்தும் பிரச்சினைக்குப் போவார்கள். பிறகு கோடு கச்சேரி என்று அலைய வேண்டும்; அதனால் தான் சுவாமியார் “வேலாயுதத்திற்கு வயது போகப்போக இளமை திரும்பிச் சண்டைக்குப் போகுது” என்று கண்டித்தார். அதிபர் கூட வேலாயுதபிள்ளை அண்ணையின் வீட்டுக்குப் போய் ஏசினவர்..” என்று கூறிவிட்டு நிறுத்தினான் கஜேந்திரன்.

வித்தியா எதுவும் பேசவில்லை. அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்; “நாய் கடித்ததற்காக நாமும் நாயைக் கலைத்துச் சென்று நாய்க்குக் கடிப்பது போலுள்ளது உமது பேச்சு. மன அமைதியுடன் வாழ்பவன்தான் உண்மையான மனிதன். மனதிற்கோ அல்லது உடலுக்கோ பலவீனத்தைத் தரும் செயல்களை நாம் ஒருபோதும் செய்யலாகாது. மனிதனிடம் இயற்கையாகப் புதைந்திருக்கும் மிருகசக்தியைக் கட்டுப்படுத்துவதற்காகத் தான் ஞானிகளும், பாடசாலைகளும் கோயில்களும் முற்பட்டுச் செயற்படுகின்றன. மனிதனை உலகம் மெல்ல மெல்ல மிருகமாக்கிக் கொண்டே வருகிறது. மிருகமாக இருந்த மனிதனைப் படிப்படியாக மனிதனாக்கிக் கொண்டு வரும் பணியைப் பலர் சிரத்தையுடன் செய்ய, சிலர் மனிதனாக இருந்து மிருகமாக மாறுகின்றனர். அதுதான் தவறு என்று சொன்னேன். நீரும் மகாகணபதியும் தான் எனது இரு கண்கள். அப்படியிருக்க நீர் அல்ல மகாகணபதி வந்து சொன்னாலும் நான் கேட்கமாட்டேன் என்று சொன்னது மகா கணபதி மாதிரி பற்றற்று, பொறுமையுடன் இருந்த வேலாயுதபிள்ளை அண்ணை மிருகமாக, தனபாலனைப் போல இல்லை அவனில் பார்க்கத் தரக்குறைவாக நடந்து விட்டார். தனபாலன் குடித்துவிட்டுக் கத்துகிறானே தவிர யாராவது ஒரு நல்லவருக்கு அடித்திருக்கிறானா..? இல்லை நல்லவர்கள் முன்னால் தரக்குறைவாக நடந்துள்ளானா..? சொல்லும்”

வித்தியாவுக்குத் தலை சுற்றியது. "உண்மையை ஆராயாது தன்னைத் தன் உயிராகக் கருதும் ஓர் உத்தமரின் மனம் கோண நடந்து விட்டேனே" என்று நினைக்க அவளுக்குத் துக்கம் பொங்கியது. விம்மினாள்.

**818. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை**
**சொல்ஆடார் சோரா விடல்.**

இலகுவில் முடியக் கூடிய செயலையும் முடியாதபடி செய்து கொடுப்பவரின் நட்பைச் சொல்லாமலே கைவிட்டு விடல் வேண்டும்.

## கனவிலும் துன்பம்

"ஏன் அழுகிறீர்? அழாதையும். நீர் இன்றல்ல என்னோடு பழகிய காலத்திலிருந்தே இப்படித்தான் கண்டபடி ஆராயாமல் யாராவது சொல்வதைக் கேட்டுக் கதைப்பீர். பின் நான் அதைப் பற்றிய உண்மையைச் சொன்னதும் அழுவீர். அது எனக்குத் தெரியும். உம்மை முழுமையாக..." முழுமையாக என்பதை சற்று அழுத்தித் திரும்பவும் சொன்னான் கஜேந்திரன்; "முழுமையாகத் தெரிந்து வைத்துள்ள நான்..."

சிணுங்கினாள் வித்தியா; "நான் வேலாயுதபிள்ளை அண்ணையின் சொல்லைக் கேட்டு உங்களைப் பேசிவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ" அவனது நெஞ்சில் முகம் புதைத்தாள் வித்தியா.

“உம்மை முழுமையாகத் தெரிந்து, அறிந்து, புரிந்து வைத்திருக்கின்ற நான் உம்மைக் கோபிப்பேனோ…? உமது அறியாமையை எண்ணி வருந்தினேன். அத்துடன் ஆராயாது துடுக்குடன் பதில் சொன்ன உமது உதடுகளுக்கு நன்றி சொல்லப் போகிறேன்.”

சில நிமிடங்கள் கஜேந்திரன் கதைக்கவில்லை; “நீர் பேசியதற்கான பயன் கிடைத்து விட்டது. இதற்காகத் தினமும் சண்டை செய்யலாம்” என்று சிரித்த கஜேந்திரன் சொன்னான்; “ஒன்றைமட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும். நான் சொல்பவற்றைத்தான் செய்வேன்; செய்வதைத்தான் சொல்வேன். செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் ஒன்றிற்கு ஒன்று தொடர்பின்றி நடந்து கொள்பவரின் நட்பைக் கனவில் கூட விரும்பமாட்டேன். அது நீங்காத துன்பத்தை எந்நாளும் தரும். தனபாலன் குடிகாரன்; ஒன்றைச் சொல்வான்; இன்னொன்றைச் செய்வான். அவனுக்குச் சொன்னதென்ன என்று சில நிமிடங்களின் பின் தெரியாது. அப்படியானவனுடன் நான் நட்புப் பூண்டுள்ளேன் என்று கூற உமக்கு எப்படித் துணிவு வந்தது? அப்படியானால் நீர் என்னுடன் பழகிய தெல்லாம்…” அவன் கதைத்துக் கொண்டிருக்கும் போது தனது கையால் அவனது வாயைப் பொத்தினாள் வித்தியா.

மெல்ல அவளது விரலைக் கடித்தான் கஜேந்திரன்; “இனிமேல் நான் அப்படிக் கதைக்க மாட்டேன் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்” என்றாள் வித்தியா.

“கணவன் குற்றஞ் செய்தாலும் உண்மையான காதலுள்ள பெண்கள் கணவன் குற்றஞ் செய்ததை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். நீர் நான் குற்றஞ் செய்யாவிட்டாலும் செய்ததாகச் சொல்லிக் காட்டிக் கொடுத்து விடுவீர்” என்றான் கஜேந்திரன்.

“இனிமேல் நான் அப்படி நடக்க மாட்டேன். தோப்புக் கரணம் போடட்டா..?” என்று கேட்டாள் வித்தியா.

“தோப்புக்கரணம் போடுவதில் எனக்கு என்ன சந்தோசம்.” என்றான் கஜேந்திரன்.

“உங்களை அளவுக்கதிகமாக வருத்தியதால்....” என்று வித்தியா கூறும் போது; “அளவுக்கதிகமாக ஏதாவது தரப்போகிறீரா?” என்று கேட்டான் கஜேந்திரன்.

“ம்” என்ற வித்தியா அவனைப் பார்த்துச் சிரித்தாள் பின்; “அம்மா மத்தியா னத்திற்கும் சேர்த்துப் பிட்டு அவித்தவா. முழுவதையும் தருகிறேன். சாப்பிடுங்கள்” என்றாள்.

அதற்குக் கஜேந்திரன் பதில் கூறவில்லை. சிரித்தான்.

“உங்களுடன் சண்டை பிடித்துப் பின் சமாதானமானால் எனக்கு உங்களின் மேல் அன்பு

அதிகரிக்கும். இன்று முழுவதும் என்னுடனேயே இருங்கள்'' என்றாள் வித்தியா.

''சரி'' என்றான் கஜேந்திரன்.

''அதிபரும் சுவாமியாரும் தன்னைக் குறை சொன்னதாக வேலாயுதபிள்ளை அண்ணை சொல்லவில்லை. அத்துடன் வித்தியா நீ சொன்னால் அவன் கட்டாயம் கேட்பான். அதோடு அவன் கெட்டுப் போனால் உனக்குத் தான் கூடாது. அதனால் தான் உன்னிடம் சொன்னேன். அவனைக் கண்டால் கண்டித்து வை. மானம் மரியாதையுடன் வாழும் உங்களுக்கு இழுக்கு வரக்கூடாதென்றார். ''அதனால் தான் எனக்கு கோபம் வந்தது. என்னைக் கோபிக்கிறீர்களா...?'' என்று கேட்டாள் விந்தியா

''இல்லை.... இல்லை..... உம்மைக் கோபிப்பது என்னைக் கோபிப்பதைப் போன்றது. அத்துடன் நீர் ˙கோபித்தால் எனக்குக் கொண்டாட்டமே தவிர நட்டமில்லை''.

''கொண்டாட்டம் என்று சொல்லி விட்டு, கொண்டாடியதையெல்லாம் கதைகளில் எழுதி விடுகிறீர்கள். நீங்கள் சொல்வது முழுவதையும் எழுதி விடுகிறீர்கள். அதை வாசிக்க எனக்குக் கூச்சமாக உள்ளது. அத்துடன் வளர்மதி உங்களது கதைகளை வாசித்து விட்டு என்னைப் பகிடி பண்ணுகீறாள்'' என்றாள் வித்தியா.

கஜேந்திரன் பதில் கூறாது சிரித்தான். அந்தச் சிரிப்பில் பல அர்த்தங்கள் புதைந்திருப்பதை வித்தியா உணர்ந்தாள்.

**819. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு.**

செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவர்களின் நட்பு, ஒருவனுக்குக் கனவிலும் துன்பத்தைத் தரும்.

## எச்சரிக்கையாக இரு

பிட்டையும் உருளைக்கிழங்குக் கறியையும் ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வந்து கஜேந்திரனிடம் கொடுத்தாள் வித்தியா.

"இப்படித் தந்தால் எப்படி..? இன்று பேசின பேச்சிற்கு என்னை மடியில் படுக்க வைத்துப் பிட்டையும் கறியையும் குழைத்து ஊட்டி விட வேண்டும்" என்றான் கஜேந்திரன்.

"அதற்காக இன்று அதிகமாகத் தந்து விட்டேன். நீங்களும் என்றுமில்லாதவாறு உரிமையுடன் நடந்து கொண்டு விட்டீர்கள்." நாணப்பட்டாள் வித்தியா.

"வேலாயுதபிள்ளை அண்ணைக்கு நான் போய் நன்றி சொல்கிறேன். அவரிடம் அடி வாங்கினாலும் பரவாயில்லை" என்று சிரித்தான் கஜேந்திரன்.

“சரி.... போய் அடி வாங்குங்கோ. பிறகு அதையுஞ் சொல்ல அவர் இங்கு வருவார். பின் அதற்கும்....” சிரித்த வித்தியா; “பிட்டைப் பிடியுங்கோ” என்று அவனது கையில் குழைத்த பிட்டைக் கொடுத்தாள். இருவரும் கதைத்துச் சிரித்தபடி சாப்பிட்டனர். சாப்பிட்டு முடிந்து கை கழுவியதும் சுடச்சுட தேநீர் கொண்டுவந்து கொடுத்தாள் வித்தியா.

“இன்று எல்லாம் அமர்க்களம் தான். பேச்சு, மற்றது, பிட்டு, தேநீர் அசத்தி விட்டீர்”

சிரித்தாள் வித்தியா. பின்; “நான் ஒன்று சொன்னால் கேட்பீர்களா..?” என்று கேட்டாள்.

“கேளாவிட்டால் என்னை வாழ விடமாட்டீர். சொல்லும்” என்றான் கஜேந்திரன்.

“சிலர் தனிமையாகச் சந்திக்கும் போது சிரித்துக் கதைப்பார்கள். பலர் கூடியுள்ள இடத்தில் பழித்துப் பேசுவார்கள். அவர்களின் நட்புச் சற்றும் உங்களை நெருங்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு உதவி செய்யாதீர்கள்” என்றாள் வித்தியா.

“உலகத்தில் உள்ள பலர் அப்படித்தான் வாழ்கிறார்கள். நீர் யாரைச் சொல்கிறீர் வேலாயுதபிள்ளை அண்ணையையா...?”

“இல்லை... இல்லை” அவசரமாக மறுத்த வித்தியா. சிறிது நேரத்தின் பின் சொன்னாள்; “அவர் உங்களைப் போன்றவர். நேரடியாக வந்து எனக்குச் சொல்லி, உங்களை விசாரிக்கச் சொன்னவர். சிவசுந்தரமூர்த்தி மாமாவைப் பற்றிச் சொல்கிறேன். அவர் உங்களுடன் நல்ல நட்புப் பூண்டவரைப் போலப் பழகுவார். அன்று கோயிலடியில் பலருடன் உங்களைப் பற்றி மிகவும் கேவலமாகக் கதைத்தவர் என்று வளர்மதி சொன்னாள். அன்று இருபத்தைந்து பேர்வரை நின்றவையாம்....” என்று வித்தியா கூறும் போது கஜேந்திரன் குறுக்கிட்டுச் சொன்னான்; “அன்று நானும் நின்றனான். அவர் என்னைக் கூப்பிட்டு எனக்குப் புத்திமதி சொல்வது போலச் சொன்னவர். முழுவதும் பழிப்புத்தான்; “கஜன், நீ படித்தனி, உனக்கு நான் புத்திமதிகள் கூறத் தேவையில்லை. அன்றைக்கு வேலாயுதத்தை நீ ஏன் பேசினனீ? அவன் நடந்து கொண்ட முறை சரி. எல்லாரும் பேசாமல் இருந்தால் யார் அவனைத் திருத்துவது? உனக்கு அப்படி என்ன தனபாலன் செய்தவன். காசு ஏதாவது மாறினாயா? காசு தேவையென்றால் என்னைக் கேட்டிருக்கலாம். தனபாலனோடை சேராதை” என்றவர். அன்றுமாலை சிவசுந்தரமூர்த்தி வாசிகசாலையில் பலருடன் கூடியிருந்தவர். தனபாலன் வந்து; “சிவசுந்தரமூர்த்தி” என்று பெயர்சொல்லி அழைத்திருக்கிறான். பின்; “நீ என்ன பெரிய ஆளா...? எங்களோடு சேர்ந்து குடிக்கிறது. பிறகு எங்களைக் குறை கூறுகிறது. நீ படு போக்கிரி; யாரையாவது தனிமையில் கண்டால் அவர்களைப் பற்றிப் புழுகுவாய்; காணாத இடத்தில் பழித்துப் பேசுவாய். வேலாயுதண்ணை தணிகாசலண்ணை, அதிபர், இவையைக் கண்டால்

மிகவும் மதிப்பாகப் பேசுவாய். பின் சனங்கள் கூடியுள்ள இடத்தில் அவர்களைப் பழித்துப் பேசுவாய். படித்த உனக்கு இப்படிப் பேச வெக்கமில்லையா….? நான் திருந்திவிட்டேன். இல்லாவிட்டால் என்ன பேசுவன் சொல்லு பார்ப்பம். என்னைக் கொடுந்தமிழ் பேசவைக்காதை. உனக்குப் புண்ணியம் கிடைக்கும்'' என்று சொன்னவன். அப்படிப்பட்ட சிவசுந்தரமூர்த்தியுடன் நான் பழகுவதில்லை. அதைப் பற்றி நீர் யோசிக்க வேண்டாம்'' என்றான் கஜேந்திரன்.

''அவர் என்னுடைய மாமா. அதனால் உங்களுக்கு ஏதாவது தீமைகள் செய்யமுயல்வார். ஆகையால் கவனமாக இருங்கோ,'' என்றாள் வித்தியா.

''இன்று சண்டையிலேயே முழு நேரமும் போய் விட்டது. அம்மா வந்துவிடுவா. நான் போய் வரட்டா?'' என்று எழுந்தான் கஜேந்திரன். வித்தியா அவனின் அருகில் வந்து அவனது கையைப் பிடித்தாள். அதன் அர்த்தம் எ்னனவென்று புரிந்து சிரித்தான் கஜேந்திரன். வித்தியாவின் முகம் அதனால் சிவந்தது.

---

**820. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ**
**மன்றில் பழிப்பார் தொடர்பு.**

---

தனியே இருக்கும் போது மிகுந்த நட்புள்ளவர்களைப் போலப் பழகி, பலர் கூடியுள்ள சபையில் இகழ்ந்து பேசுவோரின் நட்பு நம்மைச் சற்றும் நெருங்காதபடி பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

## உலைக்களக் கருவி

கலா ஆசிரியை, கணபதி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றிற்கு இடமாற்றம் பெற்றார். மிகவும் நன்றாகக் கற்பிக்கும் கலா ஆசிரியை தனது கணவனின் விருப்பத்திற்காகவும், தனது பிள்ளைகளைப் பட்டணத்தில் உள்ள மிகப்பிரபலமான தனியார் பாடசாலையில் சேர்ப்பதற்குமாக இடமாற்றத்தைக் கேட்டார். வலயக் கல்விப் பணிப்பாளர் ஆறுமாதகாலத்திற்குப் பின் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் இடமாற்றம் கொடுத்தார்.

கலா ஆசிரியை கற்பித்தலில் மட்டுமல்ல பாடசாலையின் சகல விடயங்களிலும் விக்னேஸ்வரமூர்த்திக்கு வலதுகரம்போல இருந்து செயற்பட்டவர். பாடசாலையின் விளையாட்டுப் போட்டிக்கு மாணவர்களுக்கு உடற்பயிற்சி பழக்கி மிகவும் அழகுடன் செய்விப்பவர். அப்பிரதேசப் பாடசாலைகளுள் கலா பயிற்றுவிக்கும் குழுதான் முதலிடம் பெறும். ஆங்கிலதினம், பரிசுத்தினம், விளையாட்டுப் போட்டி என்பவற்றின் சகல வேலைகளையும் செய்பவர். அத்துடன் பார்த்தும் பாராமல் பணவுதவியும் செய்பவர். அத்துடன் அவரது கணவர் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புடையவர். அதனால் அந்நிறுவனங்களிடமிருந்து பாடசாலையின் மைதானம் திருத்தவும் பாடசாலை திருத்த வேலைகளுக்கும் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கும் ஆயிரக்கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொடுப்பவர். அதனால்

விக்னேஸ்வரனமூர்த்தி கலாவிலும் அவரது குடும்பத்தினரிலும் அளவு கடந்த பாசத்தை வைத்திருந்தார்.

கலா ஆசிரியை இடமாற்றம் பெற்றுச் சென்று நான்கு மாதங்கள் கழிந்தும் அப்பாடசாலையின் புதிய அதிபராகக் கடமை ஏற்றவர் கலா ஆசிரியருக்குப் பிரியா விடை செய்ய வேண்டும் என்று நினைக்கவில்லை.

கலா ஆசிரியை பாடசாலைக்குச் செய்த சேவைக்காக பெரியதொரு விழாச் செய்ய வேண்டும் என்று விக்னேஸ்வர மூர்த்தி புதிய அதிபருக்குப் பலமுறை சொல்லியும் அவர் அதைக் கருத்தில் எடுக்கவில்லை.

திடீரென்று, அன்று இரவு கலா ஆசிரியை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்; ‘‘ஐயா, நாளைக்கு எனக்குப் பிரியாவிடையென்று ஆசிரியர்கழகம் அறிவித்திருக்கிறது. உங்களுக்கும் அறிவித்திருப்பார்களென்று நினைக்கிறேன்’’

விக்னேஸ்வரமூர்த்தி தடுமாறிப் போனார். பாடசாலைக்காகப் பல்வேறு விதமான உதவிகளைச் செய்த கலா ஆசிரியருக்குப் பழைய மாணவர் சங்கம் சார்பாகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பாகவும் பெரியதொரு விழாச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்பியிருந்தார். அப்போது கலா ஆசிரியைக்கு இடமாற்றம் கிடைக்கவில்லை. அதனால் அந்த நேரம் தான் அதிபராக வேண்டுமென்ற எண்ணத்தில் திட்டமிட்டு நடித்து வந்த பிரதியதிபர் விக்னேஸ்வரமூர்த்தி கூறுவதைகச் சரிஎன்று ஏற்பார்.

“நீங்கள் தடுமாறுவதைப் பார்த்தால் உங்களுக்குச் சொல்லவில்லைப் போலத் தெரிகிறது.” என்றார் கலா ஆசிரியர்.

“இல்லை சொல்லி இருக்கிறார்கள். நான் வருவன்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“ஒரு மணிக்கு வரச்சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் வராவிட்டால் நானும் வரமாட்டன்.”

“இல்லை இல்லை. நான் கட்டாயம் வருவன்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

அன்று பகல் உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பன்னிரண்டு மணிக்கு விக்னேஸ்வரமூர்த்தி கலா ஆசிரியையுடன் தொடர்பு கொண்டார்; “கலா…” மேலே அவரால் பேச முடியவில்லை. சில கணங்கள் பொறுத்துச் சொன்னார்; “கலா, எனக்குப் பாடசாலை நிர்வாகம் இன்று உங்களுக்குப் பிரியாவிடை விழா வைப்பதாகச் சொல்ல வில்லை. அதிபர் நான் அங்கு கடமையாற்றிய காலத்தில் சகல விடயங்களிலும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கி, என்னைப் புகழ்ந்து என் மீது உயிரையே வைத்திருப்பவர் போல இருந்தார். நானும் அதை நம்பி அவரின் மீது அதிக விசுவாசம் வைத்து வாழ்ந்து விட்டேன். இப்போது தான் தெரிகிறது அவர் சகல விடயங்களையும் நன்கு திட்டமிட்டு நடித்திருக்கிறார் என்று; “மனம் ஒன்றாமல்,

நண்பர்கள் போல வெளித்தோற்றத்திற்குப் பழகியிருந்தவர்களின் நட்பு, தக்க இடம் கண்ட போது தூக்கி எறிவதற்குரிய உலைக்களக் கருவி போன்றது'' என்று அடிக்கடி தணிகாசலமும்ஏனையவர்களும் எனக்குச் சொன்ன போதும் நான் நம்பவில்லை. ஆனால் அது உண்மை என்று நான் பாடசாலையை விட்டுச் சென்ற மறுநாளே தெரிந்து கொண்டேன். அதனால் அழையாத இடத்திற்கு வந்து அவர்கள் மனமின்றித் தரும் உணவை உண்ண நான் விரும்பவில்லை. என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அதனால் நான் மதிய உணவு முடிவடைந்த பின்னர் வருகிறேன். உங்கள் விழாவை நான் மிகவும் விமர்சையாகச் செய்ய விரும்பினேன். அதற்கிடையில் எனக்கு இடமாற்றம் வந்து விட்டது. கவலைப் படாதைங்கோ..'' என்று கூறிவிட்டுத் தொலைபேசியை வைத்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

``நூற்றைம்பது வருடங்களாக மழை நீர்தேங்கி நின்ற பாடசாலை வளவிலிருந்து மழை நீரை அகற்ற உதவியவருக்கு இக்கதியென்றால் எனக்கு...?'' என்று நினைக்க விக்னேஸ்வரமூர்த்திக்கு நெஞ்சு வலித்தது.

**821. சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை**
**நேரா நிரந்தவர் நட்பு.**

மனம்விரும்பாமல் தனது காரியத்திற்காக அன்புள்ளவர் போல வெளித் தோற்றத்திற்குப் பழகுபவரின் நட்பு, தக்க இடம் கண்ட போது தூக்கி எறிவதற்குரிய பட்டடை போன்றது.

## உள்ளும் புறமும்

சரியாக பகல் ஒன்றரை மணிக்கு விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலைக்கச் சென்றார். பிரதான மண்டபத்தில் ஆசிரியர்கள் மதிய உணவை உண்டு விட்டு கலா ஆசிரியைப் பாராட்டிக் கொண்டிருந்தனர்.

அப்போது அதிபர் உரையாற்றிக் கொண்டிருந்தார். அவர் விக்னேஸ்வரமூர்த்தியைக் கண்டதும் பேசுவதை நிறுத்தி விட்டு விக்னேஸ்வரமூர்த்தியை வரவேற்பதற்காக வந்தார். விக்னேஸ்வரமூர்தி சென்று அமர்ந்ததும்; ‘‘இப்பொழுது கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரமூர்த்தி அவர்கள் உரையாற்றுவார்’’ என்று அறிவித்தார்.

விக்னேஸ்வரமூர்த்திக்கு அங்குள்ள பெரும்பான்மையான ஆசிரியர்களின் போக்குப் பிடிக்காததால்; ‘‘எல்லோருக்கும் வணக்கம்’’ என்று கூறித் தனது பேச்சைத் தொடங்கினார். ‘‘கலா ஆசிரியை இப்பாடசாலையில் ஏழுவருடங்கள் மிகவும் கண்ணியத்துடன், கடமை தவறாது பணியாற்றியவர். அத்துடன் பாடசாலையின் நிகழ்வுகள் யாவற்றிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர். பொதுவாக அவர் பணம் கொடுப்பதில் எப்போதும் பின் நிற்பதில்லை. இந்தப் பாடசாலைக்கு மட்டுமல்லாது அவரது கணவர் கோப்பாய், நல்லூர் போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகள் பலவற்றிக்கு உதவியவர். எமது பாடசாலைகளுக்கு விளையாட்டுப் போட்டிக்குத்

தேவையான பணம் முழுவதையும் இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு தந்தவர். இந்தவருடம் நல்லூர், கோப்பாய்க் கோட்டப் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிக்குப் பண உதவி செய்தவர். அதை விட அயலில் உள்ள பாடசாலைக்கு அவர் கட்டிடம், தளபாடம் முதலியவற்றை அரிமாக்கழகத்தின் மூலம் பெற்றுக் கொடுத்தவர். அப்படியானவரின் பிரிவுபசார விழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படல் வேண்டும். ஆனால் இங்கு அடுத்தவருக்கு, ஏன் எனக்கே தெரியாமல் கொண்டாடப்படுகிறது. இதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியும். ஆனால் அதை எனக்கு இவ்விடத்தில் சொல்ல விருப்பமில்லை. தமக்குப் பயன் உள்ள போது நட்பாக இருப்பதும், பயனில்லாத போது நட்பிலிருந்து நீங்கி பரிகசிப்பதுமான தகுதியற்றவர்களின் நட்பு, இருப்பதை விட இல்லாமல் போவது நல்லதென்று நினைப்பவன் நான். நமக்கு நல்ல நண்பர் போலவே இருந்து நடிக்கும் பொய்யான வரின் நட்பு, விலைமகளின் மனம்போல உள்ளொன்றும் புறமொன்றாக வேறுபட்டு நிற்கும். இப்பாடசாலை மாட்டுக் கொட்டிலைப் போலத் தேடுவாரற்று இருந்தது. அதைக் கட்டி எழுப்பி யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமல்ல முழு இலங்கையிலும் மிகவும் பிரசித்தி பெற்ற பாடசாலையாக்க நான் பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. எனது இனத்தவர்களினதும் அயலவர்களினதும் நண்பர்களினதும் பிள்ளைகளே இங்கு அதிகமாகக் கற்கிறார்கள். அவர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் தமது பிள்ளைகளை நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரம் ரூபா நன்கொடையாகக் கொடுத்துச் சேர்க்க முடியாது. அதனால் இப்பாடசாலை என்றும் தரமானதாக

இருத்தல் வேண்டும். பாடசாலைகளைப் பற்றி அதிபர்கள் கவலைப்படு வதில்லை. தமது பெயருக்காகவும் புகழுக்காகவும் பாடாசலையை நடத்துகிறார்கள். இப்பாடசாலை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகமான மாணவர்கள் சித்தியடையும் பாடசாலை. பரீட்சைகளில் மாணவர்கள் சித்தியடைந்தால் பலர் அப்பெறுபேற்றிற்கு உரிமை கோருகிறார்கள். பரீட்சைப் பெறுபேற்றை விட ஒரு மாணவன் சகல துறைகளிலும், திறமையுள்ளவனாக இருக்கப் பாடசாலைகள் உதவ வேண்டும். நான் இருக்கும் போது அதையே செய்தேன்.''

''கலா ஆசிரியை மாணவர்களின் கல்வியில் மட்டும் அக்கறை கொள்ளவில்லை. மாணவரின் சகல திறன்களிலும் அக்கறை கொண்டு செயலாற்றியவர். அத்துடன் தெய்வத்தின்மீது அறவற்ற அன்பும் நம்பிக்கையும் கொண்டவர், அடுத்ததாகத் தீமையான செயல்களை மனத்தால் கூட எண்ண அஞ்சுபவர். இதனால் தான் அவர் மாணவர்களைத் தனது பிள்ளைகளைப் போல நேசித்து அவர்களின் சகல தேவைகளையும் நிறைவேற்றியவர். ஒருவனுக்குத் துன்பம் வருவதற்குக் காரணம் அவன்தான் என்பதை உணர்ந்தவர். அதனால் தன்னைப் போலப் பிறரையும் நேசித்தவர். பிறர் செய்த நன்றியை மறக்காதவர். பிறர் செய்த நல்ல செயல்களை மறைக்காது எடுத்துக் கூறுபவர். பிறரின் நலனில் பொறாமை கொள்வோர் தன்னைத் தானே அழித்துக் கொள்வான் என்று நினைப்பவர். இதனால் அவர் எந்நாளும் இன்பமாக வாழ்வார். அவரது

எதிர்காலம் சிறக்க வாழ்த்தி விடைபெறுகிறேன்’’ என்று கூறிப் புறப்பட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

**872. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்ஏர் உருழவர் பகை.**

வில்உழவரான போர் வீரர்களுடன் பகை கொண்டாலும், சொல் உழவரான அறிஞர்களுடன் பகை கொள்ளக் கூடாது.

## பெருமையை அறியாதவர்

அதிபர் ஓடிவந்தார்; ‘‘இருங்கோ இருங்கோ... விழா முடிவடைந்ததும் செல்லலாம்’’

விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார்; ‘மனப்பூர்வமாக இதைச் சொல்கிறீர்களா....? இல்லாவிட்டால் ஒப்புச் சொல்கிறீர்களா....?’’

‘‘ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?’’ அதிபர் தடுமாறினார்.

‘‘நீங்கள் மனமுவந்து சொல்வதானால் அவரது பிரிவுபசார விழாவுக்கு எனக்கும் அறிவித்திருப்பீர்கள். எனக்குத் தெரியாமல் விழாவைச் செய்து விட்டு என்னை ‘‘நில்’’ என்று சொல்ல உங்களுக்க என்ன உரிமை இருக்கிறது. கலா ஆசிரியர் உங்குள்ள ஆசிரியர்களாய் போன்றவரா...? மாணவர்களின் நலனில் எவ்வளவு அக்கறை கொண்டவர். அத்துடன் எமது

பாடசாலைக்கும் வேறு பல பாடசாலைகளுக்கும் இலட்சக்கணக்கில் பொருளாகவும் பணமாகவும் உதவியவர். அவருக்கு மிகமிக இரகசியமாக ஏன் விழாச் செய்வான்? மிகவும் கோலாகலமாகச் செய்ய வேண்டிய விழா இது. உதவி செய்பவர்களாய் பாராட்டுவது விழாக்களின் நோக்கமல்ல, உதவி செய்பவர்களைப் பாராட்டுவதன் மூலம் இன்னும் பலரை உதவி செயத் தூண்டலாம். எமது மதத்தை எடுத்துப் பாருங்கள். கடவுளிடம் நாம் உதவி கோரும் போது குறைந்தது பழம்பாக்கு வெற்றிலை கற்பூரம் தேங்காய் தெட்சனை போன்றவற்றைக் கொண்டு சென்று அர்ச்சித்து விட்டுத்தான் கேட்கிறோம். எமக்கு உதவி செய்தவர்கள் அவர்கள். பெரும் உதவிகளைச் செய்த பின்பாவது நாம் அவர்களைப் பாராட்ட வேண்டாமா..? இறைவனைக் கூட புகழ்ந்து தான் பாடுகிறோம். அவன் என்றோ செய்தவற்றையெல்லாம் அவனுக்குத் திரும்பத் திரும்ப நினைவூட்டி அவனை மகிழ்விக்கிறோம். பற்றற்ற இறைவனுக்கே நாம் அவற்றைச் செய்யும் போது பற்றுள்ள மனிதனுக்கு என்னென்ன செய்தல் வேண்டும். அதை வேறு யாராவது ஒருவர் செய்திருந்தால் நான் கவலைப்பட்டிருக்கமாட்டேன். பதினாறுஆண்டுகள் என்னோடு இருந்து எனது சுகதுக்கங்களிலும் பாடசாலையின் நலனிலும் அக்கறை உள்ளவர் போல நடித்த நீர் செய்தமையால் தான் நான் வருந்துகிறேன். எனது நோக்கங்கள் யாவும் நிறைவேறும் என்பதற்காகத்தான் நான் உமக்கு இந்தப் பதவியைத் தந்தேன். பதவி ஏற்ற மறுநாளே எல்லாவற்றையும் மறந்து விட்டீர். மறந்தால் பரவாயில்லை. இப்பொழுதும் என்னை ஏமாற்றப் பார்க்கிறீர். நல்ல பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தாலும், அவற்றின் பயனாக நல்ல

மனமுடையவராகப் பழகுதல் உள்ளன்பு இல்லாதவர்களுக்கு இராது. நல்ல மனம் உமக்கு இல்லை; என் மீது விசுவாசம் இல்லை; இப்பதவியை உமக்குத் தருமுன் உமக்கு எல்லாவற்றையும் கூறினேன். உமது இனத்தவர்கள் யாருடன் நீர் உள்ளன்போடு பழகுகிறீர். எல்லோரும் உம்மீது அளவற்ற வெறுப்புக் கொண்டுள்ளனர். உமது கள்ள நோக்கங்கள் யாவும் எனக்குத் தெரிந்த பின்பும் அவை யாவற்றையும் தெளிவாகக் கூறித்தான் உமக்கு இப்பதவியைத் தந்தேன். உமக்கு இப்பதவியைத் தருவதற்காகப் பாடசாலையின் தபால் தலையில் அதிபர் என்று எனது பெயரை நான் குறிப்பிடவில்லை. ஏனென்றால் தகுதியில்லாத உமது பெயரையும் உபஅதிபர் என்று நான் அதில் குறிப்பிடல் வேண்டும். அப்படிக் குறிபபிட்டால் தற்போது உம்முடன் மிகவும் நல்லுறவு கொண்டுள்ள உமது முன்னாள் எதிரிகள் என்னுடன் பிரச்சினைப் பட்டிருப்பர். அதனால் பதினாறு வருடங்கள் நான் எனது பெயரைக் கூடப் போடாது பாடசாலைத் தபால்தலை அடித்தேன். இதெல்லாவற்றையும் உமக்குச் சொல்வதால் எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் உமது குணம் கடைசிவரையும் மாறாது. நீர் கொண்ட உறவு மாறாது. இன்று அவையெல்லாம் உமக்கு மகிழ்ச்சியைத் தரலாம். ஆனால் செய்த தீமைகளெல்லாம் ஒன்று திரண்டு ஒரு நாளைக்கு உம் முன்னால் வந்து நிற்கும். அப்போது இந்த விக்னேஸ்வரமூர்த்தி சொன்னவை நினைவுக்கு வரும். அப்போது உதவிக்கு நான் தான் வருவேன். நீர் முன்பு என்னோடு எப்படிப் பழகினீரோ அப்படித்தான் இப்போது உம்மோடு பலர் பழகுகிறார்கள். நேர்மையும், அஞ்சாத மனமும், உறுதியும் கொண்டவர்களை எமனே எதிர்த்து

வந்தாலும் அவர்களை எமனால் வெல்ல முடியாது.'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

"நீங்கள் பெரிய பெரிய வார்த்தைகளை உபயோகிக்கிறீர்கள்.'' என்றார் அதிபர்.

**873. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்**
**பல்லார் பகைகொள் பவன்.**

தான் தனியாக இருந்து கொண்டு பலரையும் பகைத்துக் கொள்பவன் பித்துப் பிடித்தவனை விடக் கேவலமானவனாகக் கருதப்படுவான்.

## அஞ்ச வேண்டிய நட்பு

கலா ஆசிரியையின் பிரிவுபசார விழாவுக்கு அரைநாள் விடுப்பு எடுத்துக் கொண்டு வந்த விக்னேஸ்வரமூர்த்தி பிற்பகல் இரண்டு மணிக்கு விழா நடந்து கொண்டிருக்கும் போதே ஆசிரியையிடஞ் சென்று; "கலா, நீர் ஓர் அற்புதமான ஆசிரியை. முன்னைய ஆசிரியர்கள், மாணவர்களின் சரித்திரம் முழுவதையும் தெரிந்து வைத்திருப்பார்கள். அதனால் அவன் வகுப்பில் நடந்து கொள்ளும் முறைகள் யாவற்றையும் அவர்கள் அனுசரித்து நடப்பார்கள். இப்போதைய ஆசிரியர்களுக்குத் தம்மிடம் கற்கும் மாணவர்களின் பெயரே தெரியாது. நீங்கள் பழைய ஆசிரியரைப் போலக் கடமை செய்தீர்கள். இப்பாடசாலைக்கு உங்களின் இடமாற்றம் ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பு. அதை நிர்வாகம் உணரவில்லை. சராசரி

ஓர் ஆசிரியரைப் போல யாருக்கும் தெரியாது கள்ளத் திருமணம் புரியும் சோடிகளைப் போல உங்கள் விழாவைக் கொண்டாடி யுள்ளனர். இதெல்லாம் அதிபரின் திட்டமிட்ட செயல். என்னுடன் பதினாறு வருடங்கள் கூட இருந்து சகல விடயங்களையும் தெரிந்து கொண்ட அதிபர், தற்போது எதுவும் தெரியாதவர் போல நடந்து கொள்கிறார். நட்பென்பது ஒருவருக்கொருவர் சிரித்து மகிழ்வதற்காக ஏற்பட்டதன்று, அது உயிரோடு கலந்தது. அப்படித்தான் நான் எண்ணியிருந்தேன். ஆனால் என்னுடன் பழகியவர்கள் உள்ளத்தில் அன்பில்லாமல் வெளியே சிரித்துப் போலியாகப் பழகியுள்ளார்கள் என்பதை நினைக்க எனது இருதயம் வெடித்து விடும் போல் உள்ளது'' கலங்கினார் விக்னேஸ்வரமூர்த்தி.

விக்னேஸ்வமூர்த்தியைப் பார்க்க கலா ஆசிரியைக்கு வேதனையாக இருந்தது; ''அது எனக்கு முன்பே தெரியும். அவர் உங்களோடு சிரித்துக் கதைப்பார். பின் வகுப்புக்களில் இருந்து மற்ற ஆசிரியர்களுடன் சேர்ந்து உங்களைப் பற்றிக் குறைவாகக் கதைப்பார். அதிலிருந்து நான் அறிந்து கொண்டேன். நீங்கள் அவரை நம்பி அவர் தான் உங்கள் தெய்வம் என்று நினைத்திருக்கும் போது நான் எப்படி அதை உங்களுக்குச் சொல்வது'' என்று நினைத்தார் கலா ஆசிரியர்:

''என்ன கலா யோசிக்கிறீர்?''

''ஒன்றுமில்லை. உங்களை எந்த எதிரியாலும் வெல்ல முடியாது. உங்களது பதினாறு வருடச் சேவைக் காலத்தில் உங்களை

எதிர்த்தவை, பரிகசித்தவை, பழிவாங்க நினைத்தவை எல்லோரும் துன்பப்பட்டவர்களே தவிர நன்மை அடையவில்லை. இனியும் அப்படித்தான். தூய எண்ணமும், அடுத்தவரைக் கெடுக்க நினைக்காத மனமும், தைரியமும்முள்ள உங்களை யாரும் வெல்ல முடியாது. தற்போதய அதிபர் கனவு காண்கிறார். அது பகற்கனவு என்று எனக்குத் தெரியும். நீங்கள் கவலைப்படாமல் போங்கோ'' என்றார்.

வீட்டுக்கு வந்த விக்னேஸ்வரமூர்த்தி உடைகளைக் களைத்து விட்டுக் குளித்தார். பின் உடையை மாற்றிக் கொண்டு வந்து மனைவியுடன் இருந்து பகல் போசனமருந்தினார். பதினாறு வருடங்களுக்கு முன்பு, அவர் சாதாரண ஆசிரியராக இருக்கும் போது மனைவியோடு அமர்ந்திருந்து பகல் உணவை உண்டார். அதன் பின் இன்றுதான் அந்தச் சந்தர்ப்பம் அவருக்கு ஏற்பட்டது. அதனால் அவர் மிகவும் மகிழ்ந்தார்.

பகல் உணவை உண்டு விட்டு வெளியே வந்த போது தணிகாசலம் வந்து அவருக்காகக் காத்திருந்தார்.

``உங்களுக்குக் கலா ஆசிரியைக்கு இன்று பிரிவுபசார விழா நடை பெறுவதாகச் சொல்லவில்லை. பிறகு ஏன் போனீர்கள்?'' தணிகாசலம் கோபத்தோடு கேட்டார். அவர் இதுவரை அப்படி அவரைக் கேட்டதில்லை.

``அது எனது பாடசாலை. அதை விடக் கலாவும் அவரது கணவரும் பாடசாலைக்குப் பல

உதவிகளைச் செய்திருக்கிறார்கள். கலாவினது கணவன் எனக்கு மிகவும் வேண்டியவர். அவர்கள் முன்பு எமது வீட்டிற்கு அருகிலேயே இருந்தார்கள். அவரது சகோதரன் என்னுடன் கூடப் படித்தவர். அதனால் போக வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டு விட்டது. அவர்களுக்கு நான் நிறையக் கடமைப்பட்டு விட்டேன். அது உனக்குத் தெரியும்'' விக்னேஸ்வரமூர்த்தியின் குரல் தளர்ந்து ஒலித்தது.

அதனால் தணிகாசலத்தால் அவருக்குப் பதில்கூற முடியவில்லை. சில கணங்கள் பொறுத்துச் சொன்னார்; ''முகம் மலரச் சிரித்துப் பேசி, மனத்தில் தீமை கொண்டுள்ள வஞ்சகருடன் நட்புக் கொள்ள அஞ்ச வேண்டும். தற்போதைய அதிபர் அப்படியானவர். இனிமேலாவது அதற்கேற்வாறு நடந்து கொள்ளுங்கள்.''

''நான் என்ன செய்வது தணி? எனது பிள்ளைகளில் ஒன்றாகத்தான் நான் அப்பாடசாலையைக் கருதுகிறேன். அதனால் முன்பை விட அப்பாடசாலைக்கு இப்போது கூடுதலான உதவிகளைச் செய்கிறேன். கட்டிடம், நூலகம், தளபாடம், வினாத்தாள்கள் யாவும் நான் கோப்பாயில் இவர்களுக்கு மட்டும் தான் கொடுக்கிறேன். பதினாறு வருடங்கள் அங்கிருந்தமையால் அதன் மீதுள்ள பற்றை மனதிலிருந்து என்னால் நீக்க முடியவில்லை'' கலங்கினார் விக்னேஸ்வரமூர்த்தி. அதைக் கண்ட தணிகாசலத்தின் கண்களும் கலங்கின.

''இதற்கே இப்படிக் கலங்குகிறீர்கள். முன்பு கல்வித் திணைக்களத்திற்கு உங்களைப்

பற்றிப் புகாரிட்டது. பின் அவர்கள் வந்து விசாரணை செய்ததெல்லாம் புதிய அதிபருக்குத் தெரியும். அவற்றை அவர் மறைத்தது தெரிந்தால் உங்களுக்கு மாரடைப்பு வந்து விடும்'' என்று நினைத்தார் தணிகாசலம்.

**824. முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா
வஞ்சரை அஞ்சப் படும்.**

முகம் மலரச் சிரித்துப் பேசி, மனதில் வஞ்சக எண்ணம் கொண்டவருடன் நட்புக் கொள்ள அஞ்ச வேண்டும்.

## நம்பாதே

‘‘நீங்கள் எல்லாவற்றையும் சொல்வீர்களே தவிரச் செயலில் காட்ட மாட்டீர்கள். அதிபர் தான் நினைத்தபடி செய்கிறார். என்னை மதிப்பதில்லை; நான் சேரக்கூடாது என்று சொன்னவர்களுடன் சேர்த்து திரிகிறார். முக்கியமாக நிர்மலாவுடன் சேர வேண்டாம் என்று சொன்னேன். இப்பொழுது நிர்மலா ஆசிரியைதான் அதிபரது கையாள். முன்பு அவருக்கு உதவி அதிபர் பதவி கொடுத்ததற் காகவும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விளையாட்டுப் போட்டிக்கு அவரை விருந்தினராக அழைத்துக் கணபதி மத்திய மகா வித்தியாலய உபஅதிபர் என்று அழைப்பிதழில் போட்டமைக்காகவும், மற்ற ஆசிரியர்களுடன் சேர்ந்து எவ்வளவு பிரச்சினைகள் தந்தவர். இப்ப நிர்மலா தான் அதிபரின் அந்தரங்க ஆலோசகர். கேட்டால் நிர்வாகம் என்றால் அப்படித்தான்.

அவளை எப்படி ஒதுக்கி வைப்பது என்று சொல்கிறார். ஆனால் இரண்டு பேரும் திருகுதாளம் செய்வதில் வல்லவர்கள். நீங்கள் அவளைக் கொண்டு எதுவும் எழுதக் கூடாது என்று சொன்ன பின்பும் உங்களது பிரியாவிடைக்கான கடிதத்தை அவளே எழுதினாள்; கீறீஸ்துவக் கல்லூரி அதிபரிடம் இருவரும் சென்று விளையாட்டுப் போட்டிக்கு அவரைச் சிறப்பு விருந்தினராக வரும்படி அழைத்தனர். பின் தொகை மதிப்பீட்டுக் கூட்டத்திற்கு இருவரும் சோடியாகச் சென்றனர். அப்படியானவருக்கு ஏன் நீங்கள் மீண்டும் மீண்டும் உதவுகிறீர்கள். அதைப் பற்றி நான் பல நாட்களாக யோசித்துப் பார்த்தும் என்னால் அதற்கு விடை கண்டு பிடிக்க முடியவில்லை'' என்றார் தணிகாசலம்.

''நான் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் கடமை புரிந்த போது அவர் குடும்பத்தினருடன் வந்து எல்லா வேலைகளையும் செய்து தந்தவர். அத்துடன் நன்கு பழகியவரை என்னால் வெறுக்க முடியவில்லை. பதினாறு வருடகாலமாக எனது பணத்தைச் செலவு செய்து எனது பிள்ளைகளை அழகு பார்ப்பதைப் போலப் பாடசாலையின் நிகழ்வுகளையெல்லாம் மிகவும் சிறப்பாக வேறெந்தப் பாடசாலைகளும் செய்ய முடியாதளவிற்குச் செய்து அழகு பார்த்து விட்டேன். இப்போது இப்பாடசாலை வீழ்ச்சியடைந்து விடுமென்று பயப்படுகிறேன். அதிபர் தனது பிள்ளைகளைத் நகரில் உள்ள பிரபல தனியார் பாடசாலையொன்றில் சேர்த்து விட்டார். அப்படிப்பட்டவருக்குப் பாடசாலையில் அக்கறை இராது…'' விக்னேஸ்வரமூர்த்தி பேசிக்

கொண்டிருக்கும் போது தணிகாசலம் குறுக்கிட்டுச் சொன்னார்; “உது எனக்குப் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பே தெரியும். பலமுறை நான் உங்களுக்கு அதைப் பற்றிச் சொன்னனான். நீங்கள் கேட்கவில்லை. இன்றைக்குக் கலா ஆசிரியையின் பிரிவுபசார விழாவுக்கு அழையாத விருந்தாளியாகச் சென்றனீங்கள். இனி மேல் அப்படிச் செய்யாதையுங்கோ. நீங்கள் மதிப்பு மிக்கவர்; கண்ணியமானவர்; பதவியால் உயர்ந்தவர். இவர்களுடன் நட்புக் கொண்டிருந்தால் கற்றவர்கள் உங்களை மதிக்க மாட்டார்கள். மனத்தால் தம்மோடு பொருந்தாமல் பழகுகின்றவரை அவர்கூறுகின்ற சொல்லைக் கொண்டு அத்தகைய ஒரு செயலிலும் நம்பி ஈடுபடக் கூடாது. அதிகாரிகளும் பெற்றோர் பலரும் அதிபர் மீது நம்பிக்கையில்லாது இருக்கிறார்கள். அவர்கள் உங்களுக்குப் பயந்தும், உங்களை மதிப்பதாலும் தான் அவரை மதிக்கிறார்கள். தாம் அதிபரோடு முரண்பட்டால் நீங்கள் தம்மைத் தண்டித்து விடுவீர்கள் என்று எண்ணிப் பயப்படுகிறார்கள். அதனால் நீங்கள் கொஞ்ச நாட்களுக்குப் பாடசாலையோடு தொடர்பில்லாமல் இருங்கள்” என்றார் தணிகாசலம்.

விக்னேஸ்வரமூர்த்தி, தணிகாசலம் அப்படிச் சொல்வாரென நினைக்கவில்லை. அதனால் அவர் அதிர்ச்சிக்குள்ளானார்; “தணி, நீயா இப்படிப் பேசுவது?. பாடசாலையின் நலனுக்காக இரவும் பகலும் உழைத்த நீயா இப்படிப் பேசுவது…? என்னால் நம்பமுடியவல்லை” என்றார்.

“மனம் ஒன்றிப் பழகாதவர், அவர் எந்தப் பெரியவராக இருந்தாலும் என்னால்அவரை அனுசரித்து நடக்க முடியாது. அவர் கூறும் வார்த்தைகளை நம்ப முடியாது. அவரின் வாயில் வருவதெல்லாம் பொய்யும் புரட்டும் ஏமாற்றும் தான்” என்றார் தணிகாசலம்.

விக்னேஸ்வரமூர்த்தியால் பேச முடியவில்லை. பாடசாலையின் மீது உயிரையே வைத்திருந்த தணிகாசலம் இப்படிப் பொறுப்பில்லாமல் பேசுவார் என்று அவர் எள்ளளவும் நினைக்கவில்லை.

“சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள்தான் மனிதனின் நடத்தையைத் தீர்மானிப்பன. அதிபர் தலைகால் புரியாமல் நடக்கிறார். எம்மைப் புறக்கணிக்கிறார். ஆனால் நாம் பாடசாலையின் நன்மைகளுக்காக அனுசரித்து நடக்க வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அதை ஏற்றுக் கொள்ள என்னால் முடியாது. வேண்டுமானால் அதிபருடன் சேர்ந்து நீங்கள் உங்களது மானத்தைப் போக்குங்கள்” என்றார் தணிகாசலம். அவரது குரலில் அளவுக்கதிகமான சினம் கொப்பளித்தது.

“தணிகாசலம் சொல்வது சரி. அவர் சொல்கின்றபடி நடந்தால் பாடசாலை கெட்டழிந்து விடும். இவ்வளவு காலமும் பட்ட கஷ்டம் பலனற்று விடும” என்று நினைத்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

---

**825. மனத்தின் அமையா தவரை எனைத்து ஒன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று.**

---

மனத்தால் தம்மோடு சேர்ந்து பழகாதவரை நம்பி அவர் சொல்லும் எந்தச் செயலையும் செய்யக்கூடாது.

## வெளியாகும்

“நீங்கள் பாடசாலையின் பொறுப்பை அவரிடம் கொடுத்தது எனக்கு மட்டுமல்ல வேலாயுதபிள்ளை, தனபாலசிங்கம் போன்றவர்களுக்கும் விருப்பமில்லை. சுவாமியாரும் விரும்பவில்லை. சுவாமியார் வாய்திறந்து எதுவும் சொல்லவில்லை. ஆனால் அன்று மாலை நான் கோயிலுக்குச் சென்ற போது சொன்னார்; “அறிவுடையவர்களும் ஆராயாது நடந்து கொள்கிறார்கள். எவ்வளவு காலம் தொடர்ந்து பழகினாலும் சிலரால் சிலரைப் புரிந்து கொள்ள முடியாது. ஏனென்னால் சிலர் தமது கருமம் பார்ப்பதற்காகக எதையுஞ் செய்வார்கள்; எப்படியும் நடிப்பார்கள். எங்கோ தவறு நடந்து விட்டது”

“நான் என்னென்று விசாரிக்கலாமென வாயுன்னினேன். அதற்கு முன் சுவாமியார் கண்களை மூடியவிட்டார். அவர் கண்களை மூடிவிட்டால் மற்றவர்கள் கதைப்பதை அவர் கேட்க மாட்டாரென்று தானே அர்த்தம். அதனால் நான் எதுவும் பேசாமல் வந்து விட்டேன். அதன்பின் அவர் எதையும் கதைக்கவில்லை. இன்று காலையில் சொன்னார்; “தணி, கலா ஆசிரியை இந்த ஊரவரல்லர். இது அவரது கணவனின் ஊர். அதனால் சில காலம் இங்கு தங்கியிருந்து அரிய சேவையாற்றினர். அவருக்குப் பிரிவுபசார விழா

யாருக்கும் தெரியாமல் இரகசியமான முறையில் செய்யப்பட்டது எனக்கும் கவலையை அளிக்கிறது. தற்போதய நிலையில் விக்னேஸ்வரமூர்த்தியின் பேச்சு எடுபடாது. அத்துடன் அவர் அதைப்பற்றிக் கதைக்கவும் மாட்டார். உண்மையான நண்பர்களைப் போல நல்லவற்றைச் சொன்ன போதும், உள்ளன்பில்லாதவர்கள் செய்யும் செயல்கள் விரைவில் வெளியாகி விடும். இப்போது கலா ஆசிரியைக்குப் பிரிவுபசார விழா செய்யும் போது அதிபரின் சுயரூபம் தானகவே வெளிப்பட்டு விட்டது. விக்னேஸ்வரமூர்த்தி எதை நினைத்துச் செய்தாரோ அது இனிமேல் நடைபெற மாட்டாதென்பது அவருக்குத் தெரிந்து விட்டது. அதனால் அவர் ஒதுங்கியிருக்கவே விரும்புவார். அவரின் சுவாபம் அப்படி. அதையிட்டு நாம் அலட்டிக் கொள்ளாது இனிமேல் ஆக வேண்டியகைக் கவனித்தல் வேண்டும்'' என்றார்.

''உண்மைதான். கலா ஆசிரியர் செய்த உதவிகளுக்கு நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன். நானாக இருந்தால் மாணவர்களைக் கொண்டு மலர் மாலைகள் அணிவித்திருப்பேன். பெற்றோர்களையும் பழைய மாணவர்களையும் அழைத்து அவர் செய்த சேவைகளைப் பற்றிச் சொல்லியிருப்பேன். ஒருவர் தினையளவு உதவி செய்தாலும் அதன் பயனை எண்ணிப் பார்ப்போர் அதைப் பனையளவாகக் கொண்டு போற்றுவார்கள். தமக்குப் பின் எஞ்சி நிற்பது புகழ்மட்டும்தான். அப்புகழைப் பற்றியாரும் யாருக்குக்கும் சொல்லத்தேவையில்லை. இருப்பினும் அதைப் பலரின் முன் நினைவு கூர்ந்தால் செய்தவனுக்கு மகிழ்ச்சி உண்டாகும். மேலும் மேலும் உதவிகள் செய்ய மனம் தூண்டும். அதோடு நாம் பொருள் கொடுக்க முடியாவிட்டாலும்

சொற்களால் பாராட்டினால் அது பொருளிலும் பார்க்கக் கூடுதலான மகிழ்ச்சியை உண்டு பண்ணும். சொல்லுக்குக் கூடப் பஞ்சமுள்ளவர்கள் இருக்கிறார்கள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

"முடிந்தவற்றை இனிக்கதைத்துப் பிரயோசமில்லை. தற்போது பாடசாலையில் உள்ள அனேகர் அதிபருக்காகத்தான் கதைக்கிறார்கள். அதிபர் எந்தக் குற்றமும் செய்ய மாட்டார். மிகவும் திறமையானவர். அவரின் சொல்லிலும் செயலிலும் எமக்கு நம்பிக்கை இருக்கு'' என்று அங்குள்ளவர்கள் உங்களுக்குக் கூறியதாகக் கேள்விப்பட்டேன்'' என்றார் தணிகாசலம்

"தனது காலில் நிற்கமுடியாதவர்கள் இன்னொருவரின் காலை நம்பித்தான் நிற்கவேண்டும். பலர் முகத்திற்கு நேரே நல்லவர்களைப் போல நல்லவார்த்தைகளைச் சொன்ன போதும் அவர்களது உள்நோக்கும் இயலாமையும் விரைவிலே வெளியாகி விடும்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

தணிகாசலம் சிரித்தார்; "வெளியானால் என்ன...? வெட்கப்படவா போகிறார்கள்?. பெரிதாகச் சிரித்துக் கலகலப்பாகப் பேசி சமாளித்து விடுவார்கள். நீங்களும் பேசாமல் வந்து விடுவீர்கள்.''

"என்னை என்ன சண்டைக்குப் போகச் சொல்லுறியா...? திருத்த முடியாதவர்களுடன் பேசி எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. அதனால் நான் அதைப்பற்றி இனிக் கதைப்பதில்லை என்று

விட்டு விட்டேன். உனக்கும் விருப்பமில்லா விட்டால் விடு'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

விக்னேஸ்வரமூர்த்தியின் வார்த்தைகளைக் கேட்டுக் கவலைப்பட்டார் தணிகாசலம்.

**826. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்**
**ஒல்லை உணரப் படும்.**

நண்பர்கள் போல் நல்லவற்றைச் சொன்ன போதிலும் பகைமை கொண்டவர் சொல்லும் சொல்லின் உண்மை நிலை விரைவில் தெரிய வரும்.

## நம்பக்கூடாது

தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டிலிருந்து சனசமூக நிலையத்திற்கு வந்தார். அங்கே வேலாயுதபிள்ளை இருந்தார். தணிகாலத்தைக் கண்டதும்; "நீங்கள் அதிபரின் வீட்டுக்குச் சென்றதாக அறிந்தேன். எனினும் அங்கு வர எனக்கு விருப்பமில்லை. அதனால் இங்கேயே தங்கிவிட்டேன்'' என்றார் வேலாயுதபிள்ளை.

தணிகாசலம் சிலகணம் எதுவும் பேசவில்லை. பின் சொன்னார்; "அதிபர் பதினாறு வருடகாலமாகப் பாடசாலைக்குப் பெருந்தொண்டாற்றினவர். ஆனால் அதை யாரும் உணர்வதாக இல்லை. பெற்றோர் பலர் விக்னேஸ்வரமூர்த்தி என்ன செய்தவர் என்று

கேட்கிற அளவிலை தான் இருக்கிறார்கள்'' என்றார் கவலையுடன்.

பெருமூச்சுவிட்டார் வேலாயுதபிள்ளை, பின்; ‘‘மாட்டுத் தொழுவம் மாதிரி இருந்த பாடசாலை இன்று எவ்வளவு முன்னேறி விட்டது. யாழ் மாவட்டத்திலே உள்ள முன்னணிப் பாடசாலைகளில் ஒன்று. பாடசாலையை முன்னேற்றியளவிற்கு அவர் முன்னேறவில்லை. அவருக்கு யார் நல்லவர்கள் யார் கெட்டவர்கள் என்று கடைசிவரையும் தெரியவில்லை. எம்முடனும் எவ்வளவு காலமாகப் பழகுகிறார். ஆனால் நான் அன்று தனபாலனுக்கு ஆத்திரமிகுதியால் அடித்து விட்டேன் என்பதற்காக என்னைக் குறைகூறுகிறார். நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன் என்பதைப் பற்றி அவர் இன்றும் உணர்ந்து கொள்ளவில்லை. அவர் தனபாலனது திருவிழாவன்று அன்னதான மடத்தில் பந்தியில் இருந்து சாப்பிடும் போது நாங்கள் ஏன் அவருக்குப் பக்கத்தில் சென்றமர்ந்து சாப்பிட்டோம்? தனபாலனுக்காகவா…? இல்லை மகா கணபதிக்காகவா..? இல்லையே, இவருக்காகத் தானே சென்று அவருக்கருகில் இருந்து சாப்பிட்டோம். அதைப்பற்றி அவர் இதுவரை சிந்தித்தாரா..? அவர்தான் நினைத்ததைத் தான் செய்வார். அப்படி நாமும் இருக்கலாம் தானே. அவர் பாடசாலை விஷயத்திலும் மற்றவர்களுடன் கலந்து ஆராயாமல் நடந்து கொண்டமையால் தான் இன்று அவருக்கு அந்த நிலை ஏற்பட்டது. இதற்காக நாம் என்ன செய்ய முடியும்.?''

வேலாயுதபிள்ளை கதைத்து முடித்து விட்டுத் தணிகாசலம் பதில் கூறட்டும் என்று

காத்திருந்தார். வெகுநேரம் காத்திருந்த போதும் தணிகாசலம் பதில் கூறவில்லை. “தணி இதற்கு யாராலும் பதில் கூறமுடியாது. வில்லின் வணக்கம் வணக்கமாக இருந்தாலும் தீங்கு செய்வதே ஆகும். அதேபோலக் கூடாதவர்களின் பணிவான சொற்களும் உறுதியாகத் தீமையைச் செய்யும். எனவே தீயவர்களின் பணிவான சொற்களை நம்பக்கூடாது. அதிபருக்குத் தீயவர் யார்...? நல்லவர் யார்.? என்று தெரியாது. நல்லவர்கள் பிழை செய்தாலும் தீமையைத் தராது என்று கற்ற அவரால் புரிந்து கொள் ளமுடியவில்லை. நாளைக்கு அதிபர் வந்து பணிவாக அல்லது இனிமையாக நான்கு வார்த்தைகள் பேசி விட்டால் விக்னேஸ்வரமூர்த்தி நடந்தவற்றை மறந்து அதிபரின் பின்னால் சென்று விடுவார். பின்பு ஏன் நாம் அதைத் தூக்கிப் பிடித்துக் கதைத்துக் குற்றங் கேட்பான்” என்றார் வேலாயுதபிள்ளை.

“அப்பநீ, கலா ஆசிரியருக்குப் பிரிவுபசார விழா மிக மிக எளிமையாக, யாருக்கும் தெரியாமல் குழுப்படம் கூடப் பிடிக்காமல் செய்தது சரி என்று சொல்கிறாய்.” என்று கேட்டார் தணிகாசலம்.

“நீங்கள் முழங்காலுக்கும் மொட்டந் தலைக்கும் முடிச்சுப் போடுகிறீர்கள். நடந்த தவறுகளெல்லாவற்றிற்கும் காரனம் விக்னேஸ்வரமூர்த்திதான் என்று நான் சொல்கிறேன். இன்று அவருக்கும் சொல்லாமலே பெரும் உதவிகளை அவருக்காகச் செய்த கலா ஆசிரியையின் பிரிவுபசார விழா கள்ளத் திருமணம் செய்வது போலச் செய்து முடித்தாயிற்று.

இதிலிருந்து என்ன தெரிகிறது. தற்போதய அதிபர் தான் நினைத்ததைத் தான் செய்வார். அவரைக் கேட்க யாராலும் முடியாது என்று தெரியவில்லையா..? நீங்களும் விக்னேஸ்வரமூர்த்தியைப் போல எதுவும் விளங்காதவர் மாதிரி இருக்கிறீர்கள்'' என்றார் வேலாயுதபிள்ளை.

தணிகாசலம் அப்போதும் எதுவும் பேசவில்லை. ''வேலாயுதபிள்ளை கூறுவது சரி போலத் தோன்றியது'' இருப்பினும் விக்னேஸ்வரமூர்த்தியுடன் மிகவும் நெருக்கமாகவும், அன்னியோன்னியமாகவும், அன்பாகவும் பழகியதால் அவரில் குற்றம் காணத் தணிகாசலத்தால் முடியவில்லை.

**827.சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம் தீங்கு குறித்தமை யான்.**

வில்லினது வணக்கம் பணிவானது என்றாலும் அது தீங்கு செய்வதே ஆகும். அது போலப் பகைவனின் பணிவான வார்த்தைகளும் தீங்கைச் செய்யுமாகையால் அவ்வார்த்தைகளை நம்பக் கூடாது.

## மறைந்திருக்கும்

''நீங்கள் விக்னேஸ்வரமூர்ததியின் வீட்டிலிருந்த போதும் என்னால் அங்கு வர முடியவில்லை. ஏனென்றால் இப்போது விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு அடிக்கடி

தனபாலனும் ஜெயபாலனும் சென்று வருகிறார்கள். கெட்டவர்கள் தாம் திருந்தி விட்டதாகக் கூறினால் உடனே நம்பிவிடுவதா..? அவர்கள் திருந்த மாட்டார்கள். முன்பு தனபாலனைக் கொண்டு தீய செயல்களைச் சிவசுந்தரமூர்த்தி செய்தவர். அதனால் கோயிலிலும் சனசமூக நிலையத்திலும் இருவரும் எத்தனை நாட்கள் பிரச்சினைப் பட்டவை. ஆனால் இப்ப சிவசுந்தரமூர்த்தியும் தனபாலனும் நண்பர்களாகி விட்டனர். அதனால் சிவசுந்தரமூர்த்தி இப்போ விக்னேஸ்வர மூர்த்தியின் வீட்டுக்கு அடிக்கடி போய் வருகிறார்…" என்று வேலாயுதபிள்ளை சொல்லிக் கொண்டிருக்கும் போது ஆத்திரத்துடன் குறுக்கிட்டார் தணிகாசலம்; "நீ எதிலும் நுணுக்கம் பார்ப்பாய். ஒருவரின் வீட்டிற்கு யாரும் போகலாம். விக்னேஸ்வரமூர்த்தி கல்விப் பணிப்பாளர். அதனால் சிவசுந்தரமூர்த்தி ஏதாவது அலுவலாகச் சென்றிருப்பார்…" தணிகாசலம் கதைதத்துக்கொண்டிருக்கும் போது வேலாயுதபிள்ளை சொன்னார்; "முன்பு விக்னேஸ்வரமூர்த்தி அதிபராக இருந்த காலத்தில் சிவசுந்தரமூர்த்தி அவரின் வீட்டுக்குச் செல்வதில்லை. அத்துடன் நிர்வாக விடயமானால் அலுவலகத்திற்கு வரவேண்டும் என்று சொல்பவர். இப்போ வீட்டிற்குச் செல்லலமா..? அத்துடன் தனபாலனுக்கு அங்கு என்ன வேலை…? முன்பு அவர் தனபாலனை அழைப்பதில்லை."

தணிகாசலத்தால் பதில் கூறமுடியவில்லை. வேலாயுதபிள்ளை சிரித்தார்; பலமாகச் சிரித்தார்; "இவை யாவற்றையும் நான் விக்னேஸ்வரமூர்த்தியின் மேலிருக்கின்ற கோபத்தால் சொல்லவில்லை. அவர் மீதிருக்கின்ற அன்பால்

சொல்கிறேன். அவருக்கு நல்லவர் யார்? தீயவர்கள் யார் என்று தெரியாது. அதனால் தான் அதிபர் பதவியைத் தரமில்லாதவரிடங் கொடுத்து விட்டுச் செருப்பால் அடி வாங்குகிறார். இப்ப தனபாலனுக்காகக் கதைக்கிறார். பொல்லுக் கொடுத்து அடிவாங்கு பவர்களை நாம் என்ன செய்ய முடியும்? தீய எண்ணமுடையவர்கள் வணங்கித் தொழும் கையினுள்ளும் கொலைக்கருவி மறைந்திருக்கும். அத்தகையவர்கள் அழுத கண்ணீரும் அத்தகையது தான். இதை நீங்கள் மறுக்கப் போகிறீர்களா…?" என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

"நீ இப்பொழுது பெரும்பண்டிதர் ஆகிவிட்டாய். அத்துடன் தனபாலனுக்கு அடித்தபின் சண்டியனுமாகி விட்டாய்" என்று சிரித்தார் தணிகாசலம்.

"எனக்கு யாராவது ஒருவரின் போக்கோ, கதையோ பிடிக்காவிட்டால் அதை நேரில் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சொல்லி விடுவேன். அது உங்களுக்குத் தெரியும். சென்ற வாரம் வித்தியாவின் வீட்டுக்குச் சென்றேன். அவளது தாய் வீட்டில் இல்லை என்பதைத் தெரிந்த பின்புதான் போனேன்".

"போய்…" தணிகாசலம் அவரசப்பட்டார்.

"வித்தியாவுடன் ஆறுதலாக எல்லாவற்றையும் கதைத்தனான். "நீ இன்னொருவனுக்கு நிட்சயிகக்ப்பட்டவள் என்பதை வலியுறுத்தினனான். அத்துடன் கஜேந்திரன்

தனபாலனுடன் சேர்ந்து திரிவதைப் பற்றியும் கூறினனான்''.

''அதற்கு அவள் என்ன சொன்னவள்'' தணிகாசலம் கேட்டார்.

''அவள் என்னத்தைச் சொல்வது. உண்மையான நிலையை எடுத்துச் சொல்லி விட்டு வந்தேன். அவள் படித்தவள், யோசித்துச் செய்யட்டும்.'' என்றார் வேலாயுதபிள்ளை.

''கஜேந்திரன் நல்லவன்; கெட்டிக்காரன்; படிக்கக்கூடியவன். வித்தியாவின் தொடர்பால் கல்வி கெட்டாலும் கெட்டுவிடும். அதை நினைக்க எனக்குப் பயமாக உள்ளது.'' என்றார் தணிகாசலம்.

''எல்லாவற்றிற்கும் நாங்கள்தான் கவலைப்படுவது; அக்கறைப்படுவது. சம்பந்தப் பட்டவர்கள் தாம் செய்வது பிழையென்று சிந்திப்பதில்லை. இது அழிவுக்குத்தான் வழிவகுக்கும்.'' என்றார் வேலாயுதபிள்ளை .

''விக்னேஸ்வரமூர்த்தியும் கஜேந்திரனை நினைத்துக் கவலைப்பட்டவர். எம்மை அவன் மதிப்பவன். அதனால் நாம் அவனுடன் கதைக் கமுடியாது. அத்துடன் எமது சொல்லை அவன் கேட்காவிட்டால் எமக்குத்தான் அவமானம். அதனால் பரமேஸ்வரனுக்குச் சொல்லி அவனுடன் கதைக்குமாறு சொல்லப்போகிறேன்'' என்றார் தணிகாசலம்.

“அதை விரைவாகச் செய்யுங்கள்” என்றார் வேலாயுதபிள்ளை.

**828. தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.**

பகைவர் வணங்கித் தொழும் கையினுள் கொலைக் கருவியை மறைத்து வைத்திருப்பர். பகைவர் அழுத கண்ணீரும் அத்தகையதே.

**அதுபோல**

கணபதி மத்திய மகா வித்தியாலய அதிபர் எப்படி நடக்கிறாரோ அப்படி நாமும் நடந்து கொள்ளல் வெண்டும். வெளியே சிறந்த நண்பரைப் போல நடந்து கொண்டு உள்ளத்தில் இகழ்வாரை, நாமும் அதுபோலவே சிரித்துப் பேசி அவர்களின் தொடர்பு அழியும் வகையில் நடந்து கொள்ளல் வேண்டும். அப்படி நடக்காவிடால் நாம் மடையர்கள்; இல்லாவிட்டால் அறிவில்லாதவர்கள் என்று அதிபர் நினைப்பார்.” என்றார் தணிகாசலம்.

“நான் அப்படித்தான் நடந்து கொள்கிறேன். நீங்கள் தான் நான் அப்படி நடப்பது தவறு என்று சுட்டிக் காட்டுவீர்கள். முள்ளை முள்ளால் தான் எடுத்தல் வெண்டும். கனகலிங்கம் என்னைக் காணும் வேளைகளில்; “நீங்கள்தான் விக்னேஸ்வரமூர்த்தி கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்த காலத்தில் அவருக்குப் பெரும் உதவிகள் செய்தனிங்கள். நீங்களில்லா விட்டால் அவர் இவ்வளவு சிறப்பாகப் பாடசாலையை நடத்தியிருக்க முடியாது. அதிபரால்

தனித்து நின்று பாடசாலையை நடத்த முடியுமா? நீங்கள் முன்பு போலப் பாடசாலைக்கு உதவிகள் செய்ய வேண்டும்'' என்றார். ஆனால் அவர் தனபாலசிங்கத்திற்குக் கூறினவராம்; ''வேலாயுதமும் தணிகாசலமும் தான் விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவைக் கெடுத்தது. அவரும் அவர்கள் இருவரையும் தூக்கிப் பிடித்தபடி. நான் இவையளை அண்ட மாட்டன். எனக்குப் போதிய திறமை இருக்கு'' என்றவராம். அது எனக்குத் தெரியும். அதனால் நான் கனகலிங்கத்திற்குச் சொன்னேன்; ''விக்னேஸ்வர மூர்த்தியோடு பல ஆண்டுகள் பணியாற்றிய நீங்கள் மிகவும் திறமைசாலி. உங்களுக்கேன் ஆட்கள். நீங்கள் தனியப் பாடசாலையை நடத்துவீர்கள். முன்பைவிட இப்போ மிகமிகச் சிறப்பாகப் பாடசாலை நடைபெறுகிறது'' என்றேன். அவருக்குச் சரியான சந்தோசம். பிறகு அவரது கையாளான சுஜாதா ஆசிரியைக் கண்டனான். கனகலிங்கம் நான் கூறியதை அவாவுக்குக் கூறியுள்ளார் என்பதை அவாவின் சிரிப்பிலேயே நான் கண்டு கொண்டேன். அதனால் சொன்னேன்; ''கனகலிங்கத்திற்கு என்ன தகுதி இருக்கிறது. விக்னேஸ்வரமூர்த்தி ஆராயாமல் அவரது நடிப்பைக் கண்டு மயங்கி பாடசாலைப் பொறுப்பை அவரிடம் கொடுத்து விட்டுக் கல்விப்பணிப்பாளரிடம் அவரைப் பற்றிப் புகழ்ந்து சொல்லி அதிபராக்கினவர். இவர் பாடசாலையை நடத்த மாட்டார் என்று எனக்குத் தெரியும். சனத்திற்கும் தெரியும். அரைவாசிச் சனம் விக்னேஸ்வரமூர்த்திக்குப் பயந்தும் மிச்சச் சனம் மரியாதைக்காகவும் பேசாமல் இருக்க்கிறது. அது தெரியாமல் கனகலிங்கம் ஆடுறார். விக்னேஸ்வரமூர்த்தி சனத்திற்கும் அலுவலக

ஊழியர்களுக்கும் கனகலிங்கம் திறமான நிர்வாகி எனச் சொல்லித் திரிகிறார். அதை விடக் கனகலிங்கத் தின்ரை தாய்; “என்ரை மகன் இல்லாவிட்டால் விக்னேஸ்வர மூர்த்தி பாடசாலையை இயக்க மாட்டார்” என்று சொல்லுறவா. இதெல்லாம் விக்னேஸ்வரமூர்த்திக்குத் தெரியாது. யாராவது சொன்னாலும் அதை அவர் நம்பமாட்டார். இப்ப எல்லாவற்றையும் உணர்கிறார். இப்பதான் அவருக்கச் சுடலை ஞானம் வந்திருக்கு” என்று கூறினேன். சுஜாத்தாவின் முகம் கறுத்துப் போச்சு. அவா பேசாமல் சென்று விட்டா. மறுநாள் கனகலிங்கத்தை மகா கணபதி ஆலயத்தில் கண்டனான். அவர் தெரியாதது போல நின்றார். நான் அவரின் அருகில் சென்று கதைத்தேன். அவர் நான் கதைத்தது கேளாததைப் போலச் சென்று விட்டார். இவைக்குச் சூடாகச் சொல்லாவிடில் ரோசம் வராது. தொடர்ந்து எம்மை இழிவு படுத்திக் கொண்டே இருப்பார்கள்.” என்றார் வேலாயுதபிள்ளை.

“நீ சொல்வதும் சரிதான். நாம் பேசாமல் இருந்தால் நல்லவர்கள், தாம் தீயவற்றைச் செய்த போதும் அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். அதனால் மேற்கொண்டு தீமை செய்யக்கூடாது என்று நினைப்பார்கள்”. ஆனால் தீயவர்கள் எமக்குத் தீமை செய்யும் போது நாம் பொறுத்திருந்தால் எம்மைக் கேவலப்படுத்தி விடுவார்கள். அதை உணராமல் நீ கூடாமல் கதைக்கிறாய் என்று தான் நான் நினைத்துக் கவலைப்படுவேன். தீயவர்களுடன், அவர்கள் எம்முடன் நடந்து கொள்வதைப் போலவே நாமும் நடக்க வேண்டும் என்று எண்ணுவேனே தவிர

அப்படி என்னால் நடந்து கொள்ள முடியவில்லை'' என்றார் தணிகாசலம்.

**829. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து நடபினுள் சாப்புல்லல் பாற்று.**

வெளியே சிறந்த நண்பரைப் போல நடித்துக் கொண்டு உள்ளத்தில் இகழ்கின்றவரை, நாமும் அது போலவே வெளியே சிரித்துப் பேசி அவர்களின் தொடர்பை அறுக்கும் வகையில் நடந்து கொள்ளல் வேண்டும்.

## விட்டுவிடு

தனபாலன் வேலாயுதபிள்ளையைத் தேடி அவரின் வீட்டுக்குச் சென்றான். அவர் அங்கே இருக்கவில்லை. பின் அவன் தணிகாசலத்தைத் தேடி அவரது வீட்டக்கும் சென்றான். அப்போது அவரும் அங்கு இருக்கவில்லை. அதனால் அவன் மகா கணபதி ஆலயத்திற்கு வந்தான்.

மகா கணபதி ஆலயத்தில் வேலாயுத பிள்ளையும் தணிகாசலமும் இருந்தனர்; "உங்கள் இரண்டு பேரையும் தேடி நான் உங்களது வீடுகளுக்குச் சென்று வருகிறேன்.'' என்றான்.

தணிகாசலம் அவனைப் பார்த்தாரே தவிர அவனுடன் பேசவில்லை. வேலாயுதபிள்ளை எதுவும் பேசாது கோயிலைத் துப்பரவு செய்து கொண்டிருந்தார்.

“நாளைக்கு அண்ணையின் அறுபதாவது பிறந்த தினம். மிகவும் விமர்சையாகக் கொண்டாட விரும்புகிறார். இவ்வளவு காலமும் பிள்ளை குட்டிகளோடை மிகவும் கோலாகலாமாக வெளிநாட்டில் கொண்டாடியவர். இந்த முறை ஊரில் இருப்பதால் ஊர் மக்களுடனும் இனத்தவர்களுடனும் நண்பர்களுடனும் சேர்ந்து கொண்டாட விரும்புகிறார். உங்களைக் கட்டாயம் வரச் சொன்னவர். இரண்டு பேருக்கும் அழைப்பிதழ்கள் வீட்டில் கொடுத்திருக்கிறன். உங்களைப் போன்ற பெரிய மனிதர்களை நேரிற் சென்று அழைக்க வேண்டும் என்று அண்ணை சொன்னவர். அதனால் தான் உங்களைத் தேடி வந்தனான். சில சமயம் நேரம் கிடைத்தால் அண்ணை உங்களது வீட்டுக்கு வந்து அழைப்பார். கொடுக்கல் வாங்கல் ஒன்றுமில்லை. பரிசுப் பொருட்கள் ஒன்றும் கொண்டு வரவேண்டாம் என்று அழைப்பதழிலேயே அடித்திருக்கிறோம். கட்டாயம் வாருங்கோ” என்றான் தனபாலன்.

“நாங்கள் இருவரும் கட்டாயம் வருவம். கொண்டாட்டமென்றால் ஆயிரக்கணக்கான வேலைகள் இருக்கும். ஜெயபாலனை வீட்டை வரவேண்டாமென்று சொல். இப்ப நாம் நண்பர்கள். இப்போ நீ திருந்தி எல்லோரையும் மதிக்கிறாய். அதனால்தான் உனது திருவிழாவின் போது பந்தியில் இருந்து சாப்பிட்டனாங்கள்” என்றார் வேலாயுதபிள்ளை.

வேலாயுதபிள்ளை அப்படிச் சொல்வாரென தணிகாசலம்எதிர்பார்க்கவில்லை. எனினும் வேலாயுதபிள்ளை ஏதோ ஒரு

காரணத்திற்காகத்தான் அப்படிச் சொல்கிறார் என நினைத்துப் பேசாமல் இருந்தார்.

‘‘என்ன தணிகாசலமண்ணை பேசாமலிருக்கிறயள்’’ என்றான் தனபாலன்.

‘‘வேலாயுதம் என்னையும் சேர்த்துத்தானே சொன்னவவர். நான் வாறன் நீ போ’’ என்றார் தணிகாசலம்.

தனபாலன் மிகவும் மகிழ்வுடன் சென்றுவிட்டான்; ‘‘என்ன தனபாலன் மீது திடீரென்று அக்கறை வந்து விட்டது.’’ சிரித்தார் தணிகாசலம்.

‘‘எனக்கு அவனின் மீது அக்கறையா…? எனக்கு வாற ஆத்திரத்திற்கு இன்னுமொருமுறை இவனுக்கு அடிக்க வேண்டும்’’ என்று கோபத்துடன் கூறியவர் சிறிது நேரம் பொறுத்துச் சொன்னார்; ‘‘தணி, பகைவர்கள் நண்பர்களாகும் காலம் வரும் போது முகத்தளவில் நட்புக் கொண்டு மனத்தளவில் அவர்களது நட்பை நீக்கி வாய்ப்பு நேரும் போது, அதையும் விட்டுவிட வேண்டும்’’ என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதற்காகத்தான் ஜெயபாலனின் பிறந்ததின விழாவுக்கு நாம் வருவோம் என்று மனமகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டு கூறினேன். ஆனால் எனது மனதில் அவன் மீதுள்ள ஆத்திரம் இருக்கிறது. தீயவர்கள் மீது எப்படி அன்பு கொள்ள முடியும். அவர்கள் மீது நாம் அன்பு கொண்டாலும் அவர்கள் அதைத் தவறாகத் தான் புரிந்து கொள்வார்கள். அதனால் தான் பிறந்த தின விழாவுக்கு வருவதாகச் சொன்னேன். இப்போது

இவர்களது நட்பைத் துண்டிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நாளைக்கு ஜெயபாலனின் பிறந்த தின விழாவுக்கு நாமிருவரும செல்லாவிட்டால் அவர்களோடு கொண்ட நட்பு விடுபட்டுவிடும்.'' என்றார் வேலாயுதபிள்ளை.

மறுநாள் நடைபெற்ற ஜெயபாலனின் பிறந்தநாள் விழாவுக்குத் தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் விக்னேஸ்வரமூர்த்தியும் செல்லவில்லை. ஜெயபாலனும் தனபாலனும் அவர்கள் கட்டாயம் வருவார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அவர்கள் மூவரும் வராதது ஜெயபாலனுக்கு மிகுந்த துக்கத்தைக் கொடுத்தது. மிகவும் கோலாகலமாக அவ்விழா நடைபெற்றாலும் அதில் சிறப்பில்லாதது போல ஜெய பாலனுக்குத் தோன்றியது.

## 830. பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு அகம்நட்பு ஒரீஇ விடல்.

பகைவர் நண்பராகும் காலம் வந்தால் முகத்தளவில் நட்புக் கொண்டு, மனத்தளவில் நட்புக் கொள்ளாதிருத்தல் வேண்டும். சந்தர்ப்பம் வரும் போது கொண்ட முகத்தளவு நட்பையும் விட்டு விட வேண்டும்.